# வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை

**Federation of Tamil Sangams of North America (FeTNA)**

(A Registered, Non-Profit, Tax exempt 501(C)(3) Organization)

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
கேரொலைனா தமிழ்ச் சங்கமும்
இணைந்து நடத்தும்

# பேரவையின்
# 38ஆவது ஆண்டு தமிழ் விழா

**JULY 03-05 | 2025**



தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தோழர் இரா. நல்லகண்ணு
நூற்றாண்டு விழா

**Raleigh Convention Center - 500 S Salisbury St, Raleigh, NC 27601**

**தமிழால் இணைவோம்! தமிழராய் வாழ்வோம்!**

## A man with a vision...

# Somerset
Pharma LLC



## A company with a mission.

Founded in 2013 with a vision to develop and commercialize generic injectable and ophthalmic products in the US.

In just over a decade, the company has established a significant presence in the retail and hospital space in the US and become a reliable supplier in the pharmaceutical industry.

Our goal is to help in changing the patient's life for the better by providing products and care that make healthcare more affordable and accessible.

**Dr. Veerappan Subramanian**
CEO & Chairman - Somerset Pharma LLC

Somerset Pharma specializes in sterile manufacturing, primarily focused on injectables in vials and ampules and ophthalmics in bottles. Our manufacturing facility in India caters to US and has been approved by FDA for supply to United States since the beginning.

We continue to expand our infrastructure with additional manufacturing and research and development facilities in India and US enabling us to introduce additional dosage forms. The company will continue to build on its portfolio and introduce further products in the area of solids, topicals, and inhalation apart from ophthalmics and injectables.







www.somersetpharma.com
For more information contact customerservice@somersetpharma.com

Somerset
Pharma LLC

OPHTHALMICS | INJECTABLES

# பேரவைத் தமிழ்விழா
# 2025

உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!
தமிழால் இணைந்தோம்! வாழியவே!!



## வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை




# PROUD TO BE ONE OF THE LARGEST CATERERS IN THE EAST COAST

*Trusted by Families.*
*Loved by Foodies.*
*Chosen by Event Planners.*

LET'S PLAN YOUR NEXT EVENT!

919-213-0676

Lime & Lemon

INDIAN GRILL & BAR

VOTED #1

INDIAN RESTAURANT IN TRIANGLE, NC.



## Discover Our New Event Space

THE L2 VENUE

BOOK NOW >

Serving Raleigh, Durham, Chapel Hill, Jacksonville.

***COMING SOON TO APEX & ROLESVILLE, NC***

**WWW.LNLRESTAURANT.COM**

FOLLOW US

DEBORAH K. ROSS
2nd District, North Carolina

COMMITTEE ON THE JUDICIARY

COMMITTEE ON SCIENCE, SPACE AND TECHNOLOGY

ETHICS COMMITTEE

**Congress of the United States**
**House of Representatives**
**Washington, DC 20515–3302**

1221 Longworth House Office Building
Washington, DC 20515
(202) 225-3032

300 Fayetteville Street
P.O. Box 1548
Raleigh, NC 27602
(919) 334-0840

June 13, 2025

Dear Tamil Sangams of North America:

I am honored to welcome you to the 38th Annual Convention of the Federation of Tamil Sangams of North America (FeTNA). I sincerely hope that you have a meaningful convention and feel welcome in North Carolina's Second Congressional District.

FeTNA has played a pivotal role in celebrating and protecting Tamil heritage throughout North America. This annual convention stands as a vibrant reflection of the strength, unity, and enduring spirit of the Tamil American community.

Last Congress, I was proud to introduce H. Res. 427, a bipartisan resolution recognizing 14 years since the end of the 26-year armed conflict between the government of Sri Lanka and Tamil independence organizations. This resolution served to honor those killed in the conflict, advocate for justice and accountability, urge international action to hold war criminals accountable for their actions, and ensure the U.S. government to work towards achieving a just, sustainable and peaceful future for all people in Sri Lanka.

I strongly support Tamil demands for justice, and I continue to urge the current administration to advance accountability and redress for the Tamil people.

Thank you for accepting my letter and my best wishes for a productive convention. Please know that I will continue to forcefully advocate for the Tamil community in Congress.

Very truly yours,

Deborah K. Ross
Member of Congress

Raleigh



**Janet Cowell**
**Mayor of Raleigh**

July 3, 2025

Dear Attendees of the 38th Annual FeTNA Convention,

On behalf of the City of Raleigh, it is my distinct honor and pleasure to welcome the Federation of Tamil Sangams of North America (FeTNA) and the Tamil Sangam of Carolina to our city for the 38th Annual FeTNA Convention.

We are proud to host this vibrant and meaningful gathering that brings together Tamil Americans from across the region to celebrate a rich and enduring cultural heritage. Raleigh is a city that deeply values diversity and cultural connections, and FeTNA exemplifies those very ideals.

I commend FeTNA and the Tamil Sangam of Carolina for their dedication to preserving and promoting the Tamil language, traditions, and contributions. Your continued efforts enrich the social and cultural fabric of our city, state, and nation.

To all attendees, performers, and organizers, I extend my warmest greetings and best wishes for a joyful, inspiring, and successful convention. May your time in Raleigh be filled with fellowship, celebration, and lasting memories.

Sincerely,

Janet Cowell
Mayor

Municipal Building | 222 West Hargett Street | Raleigh, North Carolina 27601
One Exchange Plaza | 1 Exchange Plaza | Raleigh, North Carolina 27601
Mailing address: City of Raleigh | Post Office Box 590 | Raleigh, North Carolina 27602-0590

**HONORABLE WILEY NICKEL**
MEMBER OF CONGRESS
2023-2025



May 21, 2025

Dear Tamil Sangams of North America:

It's my distinct honor to welcome you to the 38th Annual Federation of Tamil Sangams of North America (FeTNA) Convention, hosted this year in Raleigh, North Carolina.

Since its founding, FeTNA has been a powerful force in preserving and promoting Tamil culture, language, and heritage across North America. This annual gathering is a testament to the strength and vibrancy of the Tamil American community.

In Congress, I was proud to co-chair the Ethnic and Religious Freedom in Sri Lanka Caucus and to introduce a resolution that recognizes the genocide in Sri Lanka and affirms the right of Tamils to self-determination through a democratic process (H.Res.1230). I've been proud to stand alongside you in the fight for justice and human rights. The Tamil people's resilience in the face of adversity continues to inspire me, and your advocacy has made a lasting impact in our halls of government.

To the thousands of Tamil Americans from 67 Tamil Sangams across North America joining this year's convention: thank you for your continued leadership, cultural contributions, and unwavering commitment to justice and peace. May this year's gathering bring joy, reflection, and renewed purpose.

With warmest wishes for a meaningful and successful convention,

Wiley Nickel
Member of Congress
2023-2025

विनय क्वात्रा
Vinay Kwatra



सत्यमेव जयते

भारत का राजदूत
AMBASSADOR OF INDIA
2107 Massachusetts Ave. N.W.
Washington, D.C. 20008

**June 6, 2025**

## Message

I am happy to learn that the Federation of Tamil Sangams of North America (FeTNA) is organizing its 38th Annual Convention on 3-5 July, 2025 in Raleigh, North Carolina, and extend my warm greetings to the organizers and to all the participants of this Convention.

FeTNA's efforts to preserve and promote Tamil language and culture across North America reflect the strength and pride of the Tamil diaspora. Further, the Tamil community continues to enrich the cultural fabric of the United States through education, dialogue, and civic engagement.

Tamil, one of the world's oldest languages, is a cornerstone of India's heritage. By fostering cultural exchange and intergenerational connections, FeTNA plays a vital role in keeping this legacy alive.

I wish FeTNA all success in organizing its 38th Convention, and in all their future endeavours.

**(Vinay Kwatra)**

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA

*Gary Anandasangaree*
Member of Parliament
Scarborough—Guildwood—Rouge Park



July 3, 2025

**Greetings from The Honourable Gary Anandasangaree**

**Member of Parliament for Scarborough—Guildwood—Rouge Park**

I extend my warmest greetings to all those attending the 38th Annual Convention of the Federation of Tamil Sangams of North America in Raleigh.

Since its inception in 1987, the federation has played a pivotal role in fostering the Tamil language and empowering younger generations to stay connected to their ancestral roots. This annual gathering serves as a vibrant forum where Tamils from across the continent come together to celebrate their shared identity, exchange ideas, and strengthen community ties. Your dedication to preserving and promoting Tamil culture is both inspiring and impactful.

My heartfelt thanks to the Executive Team, organizers, and volunteers for your commitment in making this convention a memorable and meaningful celebration.

Yours very truly,

The Honourable Gary Anandasangaree
*Member of Parliament*
*Scarborough—Guildwood—Rouge Park*


Ottawa
Room 733, Confederation Building
Ottawa, Ontario, K1A 0A6
613-992-1351
Gary.Anand@parl.gc.ca

Constituency Office
3600 Ellesmere Road-Unit 3
Scarborough, Ontario, M1C 4Y8
416-283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca

**மு.க. ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

## வாழ்த்துச் செய்தி

உலகில் பேசப்படும் சுமார் 6500 மொழிகளில், காலத்தால் அழியாமல் மென்மேலும் மெருகேற்றிக் கொண்டு, தொன்மையும் இளமையும் மாறாமல் உலகெங்கும் புகழுற வீறுநடை பயிலும் மொழி நம் தாய்மொழியாம் செந்தமிழ் மொழி. தொன்மையான பாரம்பரியத்துக்கும் கலாச்சாராத்துக்கும் சொந்தக்காரர்கள் நம் தமிழர்கள்.

கல்வி, வணிகம் போன்ற பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்த தமிழர்கள், உயர்தனிச் செம்மொழியான தமிழையும் உயர்ந்த நாகரிகங்களில் ஒன்றான தமிழ் நாகரிக–பண்பாட்டையும் மறவாமல் பின்பற்றி வாழ்ந்து வருவதன் மூலம் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்த்து வருகின்றனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு தான் தாய்வீடு. அவர்கள் மீது அன்பு செலுத்துவதுடன், அரவணைப்பதும் பாதுகாப்பதும் தமிழ்நாட்டின் கடமையாகும். தமிழர்கள் உலகில் எங்கிருந்தாலும் அவர்கள் நலம்பல பெற்று வளத்தோடு வாழ்ந்திடமென்பதே தமிழ்நாட்டு அரசின் அளப்பரிய அவா. அவர்களது பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம், கடந்த 2011–ம் ஆண்டு மார்ச் 1–ம் தேதி திமுக அரசால் இயற்றப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் ஜனவரி 12–ம் தேதி புலம் பெயர்ந்த உலகத் தமிழர் நாளாக அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும், அவர்களின் நலன் பேண, **புலம்பெயர் தமிழர் நலவாரியம்** அமைக்கப்பட்டுள்ளது. என்றென்றும் தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விளக்காகவும் உற்ற தோழனாகவும் எம் திராவிட மாடல் அரசு விளங்கி வருகிறது.

தமிழக அரசின் இம்முயற்சிகளுக்கெல்லாம் உறுதுணையாக இருந்து இணைந்து செயற்பட்டு, தமிழுக்கும் தமிழர் நலனுக்கும் தொடர்ந்து பணியாற்றி வருவதும், வட அமெரிக்கத் தமிழர்களின் முகமாக இருந்து வருவதுமான வட அமெரிக்கத்



தமிழ்ச்சங்கப் பேரவைக்கும், பேரவையின் உறுப்பு அமைப்புகளுக்கும் தமிழ்நாட்டின் சார்பாகவும், உலகெங்கும் வாழும் தமிழர்களின் சார்பாகவும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38–ஆவது தமிழ் விழா, கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து, வட கேரொலைனா மாகாணத்தின் இராலே நகரில், எதிர்வரும் சூலை 3, 4, 5 ஆகிய நாட்களில், ‘‘தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்’’ எனும் கருப்பொருளோடு, தவத்திரு குன்றக்குடி அடிகளார், தோழர் இரா.நல்லகண்ணு ஆகியோரின் நூற்றாண்டு விழாவாகவும் நடைபெறவுள்ளதை எண்ணி மிகவும் அக மகிழ்கின்றேன். விழா சிறக்கவும், பேரவையின் பணிகள் மென்மேலும் பெருகிடவும் வாழ்த்துகள் உரித்தாகுக!

தமிழ் என்றென்றும் வாழும்! தமிழ் வெல்லும்! தமிழர் வாழ்வு சிறப்புறும்!

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)

**ந. ரங்கசாமி**
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி : 22.5.2025

## வாழ்த்துச் செய்தி

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையானது (FeTNA), கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து பேரவையின் 38ஆவது ஆண்டு விழாவை, வரும் ஜூலை மாதம் 3, 4, 5 ஆகிய மூன்று நாட்களுக்கு கேரொலைனா மாகாணத்தில் உள்ள இராலே நகரில் நடத்த உள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உலகின் பழமையான மொழி, பண்பட்ட மொழி, நம் பைந்தமிழ்மொழி ஆகும். உலகில் தோன்றிய பல மொழிகள் காலவெள்ளத்தில் காணாமல் போய்விட்ட நிலையில், அறுபடாத இலக்கிய மரபோடு, சீரிளமைத் திறம் குறையாமல் தொடர்ந்து உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மொழியென்றால் அது நம் தாய்மொழியான தமிழ்மொழிதான்.

தொன்மை, கலை, இலக்கியம், பண்பாட்டுத் தன்மை, தனித்து இயங்கும் ஆற்றல், இலக்கிய-இலக்கண வளம், உயர் சிந்தனை, மொழிக் கோட்பாடு ஆகியவற்றைக் கொண்டு விளங்கும் உயர்தனிச் செம்மொழியான தமிழின் அருமை பெருமைகளை உலகிற்கு எடுத்துக்கூறுவதற்காகவே, "வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை" என்னும் தமிழர் அமைப்பைத் தொடங்கி, 37 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு விழாக்கள், மாநாடுகளை, தொடர்ந்து நடத்தி வரும் அமெரிக்கவாழ் தமிழர்களின் பணி பெரிதும் பாராட்டுக்குரியது.

இந்த 38ஆவது ஆண்டு விழாவில், தமிழ், தமிழர் பண்பாடு, கலை, இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளும் தமிழ் தொழில்முனைவோர் மாநாடு,சர்வதேசத் தமிழ் திரைப்பட விழா, விளையாட்டுத் திருவிழா உள்ளிட்ட நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருப்பது மிகுந்த சிறப்புக்குரியது.

அனைவரும் பயன்பெறும் வகையில் இவ்விழா சிறப்பாக அமையவும், விழாவையொட்டி வெளியிடப்பட உள்ள மாநாட்டு மலர் பொலிவு பெறவும், எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

✆ அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலை நகலி : 0413 - 2333135
இல்லம் : 2271232

**க. லட்சுமிநாராயணன், B.Sc., B.L.**
அமைச்சர் பொதுப்பணி,
சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமான போக்குவரத்து, மீன்வளம்
மற்றும் மீனவர் நலம், சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும்
எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறைகள்
புதுச்சேரி அரசு

அலு. : 0413-2335279
2232254
வீடு : 0413-2338181
2220666
கைபேசி : 94432 38181
எண் 95, பெருமாள் கோயில் வீதி
புதுச்சேரி-605 001
மின்னஞ்சல் : lakshminarayananpdy@gmail.com

03.05.2025
தேதி : ..........................

## வாழ்த்துரை

வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் (FeTNA), கேரொலைனா தமிழ்ச்சங்கமும் இணைந்து பேரவையின் 38ஆவது ஆண்டுவிழாவை நடத்துவது கண்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இவ்விழாவில் தமிழினத்தின் பழம் பெருமையையும், அதன் பண்பாட்டுப் பரிமாணங்களையும், தற்கால நாகரிக வளர்ச்சியின் தன்மைகளையும் பறைசாற்றும் விதமாக நடத்தவிருக்கும் இத்திருவிழா மிகச் சிறப்பாக நடந்தேற வேண்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

தமிழ் இனத்தின் தேரையும், சிறப்பையும், மறவாமல் நினைவு கூறுவதோடு அதை இன்றைய இளைய தலைமுறைக்கும் எடுத்துரைக்கும் விதமாக, திரைப்பட விழா, கலை விழா, தொழில் முனைவோர் விழா என்று பகுத்துப் பகுத்துக் கொண்டாடுவதை எண்ணி பெருமிதம் கொள்கிறேன். திரை கடல் ஓடியும் திரவியம் தேடும் முயற்சியின் ஊடே, அயல் மண்ணில் உழன்றாலும், தாய் மண்ணின் தொழில் வளம் சிறக்க வேண்டும் என்று, தொழில் முனைவோர்களை ஒருங்கிணைத்து, தமிழ் நிலத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் பெருந்தன்மை பாராட்டுக்குரியது. திறமைக்கு அங்கீகாரம் தரும் விதமாகக் கலை வல்லாருக்கு விருதுகளும், இயல், இசை, நாடகம், இலக்கியப் போட்டிகளை நடத்தி வளரும் தலைமுறைக்குத் தமிழ் உணர்வு மங்காமல் காக்கும் முயற்சி போற்றுதலுக்குரியது.

இப்பேரவையின் செயல்பாடுகள் எதிர்காலத்திலும், மேன்மேலும் சிறந்து விளங்கிடவும், விழா இனிதே நடந்தேறவும் மனமார வாழ்த்துகிறேன்.

பாராட்டுக்கள், வாழ்த்துக்கள் !!

3/5/25

(க. லட்சுமிநாராயணன்)
பொதுப்பணித்துறை அமைச்சர்

**VIJAY THANIGASALAM**
MPP - Scarborough-Rouge Park

## Greetings from MPP Vijay Thanigasalam

As the Member of Provincial Parliament for Scarborough–Rouge Park, it is my honour to extend a warm welcome to everyone attending the 38th Convention of the Federation of Tamil Sangams of North America in Raleigh.

This remarkable convention serves as a powerful gathering for Tamils from across North America and around the world to come together in celebration of our vibrant culture, language, and traditions.

The Federation has played a vital role in uniting communities and inspiring the next generation to take pride in their heritage. Through your dedication to preserving the Tamil language and promoting Tamil heritage you continue to create meaningful opportunities for education, collaboration, and leadership development within the Tamil diaspora.

I offer my heartfelt congratulations to the organizers for their tireless efforts in bringing this event to life. Wishing you all a successful and memorable convention!

Yours truly,



Hon. Vijay Thanigasalam
Member of Provincial Parliament
Scarborough-Rouge Park



## பேரவையின் 38ஆவது தமிழ் விழா சிறப்பாக நடைபெற

**பேரவைத் தலைவர் விஜய் மணிவேல்,**
**ஒருங்கிணைப்பாளர்கள் பாரதி முருகேசன், மீனா இளஞ்செயன்**
**மற்றும் அனைவருக்கும் வாழ்த்துகள்.**



# ஜகதீசன், காஞ்சனா, அனுசுயா, அமுதா, ஆனந்த்

# பேரவை செயற்குழு 2024-2026



விஜய் மணிவேல்
தலைவர்



எழிலன் இராமராஜன்
துணைத் தலைவர்



கபிலன் வெள்ளையா
செயலாளர்



ஜான்சிராணி பிரபாகரன்
இணைச் செயலாளர்



வள்ளிக்கண்ணன் மருதப்பன்
பொருளாளர்



சுபா சுந்தரலிங்கம்
துணைப் பொருளாளர்



பாலா சுவாமிநாதன்
இயக்குனர்



பாரதி பாண்டி
இயக்குனர்



கார்த்திக் பெருமாள்
இயக்குனர்



ஷான் குத்தாலிங்கம்
இயக்குனர்



வெற்றிவேல் பெரியய்யா
இயக்குனர்



ஆர்த்திகா குமரேஷ்
இளையோர் உறுப்பினர்



ரோஷன் சீனிவாசன்
இளையோர் உறுப்பினர்

# தலைவர் மடல்

தமிழர் தங்கள் தலைமுறை தலைமுறை வந்தடுக்குகின்ற தமிழே! இடர் பல வந்திடினும் இனிமை குறையாது இயங்குகின்ற இன்தமிழே, எம் உயிர்த் தமிழே வாழி! இனிய தமிழ் உறவுகள் எல்லோருக்கும் அன்பு வணக்கம். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” எனச் சொல்லிச் சென்ற கணியன் பூங்குன்றன் வகுத்த தமிழுக்கொப்ப, ஒன்றாதல் கொண்டு விழாவினை நடத்திக் கொண்டிருக்கும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் முப்பத்து எட்டாவது ஆண்டுவிழா தனக்கான சிறப்புகளைக் கொண்டு ஈடேறிக் கொண்டுள்ளது. ஒருங்கிணைபாளர்கள் ஓயாது ஒலிக்கும் கடலைப் போல் ஓய்வின்றி பணியாற்றுகிறார்கள். தமிழ் மரபு, வாழ்வியல் மேன்மை, விழுமியம் போற்றும் கலைப் படைப்புகளுக்குத் தனிச்சிறப்பு செய்யும் பொருட்டு பன்னாட்டு தமிழ்த் திரைப்பட விழா, உளக்களிப்பும், உடற்பொலிவும், பண்படுதலும் இயைந்து கிடைப்பதன் பொருட்டு பன்னாட்டு தமிழ் விளையாட்டுத் திருவிழா, கலை, இலக்கியம், தமிழ், படைப்பு, அறிவியல் திறத்தைப் புடம் போட்டுச் செதுக்கும் பொருட்டு, வட அமெரிக்க வாகை சூடி எனும் பெயரிலான நாடளாவிய போட்டிகள், தமிழ்க் கலைகளைப் பேணுவதன் நிமித்தம் கலைகளின் சங்கமம் எனும் பெயரில் சிறப்பு அரங்கேற்றம் முதலானவற்றினூடே எப்போதும் இடம் பெறுகின்ற நிகழ்ச்சிகளும் உட்பொதிந்துள்ளன இந்த ஆண்டுத் திருவிழாவில்.

ஆண்டுத் துவக்கத்தில், மாமதுரையில், வெற்றிகரமான தொழில்முனைவோர் மாநாட்டினை நடத்திக் காண்பித்திருக்கின்றோம். எல்லாப் புகழும் நம் பேரவைக்கே!, கிராமியப் பின்னணியைக் கொண்ட மக்கள், மாணவர்கள், எளிய சாமான்ய மக்கள் என எல்லோரிடமும் புத்தாக்க உணர்வை, தொழில்முனைவுக்கான விதையை விதைத்து வந்திருக்கின்றோம். அதன் தொடர்ச்சியாக, தமிழ்த்திருவிழாவின் ஓர் அங்கமாக, பன்னாட்டு தமிழ் தொழில்முனைவோர் மாநாடும் இடம் பெறுகின்றது.

தமிழுக்கும் தமிழர்களுக்கும் தொண்டாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார், வாழ்நாள் முழுமையும் சமூகத்தின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்தும் உழைக்கின்ற தோழர் இரா. நல்லகண்ணு ஆகியோரின் நூற்றாண்டு விழாவாகவும் பேரவையின் இந்த ஆண்டுத் தமிழ்விழா நிகழ்கிறது என்பதில் நமக்கெல்லாம் பெருமை, உவகை.

தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம் எனும் கருப்பொருளுடன் நடைபெறுகிறது தமிழ்விழா 2025. தமிழ் என்பது நம் அடையாளம், நமக்கான நெறி, நம் உயிர். உயிரில் கலந்த மொழி நம்மை சிறந்தோங்கவும், நாம் உயர்ந்தோராய் இயங்கவும் வேண்டுமென்பதே பேரவையின் இலக்கு. இயலும் வழிகளிலெல்லாம் சிறப்புச் சேர்த்துக் கொண்டிருக்கின்ற வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, கேரொலைனா தமிழ்ச்சங்க ஆர்வலர்கள், நலவிரும்பிகள், மாந்தநேயப் பற்றாளர்களுக்கு வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக!

நின்று வெல்லும் தமிழ்!



அன்பன்,

**விஜய் மணிவேல்**

**தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

# செயலாளர் மடல்

பழந்தமிழ் மக்கள் அந்நாள், பறவை, விலங்கு, வண்டு, தழைமூங்கில் இசைத்ததைத் தாம் தழுவியே இசைத்ததாலே எழும் இசைத்தமிழே! இன்பம் எய்தியே குதித்ததாலே விழியுண்ணப் பிறந்த கூத்துத் தமிழே! என் வியப்பின் வைப்பே! உயிர்த்தமிழே வாழி! தமிழால் இணைந்து தமிழுக்காய் விழாயெடுத்துக் கூடியிருக்கின்ற தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கமும் வாழ்த்துகளும்!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது ஆண்டுவிழா, தமிழ்த்திருவிழா 2025, தவத்திரு குன்றக்குடி அடிகளார், தோழர் இரா. நல்லகண்ணு நூற்றாண்டு விழா, கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து நடத்தும் விழா எனப் பல பொருண்மியங்களோடு மலர்ந்திருக்கின்ற விழா, பேரவைப் பயணத்தில் தனிச் சிறப்புடன் தனக்கானதோர் இடத்தைப் பெற்று விளங்குமென்பது திண்ணம். மகிழ்ச்சி!

செயற்குழு பொறுப்பேற்றுக் கொண்ட இந்த ஓர் ஆண்டுப் பயணமென்பது ஆக்கப்பூர்வமான பல விழுமியங்களைத் தன்னகத்தே கொண்டு பீடுநடை போட்டுக் கொண்டு வருகின்றது. சமகாலப் புதுமைகளைக் கொண்டதொரு பேரவை இணையதளம், வெளிப்படைத் தன்மையை நிலைநாட்டும் பொருட்டு உடனுக்குடனே பொதுவெளியில் வைக்கப்படும் செயற்குழு, பொதுக்குழு கூட்ட அறிக்கைகள், பேரவையின் செயற்பாடுகளை அப்போதைக்கப்போது தெரியப்படுத்தும் நோக்கில் தகவல் தொடர்புக்குழுவின் பதிவுகள், அறிவிப்புகள், பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் ஊரகப்பகுதி மக்களும் மேம்பாடு கொள்வதற்கான மாமதுரை தொழில்முனைவோர் மாநாடு என இடம் பெற்ற பணிகள் நிறைய.

பேரவைக்கான பணியாற்றிடக் குழுக்களைக் கட்டமைக்கும் போது, அவை செயலாற்றும் குழுக்களாக இருக்க வேண்டுமென்றெண்ணி, குறைவான குழுக்களாகவும் நிறைவான பணிகளைச் செய்யும் குழுக்களாகவும் பல குழுக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. எல்லாக்குழுக்களும் அவரவர் பணிகளில் தொய்வில்லாமல் செயற்பட்டு வருகின்றனர். அது பேரவைக்குக் கிடைத்திருக்கும் வெற்றியேயாகும். கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து பேரவை விழாவுக்கான குழுக்களும் அமைக்கப்பட்டுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

நம் எல்லாருக்கும் பொதுவானது நம் தாய்மொழியாம் தமிழே. தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம் எனும் விழாமொழியும் அதைத்தான் நமக்குப் பறைசாற்றுகின்றது. அவ்வகையில், எவ்விதமான ஏற்றத்தாழ்வுகளுக்கும் இடம் கொடாமல், சகலதரப்பினரையும் தன்னகத்தே கொண்டு பன்மைத்துவம் போற்றித் தமிழெனும் ஒற்றைப்புள்ளியில் கூட்டுறவோடும் அன்போடும் பணிகள் ஈடேறிவருகின்றன. பாராட்டுகள்.



புரவலர்கள், கொடையாளர்கள், தன்னார்வச் செம்மல்கள், தமிழ்ப்பற்றாளர்கள், விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக!

தமிழ் வாழ்க!

அன்புடன்,

**கபிலன் வெள்ளையா**

**செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை**

# ஒருங்கிணைப்பாளர் மடல்

தமிழ் உறவுகளுக்கு வணக்கம்!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது ஆண்டு தமிழ்த் திருவிழாவிற்கு உங்களை அன்புடன் வரவேற்கிறேன்.

**“பெரியோரை வியத்தலும் இலமே,**

**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.”**

என்ற கணியன் பூங்குன்றனாரின் கூற்றிற்கேற்ப சிறார்கள், இளையோர், பெரியோர் என அனைவரும் இணைந்து குழுக்கள் அமைத்துக் கொண்டாடும் இந்த விழாவின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவது நான் பெற்ற பெரும்பேறாகும்.

இந்த விழாவின் ஒருங்கிணைப்பாளராக, வட அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் உள்ள தமிழர்களுடன் பேசும் வாய்ப்பும், அவர்களுடன் பணியாற்றும் அனுபவமும் எனக்கு கிடைத்தது என்பது மிகுந்த மகிழ்ச்சியையும் பெருமையையும் அளிக்கிறது. அவர்களின் உற்சாகமும், பங்களிப்பும் இந்த மாநாட்டை மேலும் சிறப்புடையதாக்கியுள்ளது இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்த அயராது உழைத்த அனைத்து தன்னார்வலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மூன்று நாள் விழாவில் நம் தமிழ் அடையாளத்தை பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள், சிந்தனையைத் தூண்டும் உரையாடல்கள், சமூக உறவுகளைக் கட்டியெழுப்பும் நிகழ்வுகளில் நாம் ஈடுபட இருக்கிறோம். இந்த மாநாடு, கற்றல், மகிழ்ச்சி மற்றும் மரபைப் பகிரும் ஒரு மேடையாக அமையட்டும்.

உங்கள் வருகைக்கு நன்றி. இந்த 38ஆவது தமிழ் திருவிழாவை மறக்க முடியாத ஒரு கொண்டாட்டமாக மாற்றுவோம்!

தமிழும் தமிழரும் வளர்க!

அன்புடன்

**மீனா இளஞ்செயன்**

**விழா ஒருங்கிணைப்பாளர்**



# ஒருங்கிணைப்பாளர் மடல்

**“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு.”**

கலைகளை அகத்தும் மங்காப் புகழைப் புறத்தும் கொண்ட தமிழே போற்றி. தமிழின் இயல், இசை, நாடக முத்துப்பரல்களே போற்றி. தமிழ் உறவுகளுக்கு வணக்கம். தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம் எனும் கருப்பொருள் தாங்கிப் பரிணமித்திருக்கின்ற, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது ஆண்டுவிழா, 2025 தமிழ்த்திருவிழாவினை கேரொலைனா தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து நடத்தும் பேறு எங்களுக்கு அமைந்தமை குறித்து, கேரொலைனா தமிழ்ச்சங்கத்தின் செயலாளர், ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் பெரிதும் அகமகிழ்ந்து, நன்றிகளையும் உரித்தாக்குகின்றேன்!

விழாவினை எப்படியெல்லாம் சிறப்பாக நடத்திடலாமென நினைக்கத் தலைப்பட்ட போது, பல ஆலோசனைகள் கிடைக்கப் பெற்றன. எல்லாவற்றையும் உள்வாங்கி, தமிழ், வாழ்வியல், கொண்டாட்டம், மரபு, நவீனம், புத்தாக்கம், அறிவியல், தொழில்நுட்பம், மேன்மை முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டும், எல்லாக்கூறுகளும் தனித்துவமான இடங்கள் பெறவேண்டுமென்கின்ற குறிக்கோளுடனும், நூற்றாண்டு விழா நாயகர்களான தவத்திரு குன்றக்குடி அடிகளார், தோழர் இரா. நல்லகண்ணு ஆகியோரின் தனிச்சிறப்புகளை உள்ளடக்கியும் அடுத்த தலைமுறையினருக்கான வழிகாட்டுதல்கள் முன்னெடுக்கப்பட்டும் விழா வடிவமைக்கப்பட்டிருக்கின்றது. இயன்றவரையில் சமச்சீர் கடைபிடிக்கப்பட வேண்டுமென்றும் முயன்றிருக்கின்றோம். வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து அளித்துக் கொண்டிருந்த பேரவை வழிகாட்டுதல்குழு, செயற்குழுவுக்கு நன்றிகள் உரித்தாகுக!

விழாவுக்காக கடந்த ஓராண்டாக எங்களுடன் ஒருங்கிணைந்து, தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் உழைத்தத் தன்னார்வலர்கள் அத்தனை பேருக்கும் வாழ்த்துகளையும் நன்றிகளையும் சொல்வதோடு, பயணித்த நாட்கள், மேலோங்கிய அணுக்கம் யாவையும், கேரோலைனா தமிழ்ச்சங்கம், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை என்பது கடந்து, ஒட்டுமொத்தத் தமிழ்ச்சமூகத்துடனான பயணமென்றே கருதுகின்றோம். விழா என்பதன் பொருளே அதுதானே? கலை, இலக்கியம், பண்பாடு, தொழில்முனைவு நுணுக்கங்கள், விளையாட்டு, மருத்துவம், சட்டம், உரிமைகள், தமிழர்தம் மேம்பாடு போன்ற விழுமியங்களுக்கான தலைவர்கள், சிறப்பாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், பங்களிப்பாளர்கள், பயனாளர்களென எல்லாத் தரப்பும் ஒருங்கே கூடுகின்ற, தமிழருக்கான ஓரிடம், தாய்வீடு என்றால் அது பேரவையின் தமிழ்த்திருவிழாதான். அத்தகு திருவிழாவுக்குப் பங்களித்திருக்கும் அனைவரையும் வரவேற்றும் வாழ்த்தியும் பாராட்டுதல்களை நல்கியும் பணிகின்றேன். வாழிய நற்றமிழ்!



தமிழால் இணைந்தோம் தமிழ்கொண்டு பயணிப்போம்!

அன்பென்று கொட்டு முரசே!,

**பாரதி முருகேசன்**

**விழா ஒருங்கிணைப்பாளர்**

# இணை ஒருங்கிணைப்பாளர்கள் மடல்



அமுதே, தமிழே, அழகிய மொழியே, எனதுயிரே!!

தமிழுக்கும், தமிழருக்கும், பல மாதங்கள் அயராது உழைத்து விழா காணும் நல்லுள்ளங்களை வாழ்த்தி வணங்குகிறேன்!!

தமிழால் இணைவோம், தமிழராய் வாழ்வோம் !! இது இவ்வாண்டின் கருப்பொருள்.

பசும் சோலைகளும், பல்கலைக்கழகங்களும் சூழ்ந்த இராலே நகரில் தமிழால் இணைந்து விட்டோம், தமிழராய் வாழ்வது எப்படி? நாம் கற்ற இலக்கியங்கள் தமிழரின் தலையாய பண்புகளாகக் கூறுவன அறமும், ஈகையும்!!

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

என்ற வள்ளுவரின் வாக்கின் படி வாழ்ந்து,

உண்பது நாழி, உடுப்பது இரண்டே
பிறவும் இல்லாம் ஓரொக்குமே,
செல்வத்துப் பயனே ஈதல்

என்ற நக்கீரரின் எண்ணம் போல் நடந்து, தமிழ் அன்னைக்குப் பெருமை சேர்ப்போம்!!

நன்றி,

**சாருலதா குருபரன்**
**விழா இணை ஒருங்கிணைப்பாளர்**



பேரன்புடையீர் வணக்கம்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது மாநாட்டின் இணை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்ற வாய்ப்பளித்த கேரொலைனா தமிழ்ச் சங்கத்திற்கும் மற்றும் பேரவையின் நிர்வாகக் குழுவிற்கும் எனது மனமார்ந்த நன்றி.

பேரவைக்கு நான் புதிது என்றாலும், அதன் பரந்த தொலைநோக்குப் பார்வை என்னை இப் பணியோடு உளப்பூர்வமாக இணைத்துக் கொள்வதற்கு வழிவகுத்தது. நம்மில் பலர் நமக்கும் நம் குடும்பத்தினருக்கும் ஒரு சிறந்த வாழ்க்கை முறையை உருவாக்கும் கனவுகளுடன் அமெரிக்காவிற்கு வந்திருந்தாலும், பேரவை நம் இருப்புக்கு ஒரு முக்கியமான, வேறுபட்ட கண்ணோட்டத்தை வழங்குகிறது. நம் தமிழ் மொழியையும், பண்பாட்டையும் பாதுகாப்பதற்கான ஒரு சமூகப் பொறுப்புணர்வையும், குறிப்பாக, இந்த மேற்கத்திய உலகின் இயக்கவியலை நம்பிக்கையுடன் வழிநடத்தக்கூடிய, அதே நேரத்தில் தங்கள் பாரம்பரியத்தில் ஒன்றுபட்டு ஆழமாக வேரூன்றியிருக்கும் ஒரு வலிமையான, துணிச்சலான அடுத்த தலைமுறையை வளர்ப்பதற்கும் இது நம்மைத் தூண்டுகிறது.

இம் மாநாடு மறக்கமுடியாத ஒன்றாக இருக்க நாம் அனைவரும் பேரார்வத்துடன் ஒன்றிணைந்து நம் வலிமையையும், ஒற்றுமையையும், நிரூபிப்போம்.

நன்றி! வணக்கம்!!

**மீனாட்சி சுந்தரம்**
**விழா இணை ஒருங்கிணைப்பாளர்**

# கேரொலைனா தமிழ்ச் சங்கம் செயற்குழு 2024-2026



பாரதி பாண்டி
தலைவர்



ஆனந்த் செல்வராஜ்
துணைத் தலைவர்



பாரதி முருகேசன்
செயலாளர்



மீனா இளஞ்செயன்
இணைச் செயலாளர்



சண்முகம் பச்சமுத்து
பொருளாளர்



பரத் சோமசுந்தரம்
இயக்குனர்



கபில் சம்பத்
இயக்குனர்



கார்த்திகா
இயக்குனர்



கோதை ஜெயராஜ்
இயக்குனர்



சாந்தி கண்ணன்
இயக்குனர்



சத்யராஜ் ஈஸ்வரன்
இயக்குனர்

# கேரொலைனா தமிழ்ச்சங்கத் தலைவர் மடல்

**“குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்”**

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்கு, தெய்வச்செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல் கூட, வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும். வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை எனும் தமிழ்க்குடையின் கீழ், தமிழ்க் குடிகளுக்காகத் தமிழ்ப்பணியும், தமிழ் மக்கள் பணியும் செய்து கொண்டிருக்கும் அனைத்துத் தன்னார்வத் தொண்டர்களுக்கும் நன்றி!

பேரவையின் தலையாய நோக்கமாக, தமிழ் மொழி, பண்பாடு, கலாச்சாரம் காத்தல், தமிழர் நலன் உயர்த்தல் முதலான அடிப்படையில், பல ஆயிரம் தமிழர்கள் கூடி, மாபெரும் தமிழ்விழா இராலே நகரில் இடம் பெறுகின்றது. எழுபதிற்கும் மேற்பட்ட தமிழ்ச்சங்கங்கள் இணைந்து நடத்தும் இந்த மாபெரும் தமிழ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வரும் தலைமை விருந்தினர்கள், பேருரையாளர்கள், கவிஞர்கள், திரைப்பட வல்லுனர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட எல்லாரையும் கேரொலைனா தமிழ்ச்சங்கம் சார்பில், 'வருக வருக' என வரவேற்கிறேன்.

இராலே நகரில் 2007ஆம் ஆண்டுக்குப் பிறகு நடக்கும் இவ் விழாவானது, தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பு, அறிவியல் மேலாண்மை, கலைநயம், நாகரிகத் தொன்மை முதலான தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

நாற்பதுக்கும் மேற்பட்ட குழுக்களில் பல நூறு தன்னார்வத் தொண்டர்கள் பங்கேற்று நடத்தும் இவ்விழாவில், தொழில் முனைவோர் மாநாடு, திரைப்பட விழா, விளையாட்டு விழா, மரபுக்கலை நிகழ்ச்சிகள், மருதிருவர் நாடகம், இசைமாலை, கல்யாண மாலை போன்ற நிகழ்வுகளுக்குப் பின்னாலான உழைப்பினை ஈந்த ஆர்வலர்களை வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.



**தமிழால் இணைவோம்! தமிழால் உயர்வோம்!**
**தமிழரை உயர்த்துவோம்!**

**முனைவர் பாரதி பாண்டி**

**தலைவர், கேரொலைனா தமிழ்ச்சங்கம்**

# மலர்க் குழு



தேவகி
செல்வன்



அருள்
வீரப்பன்



சுமித்ரா
இராசவேலு



அனிதாராஜ்
சரவணன்



செல்வா
ராமநாதன்



பூப்பாண்டி
முத்து



ஆரோக்கிய
அந்தோணி ராஜ்

*நன்றி*

*புத்தக வடிவமைப்பு: திரு. சு.சுடலைமுத்து துரை*

*அச்சு: CUBE PRINTERS*

# பேரவை மலர் ஆசிரியரிடமிருந்து...

இனம், மொழி, ஒழுக்கம் எனப் பல விழுமியங்களைக் குறிக்கும் தன்னிகரில்லாத் தமிழுக்கு முதல் வணக்கம்.

‘விருந்து’ என்ற சொல் புதுமை எனும் பொருள் குறிப்பதாகக் கூறுகிறார் தொல்காப்பியர். ஒவ்வோர் ஆண்டும் புதுமை படைக்கும் பேரவையின் 38ஆவது விழாவைச் சிறப்பிக்கும் அனைவரையும் மலர்க்குழுவின் சார்பாக வருக வருக என வரவேற்கின்றோம். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு “தமிழராய் வெல்வோம்” என்று விழா கொண்டாடிய ஊரில் “தமிழராய் வாழ்வோம்” என்றும், அவ்வழியே வாழ்ந்த, வாழும் இருபெரும் மனிதர்களின் நூற்றாண்டைக் கொண்டாடுவதும் கூடுதல் சிறப்பு.

எளிய முறையில் தமிழ் கற்றல், இலக்கியவழி இலக்கணம், வாழ்வியல், பொருளாதாரம், மருத்துவம், கணினி, மெய்ப்பாடு, நூற்றாண்டு காணும் பெண் எழுத்தாளர்கள், கடந்த ஆண்டு பேரவை நிகழ்வுகள், இந்த ஆண்டு நிகழ்வுகள் எனப் பொருள் பொதிந்த ஆக்கங்களை வழங்கிய படைப்பாளர்கள் அனைவருக்கும் அன்பும் நன்றியும். விழாவின் வித்தாய், தண்ணளியுடைத் தன்னார்வலர்கள், கொடையாளர்கள், தாளாளர்கள் என விரியும் அன்பர்களுக்கு நன்றி கூறுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

வீடுபேறு என்பது அறநெறியில் பிழையாது, அனைவரிடத்தும் அன்பு காட்டி வாழ்வதாகும். தமிழும் இறையும் இரண்டல்ல ஒன்றே எனும் உயரிய கருத்தை விதைத்து நமக்கு வழிகாட்டியாய் விளங்கும் அடிகளாரின் செயல்திறனைக் கருத்தில் கொள்வோம். சங்க இலக்கியங்கள் கூறும் வீரம், கொடை, அன்பு இவற்றை நேரில் காட்சியாக்கும் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் வழியில், உரிமை பெற்ற தமிழராய் நாமும் வாழ்வோம்.

தமிழராய் வாழ வழிகாட்டும் பெருமகனார் இருவரது உருவையும், தொன்மையான தமிழ் இலக்கியம் இன்றும் நம்மிடம் நிலைத்திருக்கச் செய்யும் கூத்தின் உருவையும் தாங்கிய அட்டைப்படத்தை வடிவமைத்த ஓவியர் திரு. மருதப்பன் மருது அவர்களுக்கு மிக்க நன்றி.

மலர் என்ற சொல் பெயராகவும் வினையாகவும் உள்ளது. மொழியின் மழை முகிலாய் இளம் தளிராய் வளரும் புதிய எழுத்தாளர்களைக் கண்டறிந்து சீர்தூக்கும் பேரவை வழங்கும் வாய்ப்புகளில் ஒன்றே விழாமலர். முதல் முயற்சியாக இந்த ஆண்டு மலர் புதிய மற்றும் வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் மலர்க்குழுவிற்கு அனுப்பப்பட்டக் கட்டுரைகளுக்கு முன்னுரிமை கொடுத்துப் பெரும்பாலும் அப்படைப்புகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இலக்கிய இலக்கணம் பேணும் தமிழினத்தின் தலைநிமிர்ந்து வாழும் உரிமை மறுக்கப்படுகிறதே என்ற நமது குரலுக்குச் செவிமடுக்கத் தொடங்கியுள்ளன உலக நாடுகள். விடிவெள்ளி விரைவில் முளைக்கட்டும்.



மலர் குறித்தான உங்களது ஆக்கபூர்வமான
கருத்துகளைத் தாருங்கள் vizhamalar@fetna.org

நன்றி!

**தேவகி செல்வன்** (மலர் முதன்மை ஆசிரியர்)

மற்றும்

மலர் ஆசிரியர்க் குழு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| மனத்துக்கண் மாசிலன் | - | 28 |
| குன்றக்குடி அடிகளார் - சமய சமுதாய இணைப்புப்பாலம் | - | 30 |
| நூற்றாண்டு காணும் பெண் இலக்கிய ஆளுமைகள் | - | 32 |
| வட அமெரிக்க வாழ்க்கைக்குச் சங்கத்தமிழிலிருந்து பாடல்கள் | - | 36 |
| உயிர்த்தமிழ் | - | 38 |
| தமிழ் எழுத்துகளின் கால வரிசை | - | 40 |
| நன்னடையில் ஓராண்டு | - | 42 |
| உயிராயுதமான ஈழத் தமிழ் | - | 46 |
| குழந்தைகளுக்குத் தமிழ் வரிவடிவைக் கற்பிக்க எளிய வழிமுறைகள் | - | 48 |
| மாமதுரை தொழில்முனைவோர் மாநாடு | - | 50 |
| போற்றுவோம் போற்றுவோமே! | - | 55 |
| தமிழரின் தொல் வணிகமும் பொருளாதாரமும் | - | 56 |
| இதுதான் தமிழர் திருமணம் | - | 58 |
| அமெரிக்கச் சூழலில் தமிழ் கற்றல் கற்பித்தலில் சில எளிய படிநிலைகள் | - | 60 |
| நானிலத்தை நலமாக்கும் தமிழ் மூச்சு | - | 62 |
| அறுசுவைக் களஞ்சியம் | - | 64 |
| கடல் அளவு த.தொ.நு.துறையை கரைத்துக் குடிக்க ஆசையா? | - | 66 |
| அருட்பெருஞ்ஜோதி அருட்பிரகாச வள்ளலார் | - | 68 |
| கொள்கையைப் பெரும் சொத்தாக மதித்து வாழும் மாமனிதர் | - | 70 |
| அமெரிக்கத் தமிழ்ப்பள்ளிகளும், தமிழ்நாட்டுத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளும் | - | 74 |
| தமிழ் இலக்கியத்தில் மருத்துவம் | - | 76 |
| அமெரிக்காவில் தமிழ் வளர்க! | - | 78 |
| தமிழராய் வாழ்வோம்! | - | 80 |
| காணாமல் போனவள் | - | 82 |

குன்றாப் புகழோடு குன்றக்குடி அடிகளார்! - 84
தமிழரின் புலமையும் வீரமும் - 85
பிரபஞ்சத்தின் வாழ்த்து - 86
சிறார்களின் ஆரோக்கிய வாழ்விற்கான யோக ஆசனங்கள் - 90
வாழும் தமிழே வழிகாட்டு - 91
காற்றோடு கலந்தாலும் தமிழ்தான் உன் அடையாளம்! - 93
செய்யுளில் அடிப்படை இலக்கணம் - 94
இலங்கை அரசின் போர்க் குற்றங்களும், இன அழிப்பு நீதிக்கான பயணமும் - 96
அறநெறிக் காவலர் - 98
கடை விரித்தார், கொண்டோமா? - 100
தோழர் நல்லகண்ணு ஐயா - தனிப்பெரும் தலைவர் - 102
ஆய்வு நோக்கில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளும், உலகப் பரவலாக்கலும் - 104
தோழர் நல்லகண்ணு - ஓய்வறியா உரிமைக்குரல் - 106
உரிமைக் குரல் உறங்குவதில்லை! - 108
பெருமை மிகு தமிழர்கள் அடிகளாரும் நல்லகண்ணு அய்யாவும் - 110
காவி உடை தரித்த காரல் மார்க்ஸ் - 112
தகவல் நுழைபுலம் - 114
வியக்க வைக்கும் வாழ்க்கை வாழ வழி - 116
இசைத்தமிழ் உரையும் கலந்துரையாடலும் - 118
2024 பேரவை விழா - 120
பேரவையின் மேனாள் தலைவர்கள் - 126
பேரவை விழா 2025 குழுவினர் - 129
பேரவைக் குழுக்கள் - 134
கொடையாளர்கள் - 142



Editorial Disclaimer: Federation of Tamil Sangams of North America (FeTNA) Malar (Souvenir) 2025 is published by FeTNA, a registered, cultural, secular and non-profit organization. The views expressed in this publication are solely those of the authors or of the sources quoted therein and not necessarily that of the FeTNA Malar 2025 editorial board or the FeTNA. FeTNA Malar 2025 accepts no liability for any claims or errors in advertisements or any of the reports or articles. However, we welcome your comments. Please address them to the editor of the magazine at vizhamalar@fetna.org. The Editorial board reserves the right to edit, not publish or acknowledge letters and articles sent to the publication.

# மனத்துக்கண் மாசிலன் திரு நல்லகண்ணு அப்பா



**ந.காசிபாரதி** ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், கோவில்பட்டி

ஆழ்கடல் அனுபவங்களில் சில நினைவலைகளை உங்கள் கரை சேர்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.



### எவ்வளவு வருமானம்?

பெண் பார்க்க தாத்தா வீட்டிற்கு அப்பா போயிருந்த நேரம். எனது ஆச்சி மாப்பிள்ளை என்ன வேலை செய்கிறார் எவ்வளவு சம்பாதிக்கிறார்? மாதம் வருமானம் எவ்வளவு? என்று கேட்டுள்ளார். அதற்கு எனது தாத்தா நம் மகள் வீட்டுக்கு உழைப்பாள்! மருமகன் நாட்டுக்கு உழைப்பார்! என்று கூறி வருமானம் பற்றி அவரிடம் கேட்கக் கூடாது என்று கூறினார்.

அப்படித் துவங்கிய வாழ்க்கையில் இருவருக்கும் இடையே மன வருத்தம் வந்ததே கிடையாது. அம்மாவிடம் ஒருபோதும் கோபத்தைக் காட்டி நான் அறியேன். அப்பா நாடு முழுதும் அலைந்து வருகிறார்கள் என்று அம்மா கவலை கொண்டு, வீடு வந்த நேரம் நன்கு பேணிக் கவனித்துக்கொள்வார்கள். அம்மா ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டு பல நாள்கள் எனது தந்தையின்றித் தனியாகவும் அதே வேளையில் என் தந்தையின் பொது வாழ்க்கைக்கு உறுதுணையாகவும் இருந்து அன்புடன் எங்களை வளர்த்து வந்தார்.

அப்பா அவர் குடும்பத்தின் மீது எவ்வளவு பற்றும் பாசமும் வைத்திருந்தாரோ அதே அளவு என் அம்மாவின் குடும்பத்தின் மீதும் அதிகளவு அன்பும் பாசமும் அக்கறையும் கொண்டிருந்தார். அனைத்து நிகழ்வுகளிலும் சரியாகக் கலந்து கொண்டு அனைவரின் அன்பைப் பெற்று விடுவார். இரண்டு குடும்பத்தையும் எப்படி ஒன்று போல் பாவிப்பது என்பதற்கு அப்பா ஒரு முன் உதாரணமாகத் திகழ்கிறார்.

### ஊர் வாசித்து எனக்கு வந்த கடிதம்

பள்ளியில் 9 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த எனக்கு வெளிநாட்டில் இருந்து அப்பா எழுதிய கடிதத்தில் வ. உ.சி யின் பிறந்தநாள், கல்வித் தந்தை இராதாகிருஷ்ணன் பிறந்த நாள், ஆசிரியர் நாள் இவற்றின் முக்கியத்துவம் பற்றித் தெளிவாகவும்

ஆழமான கருத்துக்களுடனும் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தை வார்டன் படித்து விட்டு அனைத்து ஆசிரியர்களையும் படிக்கச் செய்து எனக்குக் கடிதம் வந்து சேர பத்து நாள்கள் ஆயின. ஆனால் கடிதம் படித்தவர்கள் பண்டிதர் நேரு மகளுக்கு எழுதிய கடிதம் போல இருந்தது என்று கூறியது மட்டற்ற மகிழ்ச்சியே!

### பூட்டி வைத்த பாசம்

நாட்டு மக்களின் நல்வாழ்விற்காக மாதக் கணக்கில் வெளியே சென்று விட்டால் நாங்கள் அவர் பாசத்துக்கு ஏங்கி விடுவோம் என எண்ணி கண்டிப்பை வெளிப்படுத்தி பாசத்தை மனதிற்குள்ளேயே வைத்து வாழ்ந்து வந்தார். 1970-ல் நில மீட்சிப் போராட்டத்தில் பங்கேற்றுப் பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருந்த அப்பாவைப் பார்க்கச் சென்ற எங்களிடம் இறுதிவரை பேசவே இல்லை .அவரைப் பார்க்க வந்திருந்த தோழர்களிடம் நாடு மற்றும் கட்சி நிலவரம் குறித்து பேசிக் கொண்டிருந்தார். பார்க்கும் நேரம் முடிந்து திரும்பும் போது அனைவரையும் பார்த்து பத்திரமாய்ப் போய் வாருங்கள் என்று கூறினார். நாங்களும் தலையாட்டி விட்டு வந்தோம்.

ஆனால் என் மூத்த மகள் பிறப்புக்குப் பின் பெயர்த்தியிடம் மிகுந்த அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தி எங்களிடம் காட்டாத அன்பையும் பாசத்தையும் அப்பா பெயரன் பெயர்த்திகளிடம் அதிகம் வெளிப்படுத்தியது எங்களை வியப்பில் ஆழ்த்தியது. 1999இல் என் மகள் மஞ்சள்காமாலை நோயினால் மரணம் அடைந்தாள். அப்பொழுது குமுதம் இதழில் என் அன்பு பெயரத்தி சண்முக பாரதிக்கு என்று எழுதிய மடல் படித்த அனைவரையும் கண்கலங்க வைத்தது . அவரின் மன வேதனையையும் என் மகள் மீது கொண்ட பாசத்தினையும் அதன் மூலம் அறிய முடிந்தது.

### இழப்பிலும் நோக்கம் தவறா தந்தை

1995 ல் என் அம்மாவின் தந்தை தோழர் அ.க.அன்னசாமி ( 84 வயது) சாதிய கலவரத்தில் கொலை செய்யப்பட்டார். அந்த நேரத்தில் குடும்பத்தார் அனைவரையும் அமைதி காத்து, நிதானத்தைக் கடைபிடித்து, ஆலோசனை கூறினார். என் அப்பா நிதானத்தைக் கடைபிடிப்பதில் எவ்வளவு வல்லவர் என்பதை அப்போது உணர்ந்தேன்.மேலும் குடும்பத்தார் அனைவருக்கும் பாதுகாப்பு தருகிறேன் என்று கூறிய காவல் துறை அதிகாரியிடம் எங்கள் குடும்பத்தாரை நாங்கள் பாதுகாத்துக் கொள்வோம். “எங்கள் மாவட்டத்தில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுத்து நிறுத்தினாலே எங்கள் வீட்டின் பெரியவர் ஆன்மா சாந்தி அடையும்” அதற்கான தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன் என்று கூறியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.



மேலும் என் தாத்தாவின் படுகொலையைக் குறித்து ஒரு கவிதையும் எழுதினார். அதன் மூலம் என் தந்தைக்கு கவிதை எழுதும் திறமையும் இருப்பதை அறிந்தேன்.

### நூறாவது அகவை வாழ்த்து

கடந்த மார்ச் மாதம் என் பிறந்தநாள் அன்று காலை 7 மணி அளவில் அலைபேசி மூலம் அப்பா அழைத்தார். காசி உனக்கு 66 வயது முடிந்து 67 வயது பிறந்திருக்கிறது. என் பிறந்தநாள் வாழ்த்துகள் என வாழ்த்தி உடம்பை நன்கு கவனித்துக் கொள். ஆரோக்கியமாக இரு என்று தன்னுடைய நூறாவது வயதில் தன் மகளுக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறிய பாசத்தைநினைத்து நினைத்துப்பெருமைப்படுகிறேன். மணம் முடித்த பிறகும் எனது கல்வி தொடர துணை நின்ற என் கணவர் திரு அழகு முத்துப்பாண்டியன் என் தந்தைக்கும் துணை நின்றதை நினைத்து பெருமிதம் அடைகிறேன்.

**எளிய மக்களுக்காக இன்று வரைப் போராடி வாழும் பொதுவுடைமை வாதி பெற்ற மகள்** என்று எண்ணி மகிழ்கிறேன்.



# குன்றக்குடி அடிகளார்

## —சமய சமுதாய இணைப்புப் பாலம்




கவிதா பார்த்தசாரதி

அட்லாண்டா


தமிழா வழிபடு! தமிழால் வழிபடு! என்று தமிழ் தேசியம் பேசி ஆன்மீக அறிவியலையும், அன்றாட அறிவியலையும் இணைத்து சமய இலக்கியங்கள் பல படைத்து நமது சமுதாயத்தைத் தமிழால் பாலம் கட்டி இணைந்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

**20 ம் நூற்றாண்டின் சமய – சமுதாய ஞானி !**

**நாம் காணும் சமய நெறி, சமுதாய தொடர்புடைய நெறி;**

சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும், நல்வாழ்வுக்காகவும், மக்களுக்கு வேண்டுவன செய்யவும் உருவாக்கப்பட்டது. மனித சமுதாயத்தின் சிக்கல்கள்,தொல்லைகள் அனைத்தையும் மாற்றி அமைக்கின்ற பொறுப்பும், கடமையும் சமய நெறிக்கு இருக்கிறது என்று கூறி சமயவாதிகளிடையேயும் சமுதாயவாதிகளிடையேயும் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் குன்றக்குடி அடிகளார்.

மகேசுவரனைப் பற்றி எண்ணினாலும் இவருடைய சிந்தனைகள் மனித சமுதாயத்தைச் சுற்றியே சுழன்றது. மழை பொழிந்ததின் விளைவை மண் காட்டுவதைப் போல, சமய நெறி நின்று வாழ்வோரின் இயல்பினை வையகம் காட்ட வேண்டும் என்றும், தமிழ் சமுதாயத்தில் தீண்டாமை இல்லை என்றும், "ஒன்றே குலம்" என்ற திருமூலர் கூற்றுபடி ஒரு குலம் அமைக்க வேண்டும் என்றும், மனித உள்ளங்கள் அருள் நெறிவழி இணைக்கப் பெறும் பொழுது மண்ணகம் விண்ணகம் ஆகும் என்றும், அடிகளார் இந்த உலகிற்கு எடுத்துக் காட்டியிருப்பது உணர்ந்து போற்றத்தக்கது.

சமயத் துறையின் தலைமை மாளிகைகளில் புதிய ஜன்னல்களை திறந்தவர். வெயிலும், மழையும், ஒளியும், காற்றும் சமுதாய வழியில் மட்டுமல்லாமல் சமய சூழலிலும் இயல்பானவையே; ஏற்கத் தக்கவையே என்ற மனப்பாங்கு கொண்டவர். அறிவுலகின் ஆய்விற்கும், வளரும் சமுதாய மாற்றத்திற்கும் சமயங்கள் புறம்பானவை அல்ல. இவற்றின் தாக்கங்களுக்கு ஈடு கொடுத்து சமய மரபுகள் நிற்க வேண்டுமேயன்றி, இவற்றிலிருந்து பாதிக்கப்பட வேண்டுவன அல்ல என்று குரல் கொடுத்தவர் குன்றக்குடி கிராமத்தின் குன்றா விளக்கு. சமூக நோக்கிலான பணிகளில் கடவுள் மறுப்புக் கொள்கையை பரப்பிய தந்தை பெரியாருடன் அவர் இணைந்து

**செயலாற்றியது குறிப்பிடத்தக்கது. சாதி வேறுபாடுகளற்ற சமயம் என்பதை குறிக்கோளாகக் கொண்டவர். சம்பிரதாயங்கள் காலந்தோறும் மாறக்கூடியவை என்பதை அறிந்ததால், அவை தன்னைக் கட்டுப்படுத்த அடிகளார் அனுமதிக்கவில்லை.**

சிவன் கோவில்களில் தேவாரமும், திருவாசகமும் ஓதி தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ததுடன், அதை செயல்படுத்தித் தமிழ் மொழியைக் கோவிலின் கருவறை வரை கொண்டு சென்றவர். ஓர் ஒளிவட்டத்துக்குள் தன்னை இருத்திக்கொள்ளாமல் மக்களால் எளிதாக அணுகத்தக்கவராக இருந்ததும் அடிகளாரின் அடையாளங்கள்.

சமயம் என்பது சக மனிதனை நேசிப்பது என்பதே அவரது ஒட்டுமொத்த வாழ்க்கையின் சாரமாக இருந்தது. இன்று சமூகம் எதிர்கொள்ளும் பல சிக்கல்களை அடிகளார் இருந்திருந்தால் எப்படி அவற்றை எதிர் கொண்டிருப்பார் என நம்மில் பலரை சிந்திக்க வைப்பதே அவரது ஆளுகையின் சிறப்பு.

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளும், மின்னிலக்க தொழில்நுட்பமும் பூலோகத்தின் எல்லைகளை நொடிப்பொழுதில் இணைத்தாலும், மனித இதயங்களையும் மானிட உணர்வுகளையும் இணைக்க அளவற்ற அன்புடன் கூடிய ஆன்மீக உணர்வு அவசியம். ஐம்பூதங்கள், மனிதன், கடவுள், சாதி, சமயம் அனைத்தும் பொதுவுடமையே என்ற கருத்தை எதிர்கால நிழலுக்காக, எதிர் நீச்சல் போடும் இன்றைய தலைமுறையினருக்கு நிகழ்கால நிஜத்தில் வாழுங்கள் என்று சொல்லி சென்றுள்ளார் நமது தவத்திரு குன்றக்குடி அடிகளார்.


YOUR EVERYDAY GROCERY
حلال
HALAL
FRESH HALAL MEAT
DELICIOUS LUNCH, DINNER & SNACKS
WE CATER FOR ALL YOUR EVENTS
sangam mart
மக்களின் சேவையில்
சங்கம் மார்ட்
ONE STOP PLACE FOR ALL YOUR NEEDS !!
10300 Chapel Hill Rd Suite 700 Morrisville
NC 27560 Ph: 919-460-4300



# நூற்றாண்டு காணும் பெண் இலக்கிய ஆளுமைகள்

### தொகுப்பு: இராமசாமி சோமசுந்தரம், ஒகயோ.

கடந்த நூறு ஆண்டுகளில், அரசியலால் நமது சமூகத்தில் பெரும் மாற்றங்கள் அதிவேகத்துடன் நிகழ்ந்திருக்கின்றன. அவற்றில் சில, காந்திய இயக்கத்தின் கைம்பெண் மறுமணம், சாதி மறுப்புத் திருமணம்; பெரியாரிய இயக்கத்தின் பெண்ணுரிமை, பெண் கல்வி; இடதுசாரி இயக்கம்; தன்னெழுச்சியாக பெண்களிடம் எழுந்த புரட்சி போன்றன. இம்மாற்றங்களின் வெளிப்பாடாக இந்த பெண் இலக்கிய ஆளுமைகள் சிறப்பிடம் பெறுகிறார்கள்.

#### 2025இல் நூற்றாண்டு காணும் பெண் இலக்கிய ஆளுமைகள்

**ஹெப்சிபா ஜேசுதாஸ்** அவர்கள் பேராசிரியர், எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், சிறார் எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர். இவர் ஏப்ரல் 9, 1925 பிறந்தார். கன்னியாகுமாரி மாவட்டம் புலிப்பனம் என்ற ஊரைச் சேர்ந்தவர். பர்மாவிற்குக் குடிபெயர்ந்து, இராண்டாம் உலகப் போருக்குப் பின் தாயகம் திரும்பி நாகர்கோவிலில் குடியேறினார். இவர் கவிதைகள், கட்டுரைகள், தமிழ் இலக்கிய வரலாறு, நெடுநல்வாடை, பாரதியாரின் குயில் பாடல்கள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நூல்களாக வெளியிட்டுள்ளார். இவரது தமிழ் நாவல்கள் பனையேறும் தொழிலாளர்கள், பனந்தோப்பு முதலாளிகள் வாழ்வியலில் இடம் பெற்ற சமூக வேறுபாடு, முரண்பாடு, சாதிய இறுக்கம், பெண்கள் மீதான சமூகக் கட்டுப்பாடு, கல்வியினால் ஏற்பட்ட முன்னேற்றம் போன்றவற்றைத் துல்லியமாக, எளிமையான வட்டார வழக்கில் சித்திரமாகத் தீட்டியுள்ளன.

**இலட்சுமி கிருஷ்ணமூர்த்தி** அவர்கள் எழுத்தாளர், பதிப்பாளர், ஓவியர், இசைக் கலைஞர், சமூகப் பணியாளர், சுதந்திரப் போராட்ட வீரர் எனப் பல துறைகளில் செயல்பட்டுள்ளார். இவர் ஆகஸ்ட் 1, 1925-ல் பிறந்தார். கல்கி, ஆனந்த விகடன், இந்து பத்திரிகைகளில் கதைகள், கட்டுரைகள் எழுதி, அவற்றைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட்டுள்ளார். தன்னுடைய வீட்டை அடமானம் வைத்து வாசகர் வட்டம் என்ற பதிப்பகம் தொடங்கினார். இதன் மூலம் தமிழ்நாட்டின் உலகத்தரம் வாய்ந்த முதல் பெண்பதிப்பாளர் என்று அறியப்படுகிறார். இவர் தன் வீட்டில் பெண்களுக்கான இலவச மருத்தவமனை ஒன்றை நடத்தியுள்ளார்.

**இராஜம் கிருஷ்ணன்** அவர்கள் எழுத்தாளர், சமூகச் செயற்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முகத் தன்மையுடையவர். இவர் திருச்சி மாவட்டம் முசிறியில் நவம்பர் 5, 1925-ல் பிறந்தார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள், ஐந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், இருபது வானொலி நாடகங்கள், மூன்று வாழ்க்கை நூல்கள், பல இலக்கியக் கட்டுரைகள் எழுதிச் சாதனை செய்துள்ளார். இவரின் நாவல்கள் பல போட்டிகளில் முதல் பரிசு பெற்றுள்ளன. இவருடைய கதைகளின் கருவாகப் பெரும்பாலும் பெண்களின் சிக்கல்கள், குடிகாரக் கணவனின் வன்முறை, வரதட்சணைக் கொடுமை போன்றவையும் அவைகளிலிருந்து மீள்வதற்கான தீர்வுகளும் இருக்கும். இவர் தம் கதைகளை அப்போதையச் சமூகத்தின் பதிவேடாக நம்பினார்.



கமலா பத்மநாபன்



மூவலூர் இராமாமிர்தம்



சித்தி ஜீனைதா பேகம்



லஷ்மி அம்மாள்

### நூற்றாண்டு கடந்த பெண் இலக்கிய ஆளுமைகள்

1. ***கிருபை சத்தியநாதன் அம்மாள் (1862 பிப்ரவரி 14 – 1894 ஆகஸ்ட் 3)***

இவர் ஆங்கிலத்தில் இரு புதினங்களை எழுதியுள்ளார். தமிழ்நாட்டில் தமிழ்ப் பெண்களின் வாழ்வியலைப் பேசுவதால் இவை தமிழ்ப் புதினங்கள் என்று அழைக்கப்பட்டன.

2. ***பண்டிதை விசாலாட்சி அம்மாள் (1881-1926 அக்டோபர் 25)***

புதின ஆசிரியர், இதழ் நிறுவனர், இதழ் ஆசிரியர் எனப் பெண்களின் முன்னோடி. ‘லலிதாங்கி’ இவரின் முதல் புதினம். 30 புதினங்களை எழுதியுள்ளார். நாவல் ராணி எனப்பட்டார்.

3. ***மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் (1883 – 1962)***

இவர், சமூக சீர்திருத்தவாதி, அரசியல் செயல்பாட்டாளர், இலக்கியவாதி. தேவதாசி முறையை எதிர்த்து நாடகங்கள் நடத்தினார். ‘தாசிகளின் மோச வலை அல்லது மதி பெற்ற மைனர்’ என்ற நாவலை எழுதியுள்ளார்.

4. ***கி.சாவித்திரி அம்மாள் (1898 மே 5 – 1992 அக்டோபர் 16)***

இவர், எழுத்தாளர், மொழிபெயர்ப் பாளர், இசைக்கலைஞர், கல்வியாளர். ஆங்கிலத்தில் இருந்து தமிழில் பல மொழியாக்கங்களை வழங்கி உள்ளார். ‘கல்பகம்’ என்ற குறும்புதினம் ஒன்றை எழுதியுள்ளார். பள்ளி தொடங்கி, கல்விப் பணியாற்றினார்.

5. ***கி.சரஸ்வதி அம்மாள் (1900 செப்டம்பர் 10 – 1991 ஜூன் 20)***

‘நிழலும் ஒளியும், கன்றின் குரல்’ இவரின் புதினங்கள். பல சிறுகதைகள் எழுதியுள்ளார். முற்போக்குக் கருத்துகளை எழுதினார். பாலியல் கட்டுமீறல்களைப் படைத்தவர்.

6. ***அம்மணி அம்மாள் (19ஆம் நூற்றாண்டின் இறுதியைச் சார்ந்தவராகலாம்)***

முதல் சிறுகதை ஆசிரியராக இருப்பார். வ.வே.சு.வின் ‘குளத்தங்கரை அரசமரம்’, வெளிவருவதற்கு முன்பே, 1913இல் இவரின் ‘சங்கல்பமும் சம்பவமும் சிறுகதை வெளிவந்துவிட்டது. பல சிறுகதைகள் எழுதியுள்ளார். பஞ்சதந்திர கதைகள் சாயலில் பல சிறுகதைகள் அமைந்துள்ளன.

7. ***வை. மு. கோதைநாயகி அம்மாள் (1901 டிசம்பர் 1 – 1960 பிப்ரவரி 20)***

இவர், எழுத்தாளர், பாடகி, சமூக சேவகி, விடுதலைப் போராட்ட வீரர், இதழாளர், காந்தியவாதி, மேடைப்பேச்சாளர். 115 புதினங்கள் எழுதி, “நாவல் ராணி”, எனப் பாராட்டுப்பெற்றவர். ஜெகன் மோகினி என்ற இதழை வாங்கி எழுதி வந்தார். அதன் இணைப்பு இதழான நந்தவனம் இதழில் 100 புதிய பெண் எழுத்தாளர்களை அறிமுகம் செய்தார்.

8. ***சகோதரி வி பாலம்மாள் (20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தவர்)***

இவர், எழுத்தாளர், இதழாளர், பதிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், சமூகசேவகி. ‘விவேகோதயம்’ இதழின் துணை ஆசிரியராக இருந்தார். ‘சிந்தாமணி’, என்ற இதழைத் தொடங்கி பல சிறுகதைகள் எழுதி வெளியிட்டார். பெண் கல்வி, பெண்

ஓட்டுரிமை, அரசியலில் பெண்கள், பெண்களை ஒடுக்கும் சனாதன சிந்தனை போன்ற பொருண்மைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

9. **செய்யூர் சாரநாயகி அம்மாள் (1920களில் எழுதத் தொடங்கினார்)**

'மனோரஞ்சனி', என்ற மாத இதழைத் தொடங்கி ஆசிரியராக இருந்தவர். பல புதினங்களை எழுதியுள்ளார். மறுமணம், பெண் விடுதலைச் சிந்தனைகளை 'நித்தியகல்யாணி' என்ற புதினத்தில் எழுதியுள்ளார். 'கமலா கண்ணன் காதல் கடிதங்கள்' என்ற புதினத்தை இருவரின் மடல் வழி உரையாடலாக, தனித்துவமாகப் படைத்துள்ளார்.

10. **குகப்பிரியை அம்மாள் (1902 – 1970)**

இவர், எழுத்தாளர், இதழாளர், நாடக ஆசிரியர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், ஆன்மீக எழுத்தாளர். 1933ஆம் ஆண்டில், ஆனந்த விகடன் நடத்திய நாவல் போட்டியில் இவரின் சந்திரிகா என்ற புதினம் ரூபாய் ஆயிரம் பரிசு பெற்றது. பெண்கள் முன்னேற்றம் இவர் எழுத்தின் முதன்மையான பொருண்மை. மங்கை, புதுமைப் பெண் இதழ்களின் ஆசிரியராக இருந்துள்ளார்.

11. **குமுதினி அம்மாள் (1905 – 1986 அக்டோபர் 17)**

மொழிபெயர்ப்பு, சமூக சேவை, காந்தியம், பெண் விடுதலை இவரின் முதன்மைப் பணிகள். சாதி மறுப்பு, கலப்புத் திருமணம் பற்றிப் பேசிய 'திவான் மகள்' என்ற புதினம் உட்பட பலவற்றை இவர் எழுதியுள்ளார். நம்மாழ்வாரின் பாசுரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். ரவீந்திரநாத் தாகூர். ஜே.சி.குமாரப்பா நூல்களைத் தமிழில் மொழிபெயர்த் துள்ளார்.

12. **கு.ப.சேது அம்மாள் (1908 – 2002 நவம்பர்5)**

புதினம், வரலாற்று நூல்கள், நாடகங்கள், கட்டுரை நூல்கள், சமையல் கலை என்று பல படைத்தவர். வானொலி பேச்சாளர், திரைப்பட உரையாடல் எழுதியவர், இசைக் கலைஞர், இணைய இதழிலும் எழுதியவர். குடும்ப ஒற்றுமை, பெண் விடுதலை, பெண் கல்வி, மக்களின் வாழ்வியல், பெண்களின் நுண்ணிய உணர்வுகள் இவை குறித்து இவருடைய கதைகள் பேசியுள்ளன.

13. **டி. பி. ராஜலட்சுமி அம்மாள் (1911 நவம்பர் 11 – 1964)**

இவர் தமிழ், தெலுங்கு திரைப்படங்களில் கதை நாயகியாக நடித்தவர். முதல் தென்னிந்திய பெண் இயக்குநர், திரைக்கதை எழுத்தாளர், பாடகி, இசையமைப்பாளர், தயாரிப்பாளர், விடுதலைப் போராளி, சமூக சீர்திருத்தவாதி. 'கமலவல்லி அல்லது டாக்டர் சந்திரசேகர்' என்ற இவரது புதினம் பெண்களுக்கு எதிரான கட்டாயத் திருமணத்தை எதிர்த்தது, பெண் புரட்சிக்கு அடித்தளம் அமைத்தது. இதே புதினத்தை 'மிஸ் கமலா', என்ற பெயரில் திரைப்படமாக இவரே தயாரித்து, இயக்கி, நடித்தார். இவர், தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

14. **ஜெயலக்ஷ்மி ஆர் ஸ்ரீநிவாசன் (1911 டிசம்பர் 12 – 2011 மார்ச் 3)**

இவர், சிறுகதை, புதினம் எழுதியவர், சிறார் எழுத்தாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர். இவற்றோடு தமிழிலிருந்து கன்னடத்திற்கும் கன்னடத்தில் இருந்து தமிழுக்கும் மொழிபெயர்ப்புகள் செய்துள்ளார். தமிழக அரசின் சிறந்த நூலாசிரியர் விருது பெற்றவர்.

15. **பூரணி அம்மாள் (1913 அக்டோபர் 17 – 2013 நவம்பர் 17)**

கும்மிப் பாடல்கள் எழுதியுள்ளார். புதுக்கவிதைகள் எழுதி, 'பூரணி கவிதைகள்', என வெளியிட்டுள்ளார். கதைகள், புதினங்கள், செவி வழிக் கதைகள் என்ற சிறுவர் நீதிக்கதைகள் இவற்றை எழுதியுள்ளார். இவர் திருப்பூர் சக்தி இலக்கிய விருதும், பொற்றாமரை இலக்கியத் தங்கப்பதக்கமும் பெற்றவர்.

16. **கமலா பத்மநாபன் ('1913 – 1945 நவம்பர் 12)**

தமிழ், ஆங்கிலம், கன்னடம் மொழிகளில் எழுதியவர். குறும்புதினங்கள், சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் போன்றவை இவரின் படைப்புகள். சில பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார்.

17. **கௌரி அம்மாள் (1913 – 1987)**

'கடிவாளம்', இவரின் முதல் புதினம். 'வீட்டுக்கு வீடு' இவரது சிறுகதைத் தொகுப்பு. சிறுமிகள், பெண்களின் சிக்கல்களைக் கதைக் கருவாகக் கொண்டு இவற்றை எழுதி உள்ளார். வாழ்வின் பிற்பகுதியில் ஆன்மிக ஈடுபாடு கொண்டு அது சார்ந்து எழுதினார்.

18. கிருத்திகா அம்மாள் (1915 பிப்ரவர் 13 – 2009 பிப்ரவரி 13)

தமிழ், ஆங்கில இலக்கியங்கள் படைத்துள்ளார். உளவியல், சிற்பம், ஓவியம் குறித்து கட்டுரைகள் எழுதியுள்ளார். 'புகை நடுவில்' இவரது முதல் புதினம். குட்டிப் பாட்டிக் கதைகள், குட்டிப் பாட்டிக் கட்டுரைகள் போன்றன இவரது சிறார் படைப்புகள்.

19. வசுமதி ராமசாமி (1917 ஏப்ரல் 21 – 2004 ஏப்ரல் 1)

விடுதலைப் போராட்ட வீரர், சமூக சேவகி, ஆன்மீகவாதி, இசை விரும்பி. தமிழ், ஆங்கிலத்தில் இலக்கியம் படைத்தவர். ஆனந்த விகடன் இதழில் 'தேவியின் கடிதங்கள்' என்ற பெயரில் இவர் எழுதிய பெண்களுக்கான வழி காட்டல் கட்டுரைகள் தனித்துவ மானவை. 'கேப்டன் கல்யாணம்', போர்க்களச் சூழலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட தனித்துவமான புதினம்.

20. கமலா விருதாச்சலம் (1917 – 1995)

'முதலைச்சட்டை', என்ற சிறுகதை இவரின் முதல் படைப்பு. பல சிறுகதை களை எழுதியுள்ளார். எழுத்தாளர் புதுமைப்பித்தனின் வாழ்விணையர். அவர்களின் வாழ்வியலை, ' புதுமைப்பித்தனின் சம்சார பந்தம்', என்ற நூலாக எழுதினார்.

21. சித்தி ஜீனைதா பேகம் (1917 – 1998 மார்ச் 19)

முதல் இஸ்லாமியப் பெண் எழுத்தாளர். இலக்கியம், ஆன்மீகம் இரண்டையும் போற்றியவர், 'காதலா? கடமையா?' இவரது முதல் புதினம். பல கட்டுரை களும் கதைகளும் எழுதியவர். இஸ்லாத் துக்குள் பெண்களின் அடிப்படை உரிமைக்காகவும் எழுதினார்.

22. லஷ்மி அம்மாள் (1921 மார்ச் 23 – 1987 சனவரி 7)

குடும்பச் சூழல்சார் கதைகளைப் படைத்தவர். 120 க்கு மேற்பட்ட புதினங்களும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். கட்டுரைகள், வானொலி நாடகங்கள், வரலாறு, மருத்துவம், தன்வரலாறு எழுதியவர். கதை எழுதிப் பெற்ற வருவாயில் தன் படிப்பை மேற்கொண்டவர். தனக்குப் பிடித்த கண்ணபிரான் என்பவரை சாதி, மதம் கடந்து திருமணம் செய்து தென் ஆப்பிரிக்கா சென்று வாழ்ந்தவர். அரசு மருத்துவராக அங்கு பணியாற்றியவர். இவரின் பிந்தைய எழுத்துகள் பெண் உரிமை பேசின. 'ஒரு காவிரியைப் போல' என்ற இவருடைய புதினம் சாகித்ய அகாடமி விருது பெற்றது.

23. சரோஜா ராமமூர்த்தி (1921 சூலை 27 – 1991 ஆகஸ்ட்8)

இவர் 600 க்கு மேற்பட்ட சிறுகதைகளும் 10 புதினங்களும் எழுதியுள்ளார். பெண் கல்வி, பெண் விடுதலை இவற்றில் நம்பிக்கை கொண்டு எழுதியவர். இவருடைய எழுத்துகள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. திருமணத்தோடு பெண்ணின் வாழ்க்கை முடிவதில்லை என்று அவர்களின் உணர்வையும் உரிமையையும் பேசியவர்.

24. அநுத்தம்மா (1922 ஏப்ரல் 16 – 2010 டிசம்பர் 3)

300 சிறுகதைகள், 15 புதினங்கள், நான்கு சிறுவர் இலக்கிய நூல்கள், ஒரு மொழிபெயர்ப்பு நூல் இவரின் எழுத்துப் படைப்பு. கலைமகள் இதழ் நடத்திய புதினப் போட்டியில் இவரின் 'மணல் வீடு' முதல் பரிசு பெற்றது. இவரின் பிரம கீதம் என்ற புதினம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்றது. இவரின் ,'ஒரே ஒரு வார்த்தை', தமிழின் முதல் உளவியல் புதினம் என்ற அடையாளத்தைப் பெற்றது.

25. எம் எஸ் கமலா அம்மாள் (1922 ஏப்ரல் 17)

'கன்னி தெய்வம்', 'காதல் தோல்வி', இவரின் தமிழ்ச் சிறுகதை தொகுப்புகள் மனித தெய்வம் இவருடய புதினம். இவர் தெலுங்கில் இருந்து தமிழுக்கு மொழி பெயர்ப்புச் செய்துள்ளார். 1966 இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தார். அப்போது தமிழ் எழுத்தாளர்கள் யார்? எவர்? என்ற நூல் வெளி வந்தது.

26. கிருஷ்ணா அம்மாள் (1924 – )

ஏழுக்கும் மேற்பட்ட புதினங்களும் 10க்கும் மேற்பட்ட குறும்புதினங்களும் 250 க்கும் மேற்பட்ட சிறுகதைகளும் எழுதியவர். எளிய இனிய நடையில் மக்கள் உணர்வுகளைப் படம்பிடித்து எழுதியவர்.

இலக்கிய ஆளுமைகைளின் இலக்கியப் பங்களிப்பு, அவர்கள் பதித்த தனி முத்திரைகள், முன் மாதிரிகள் போன்றனவற்றைப் பெருமையுடன் நினைவு கூர்ந்து போற்றுவது, வளரும் தமிழ்ச் சமூகத்தின் கடப்பாடாகும்.

நன்றி: எழுத்தாளர் இரா.பிரேமா அவர்கள்



# வட அமெரிக்க வாழ்க்கைக்குச் சங்கத் தமிழிலிருந்து பாடல்கள்



அருள்செல்வி அமிர்தலிங்கம்
கலிபோர்னியா

சங்கத் தமிழ் பாடல்கள் நம் முந்தைய தமிழர் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவது மட்டுமில்லாமல் காலத்தை வென்று தமிழர் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் நம்மோடு தொடர்ந்து பயணித்து வருகின்றன. இந்தச் செயற்கை நுண்ணறிவு காலத்திற்கும் சங்கத் தமிழ் பாடல்கள் பொருந்தும் என்பதனை யாராலும் மறுக்க இயலாது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" (புறம் .192)

என்ற கணியன் பூங்குன்றனார் பாடல் வரிகளும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள். 972)

என்ற திருக்குறளும் வலியுறுத்தும் உலக சகோதரத்துவத்தை அமெரிக்கர் ,சீனர், கொரியர், ஜப்பானியர், என்ற வேறுபாடுகள் இல்லாமல் சகோதரத்துவத்துடன் வாழும் நம் தமிழர்களின் வட அமெரிக்கா வாழ்வில் காணமுடிகிறது.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (குறள் 322),

என்ற திருக்குறளும்,

"நீரின்றி அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே"

என்ற புறநானூறு 18 ஆம் பாடல் வரிகளும் உலகில் ஒருவருக்கொருவர் உதவி பசிப்பிணி அண்டாமல் பாரில் வாழ வலியுறுத்தும் மிகச்சிறந்த அறக்கருத்துகள் ஆகும்.

உலகில் வாழும் மக்கள் எல்லோருக்கும்

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக்குமே!"

என்று நக்கீரனார் புறநானூறு பாடல் 189 இல்

"நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்று வலியுறுத்தியுள்ளார்.

குறுந்தொகையில், கூடலூர் கிழார் இயற்றிய நூற்றி அறுபத்தி ஏழாம் பாடல்

"முளி தயிர் பிசைந்த காந்தள் மெல் விரல்,
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்,"

அமெரிக்காவில் வாழும் மகள், மகன் வீட்டுக்கு வந்து, அவர்கள் சீரும் சிறப்புமாய் நம் தமிழ் பாரம்பரிய உணவு வகைகளை விட்டுக் கொடுக்காமல் சமைத்து உண்பதை கண்டு மகிழும் பெற்றோரின் மனநிலையை காட்சிப்படுத்திக்காட்டுகிறது.

உறவுகளைவிட்டு வெகுதூரம் வந்த தமிழர்கள், நண்பர்களையே உறவுகளாகப் பாவித்து, நட்புக்கு மரியாதை காட்டும் உயர் பண்பு கொண்டவர்களாய் வாழும் தேசம் வட அமெரிக்கா. இந்நாட்டில், நண்பர்கள், ஒரு இக்கட்டான நிலை என்று வந்தால்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு".

என்பதற்கேற்ப ஓடி வந்து உதவி செய்யும் பெரும் குணத்தை உடையவர்கள். நட்பின் இலக்கணமாய் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் வாராரென்ற சான்றோர்க்கு அவர் வருவாரென்று சொல்லிய

புறநானூற்றுப் பாடல்

பிசிரோ னென்பவென் னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே." (புறம் 215)

சங்கத் தமிழ் பாடல்கள் தமிழன் உணர்வில் கலந்துள்ளது, எந்தத் தேசம் நாம் சென்றாலும், எத்துணை தூரம் தாய் மண்ணைவிட்டு நாம் விலக நேர்ந்தாலும், சங்கத்தமிழ் பாடல்கள் வலியுறுத்தியுள்ள அறக்கோட்பாடுகளின் வழியேதான் நம் தமிழ் உடன் பிறப்புகள் எல்லோரும் இனிதே வாழ்ந்து வருகின்றோம். உயர் பண்புகளைக் கற்றுக்கொடுக்கும், சங்கத் தமிழ் பாடல்கள் தமிழர்களை எந்த மண்ணிலும் உயர்வாய் வாழவைக்கும்.

வாழ்க தமிழ்! வெல்க தமிழ்!!


பேரவையின் 38 ஆவது தமிழ் விழா
சிறக்க எமது வாழ்த்துகள்
TN 14 AT 1
ADITYARAM
FILM CITY
50, SH 49, Adityaram Nagar, Panaiyur, Chennai, Tamil Nadu 600119.
+91 76677 77777 | +91 44 2453 5555
sales@adityaramproperties.com



# உயிர்த்தமிழ்

## கவிஞர் அறிவுமதி

### "கயத்திட்ட வித்து"

"கயத்திட்ட வித்து
வறத்திற் சாவாது
கழைக் கரும்பின் ஒலிக்குந்து"
-புறநானூறு -137
மண்ணில் விதைத்துதான்
மகசூல்
பார்த்திருக்கிறோம்.
இது என்ன..
கயத்தில் விதைத்து
கரும்பாய்
தழைப்பது!

அதுவா.. அதுவும்
ஒரு
வேளாண்மை முறைதான்
நீர்த்தேக்க நீர் நிலையின்
கீழ் உள்ள
வண்டலில்
விதை விதைத்து
அவை நீர் மீறி
உயர்ந்து விளைய..
பாசனத்திற்குத்
தண்ணீர்
திறந்துவிட..
திறந்து விட..

நீர் வடிந்து
வறண்டு தெரியும்
வண்டலிலும்
வாடாமல்
வளமாக விளைந்து
அறுவடைக்கு
அழைக்கிற
அந்த
நெல்லிற்குப்
பெயர்..
'மடுமுழுங்கி நெல்'

இதே முறையில்
இன்றும்
மேட்டூர் அணைக்கட்டின்
சில
வண்டல் பகுதிகளில்
விளைவிக்கிற
நெல்லிற்குப்
பெயர்
"கோராலி'.

உண்மைதானே..
நீரின்றி அமையாது
நெல்லும் !

### "போர்க் கதவு"

-பட்டினப்பாலை-40
-மதுரைக்காஞ்சி -354
முற்றுகையிட பகைமன்னர்கள்
வருகிற
செய்தி கேட்டு
மூடித்
தாழ்ப்பாள்
போட்டுக் கொள்கிற
கதவுக்குப்
பெயர்தானே
போர்க்
கதவு!

இல்லை.
பின்னே?

களம்பாடிய புலவர்களின்
கண்கள்
வழியே போய்
உள்ளத்தில்
படிந்த
ஒரு
கொடிய
காட்சியே
இந்தச் சொல்லை
உருவாக்கியிருக்கிறது.

என்ன காட்சியது?

மோதிக் கொள்ளத்
தயாராக இருக்கும்
இரு
பெரும்படைகள்
போர்
தொடங்குவதற்கு
முன்
காத்திருக்கும்
அல்லவா!
ஆமாம்..சற்று
இடைவெளி
விட்டு
ஒரே ஒழுங்கமைவில்
கட்டளை ஒலிக்காகக்
காத்திருப்பார்கள்.

'போர்' தொடங்கலாம்'
என்கிற
முரசு முழங்கியதும்
பறவைப் பார்வையில்
இரு படைகளும்
ஒரு
சேரவந்து
மோதிக்
கொள்வார்கள்
இல்லையா!

அந்தக் காட்சியை
அடிக்கடிக்
கண்டதனால்தான்
'இரட்டைக்
கதவு'
என்று
இயல்பாய்
சொல்லியிருக்க வேண்டிய
சங்கப்
புலவர்கள்
'போர்க்
கதவு'
என்று
பதிவு செய்திருக்கிறார்கள்

இரண்டு கதவுகள்
மூடுகிற
காட்சியில்
கூட
போரின் தாக்கம்
புலவர்கள் எழுத்தில்
என்ன
செய்திருக்கிறது
பாருங்கள்!


VIT
Vellore Institute of Technology
STUDY IN
INDIA
Engineering | Architecture | Design
Law | Agriculture | Fashion Techonology
Hospitality | Management | Commerce | Sciences
A++
ACCREDITED UNIVERSITY
Ministry of Education
nirf
2024, Govt. of India
RANKED 10 IN UNIVERSITY
RANKED 11 IN ENGINEERING
RANKED 13 IN RESEARCH
RANKED 19 IN OVERALL
QS WORLD UNIVERSITY RANKINGS
QS SUBJECT RANKINGS 2025
India Rank 09 Engineering & Technology Category
World Rank 142 Engineering & Technology Category
World Rank 51-100 Data Science & Artificial Intelligence
VIT Vellore Institute of Technology VELLORE | CHENNAI
VIT-AP UNIVERSITY
VIT BHOPAL
VIT MAURITIUS
VIT BANGALORE
Vellore Institute of Technology (VIT)
vellore-institute-of-technology
vituniversity
VIT_univ
Vellore Institute of Technology
vellore_vit



# தமிழ் எழுத்துகளின் காலவரிசை



முனைவர்
மெய் சித்ரா
ஆங்காங்

தென்னிந்திய எழுத்து முறைகளின் வரலாற்றில் தமிழ்-பிராமி (தமிழி) எழுத்துக்களின் வளர்ச்சி ஒரு சிறப்பான காலகட்டத்தைக் குறிக்கிறது. தமிழ்நாடு முழுவதும் - குறிப்பாய்ப் பொருந்தல், கொடுமணல், கீழடி, சிவகளை போன்ற அகழாய்வு தளங்களில் - அண்மையில் கிடைத்த தொல்பொருள்கள் - பொ.ஆ.மு 7 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய தொடக்கக் கால எழுத்தறிவையும் எழுத்து வளர்ச்சிக்கான உறுதியான சான்றுகளையும் வழங்கியுள்ளன. இந்த அகழாய்வு கண்டுபிடிப்புகள் தமிழ் எழுத்தின் காலவரிசை பற்றிய முந்தைய அனுமானங்களுக்குச் சவால் விடுவதாய் அமைந்தது. இது வர்த்தகம், நிர்வாகம், பண்பாடு கொண்ட மேம்பட்ட எழுத்தறிவு சமூகத்தின் இருப்பை எடுத்துக்காட்டுகின்றது.

தமிழியின் தொடக்க வடிவமான தமிழ் எழுத்துக்கள், பல அகழ்வாராய்ச்சித் தளங்களில் உள்ள மட்பாண்ட ஓடுகளிலும் நாணயங்களிலும் பொறிப்புகளிலும் காணப்பட்டுள்ளன. பொ.ஆ.மு 685ஆம் ஆண்டுக்கு முந்தைய பொறிப்புகளுடன் கூடிய சிவகளை, பொ.ஆ.மு 6 ஆம் நூற்றாண்டில் செழித்து வளர்ந்த நகர்ப்புறக் குடியேற்றமான கீழடி, அன்றாட எழுத்துகளின் தொடக்கக் கால பயன்பாடு பற்றிய தன்மைகளை வெளிக்காட்டுகிறது. பொ.ஆ.மு 5 ஆம் நூற்றாண்டுடன் தொடர்புடைய பொருந்தல் மற்றும் கொடுமணல், வர்த்தகம் மற்றும் கைவினைத்திறனில் எழுத்தறிவின் பரவலை மேலும் விளக்குகின்றன. பொ.ஆ.மு 4 ஆம் நூற்றாண்டில், தமிழிப் பொறிப்புகள் இந்தத் தளங்களில் தொடர்ந்து தோன்றி, இந்த எழுத்துமுறையின் பரவலான பயன்பாட்டைக் குறிக்கின்றன.

தமிழ்நாட்டின் தமிழி எழுத்துக்களை முதன்முதலில் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் படித்துக் காட்டியவர் கே.வி. சுப்பிரமணிய அய்யர் ஆவார். தமிழ்நாட்டில் காணப்படும் தமிழிப் பொறிப்புகளை, குறிப்பாய்க் குகைகளிலிருந்தும் (மாங்குளம்) மட்பாண்டங்களிலிருந்தும் வெற்றிகரமாகப் புரிந்துகொண்டு, தொடக்கக் கால தமிழ் மொழி, தமிழரின் பண்பாட்டுடனான தொடர்பை நிறுவினார். தமிழி எழுத்துக்களின் ஆய்வு, பல தொல்பொருள் மற்றும் கல்வெட்டு ஆய்வுகள் வழியாய் உருவாகியுள்ளது. டி.வி. மகாலிங்கம் மற்றும் ஐராவதம் மகாதேவன் போன்ற தொடக்கக் கால அறிஞர்கள் தமிழிப் பொறிப்புகளைப் புரிந்துகொண்டு, அவற்றின் மொழியியல் சிறப்பினை நிறுவுவதில் குறிப்பிடத்தக்கப் பங்கு வகித்தனர். மகாதேவனின் தொடக்கக் கால தமிழ்க் கல்வெட்டு (2003), தமிழிப் பொறிப்புகள் மற்றும் அவற்றின் கட்டமைப்பு கூறுகள் பற்றிய விரிவான பகுப்பாய்வை வழங்கியது.

தமிழுக்கு 400 ஆண்டுகளுக்குப் பிறகு வந்த மௌரியப் பிராமி மற்றும் பிராகிருத பொறிப்புகள் போன்ற பிற தொடக்கக் கால எழுத்துக்களுடன் ஒப்பிடும் ஆய்வுகள், தமிழின் தனித்துவமான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. கே. ராஜன் மற்றும் ஒய். சுப்பராயலு போன்ற அறிஞர்கள், தமிழி எழுத்துக்கள் தொடக்கக் கால தமிழின் ஒலிப்புக்கு ஏற்றவாறு பிராமி சின்னங்களை மாற்றியமைத்ததாய் வாதிட்டனர். கதிரியக்க கரிமம் (Radio Carbon), வெப்பஒளிர்வு (thermoluminescence) கால அளவீடு (dating) உள்ளிட்ட சமீபத்திய அறிவியல் கால அளவீட்டு முறைகள், இந்தக் காலவரிசை மதிப்பீடுகளை சரிபார்த்து, எழுத்து படிமலர்ச்சியின் (evolution) மிகவும் வலுவூட்டக் கூடிய காலவரிசையை வழங்குகின்றன.

பொருந்தல், கொடுமணல், கீழடி, சிவகளை ஆகியவற்றிலிருந்து தோண்டியெடுக்கப்பட்ட ஆதாரங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், இந்தக் கட்டுரை தமிழ் எழுத்துக்களின் தோற்றத்தையும் படிமலர்ச்சியையும் தெளிவான கால வரிசையில் வழங்குகிறது. இது தமிழ் எழுத்தறிவின் தேதியை, பொ.ஆ.மு 7 ஆம் நூற்றாண்டுக்கு, பின்னுக்குத்




படம் 1, தமிழி எழுத்துமுறையின் காலவரிசை வளர்ச்சி

தள்ளுகிறது. இது தமிழ் எழுத்துக்களின் பூர்வீக வளர்ச்சியை வலுப்படுத்துகிறது. தொடக்கக் கால தமிழ் ஒலிப்புக்கு அதன் தழுவலையும் தமிழ் நாகரிகத்தின் மொழியியல் அடையாளத்தை வடிவமைப்பதில் அதன் பங்கையும் காட்டுகிறது. நகர்ப்புறம், புதைப்பிடம், வர்த்தகம், கைவினைத்திறன் ஆகிய சூழல்களில் எழுத்து பயன்பாட்டின் படிமலர்ச்சியைப் பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகிறது. தொடக்கக் காலத் தமிழ்ச் சமூகத்தில் அதன் பரவலான இருப்பை நிறுவுகிறது.

### தள வாரியான பகுப்பாய்வு

### பொருந்தல் (பொ.ஆ.மு 5 ஆம் நூற்றாண்டு)

பொருந்தலில் உள்ள பொறிப்புகளில் "வைரா" (வைரம் என்று பொருள்) என்ற சொல் உள்ளது. இது மதிப்புமிக்க பொருட்களைக் குறிக்க, எழுத்துரு பயன்படுத்தப்பட்டதைக் குறிக்கிறது. கூடுதலாய், புதைக்கப்பட்ட இடங்களில் 2.5 கிலோ பாதுகாக்கப் பட்ட தானியங்கள் குறிப்பிடத்தக்க அளவில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது விவசாய சேமிப்பையும் வர்த்தகத்தின் தொடக்கக் கால ஆவணங்களையும் குறிக்கிறது.

### கொடுமணல் (பொ.ஆ.மு 5 ஆம் நூற்றாண்டு)

தொழில் துறை நடவடிக்கைகளுக்குப் பெயர் பெற்ற கொடுமணல், தமிழி எழுத்துருக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளை வழங்கியது. இது வர்த்தகத்துடனும் கைவினைத்திறனுடன் தொடர்புடையதாய் இருக்கலாம்.

### கீழடி (பொ.ஆ.மு 6 ஆம் நூற்றாண்டு)

நகர்ப்புற குடியேற்றமான கீழடியில் நடந்த அகழ்வாராய்ச்சியில், தொடக்கக் கால தமிழி எழுத்துக்களைக் கொண்ட ஏராளமான எழுத்துருக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் பானை ஓட்டுக் குறிப்புகள் வர்த்தகம், நிர்வாகம், பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஒரு எழுத்தறிவு பெற்ற சமூகத்தின் இருப்பைக் குறிக்கின்றன. தென்னிந்தியாவில் தொடக்கக் கால நகரமயமாக்கலையும் எழுத்துப் பயன்பாட்டின் நேரடி ஆதாரங்களையும் இந்தத் தளம் வழங்குகிறது.

### சிவகளை (பொ.ஆ.மு 7 ஆம் நூற்றாண்டு)

சிவகளையில் உள்ள புதைப்பிடப் பானைகளில் தமிழிப் பொறிப்புகள் கிடைக்கப்பெற்றன. அவை பொ.ஆ.மு 685 வரை நீண்டுள்ளன. இது இறுதிச் சடங்கு சூழல்களில் எழுத்து முறையின் தொடக்கக் கால பயன்பாட்டைக் குறிக்கிறது.

பொ.ஆ.மு 4 ஆம் நூற்றாண்டில், தமிழிப் பொறிப்புகள் மிகவும் பரவலாகி, நகர்ப்புற மையங்கள், வர்த்தக வழிகள், கைவினை மையங்கள் எனப் பல களங்களில் எழுத்துமுறையின் தரப்படுத்துதலையும் தழுவலையும் உறுதிப்படுத்தியுள்ளன. காலப்போக்கில், எழுத்து முறை மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இறுதியில் பொ.ஆ.மு 2-1 ஆம் நூற்றாண்டுக்குள் மரபு சார்ந்த தமிழ்ப் பொறிப்புகளை நோக்கி மாறியது.

பொருந்தல், கொடுமணல், கீழடி, சிவகளை ஆகியவற்றின் அகழாய்வுப் பொருட்கள், பொ.ஆ.மு 7 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழி எழுத்துமுறை பயன்பாட்டில் இருந்தது என்பதற்கான உறுதியான சான்றுகளை வழங்குகின்றன. கிடைத்த அகழ்வாராய்ச்சியின் முடிவுகளின் அடிப்படையில், தமிழி எழுத்துமுறையின் காலவரிசை வளர்ச்சி குறித்த காலவரிசைவரைபடம் படம் 1இல் காட்டப்பட்டுள்ளது.

தமிழி எழுத்துமுறை தொடக்கக் கால தமிழ்ச் சமூகத்தின் சமூக-பொருளாதார, பண்பாட்டு கட்டமைப்போடு ஆழமாய்ப் பின்னிப் பிணைந்த உள்நாட்டு அகழாய்வுப் பொருட்கள் என்ற கருத்தை இக்கட்டுரை வலுப்படுத்துகிறது. இது பல நூற்றாண்டுகளாய் ஒரு இலக்கிய மொழியாய், தமிழின் வளர்ச்சிக்கு அடித்தளமாய் விளங்கி இருக்கிறது.



# நன்னடையில் ஓராண்டு

## - செயற்குழு (2024-2026)

பேரவை ஆண்டுவிழாக்களுக்கு இடையிலான ஓராண்டில் பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த ஓராண்டில் அதன் வீச்சு பல்கிப் பெருகியுள்ளது. ஆண்டுவிழா முடிந்தவுடன், பேரவையின் இணையதளம் முற்றிலும் சீரமைக்கப்பட்டு, உண்மை, வெளிப்படை, நம்பகம் என்பதனைக் கட்டமைக்கும் பொருட்டு எல்லாத் தகவல்களும் பொதுப்பார்வைக்கு வைக்கப்பட்டன. செயற்குழு, பொதுக்குழு கூட்ட அறிக்கைகளும் உடனுக்குடன் வெளியிடும் பணிகள் துவக்கிவைக்கப்பட்டன.

தமிழ்நாட்டு மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அமெரிக்க வருகையை











முன்னிட்டு, பேரவை தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, செயற் குழுவினர் வரவேற்பளித்தனர். இந்தியாவின்மாண்புமிகு தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியிலும் பேரவைச் செயற்குழு கலந்து கொண்டு வரவேற்பளித்தது.

ஊடகக் குழு, தரவுசேமிப்புக் குழு, மாநில அரசின் கொடைபெறுதலுக்கான குழு, இடர்கால உதவிக்குழு(TamilER), தகவல் தொடர்புக் குழு என புதிதாகவும் சீரமைக்கப்பட்டதாகவும் 32 குழுக்கள் அமைக்கப்பட்டு, வாழ்வியல் மேம்பாட்டுக்கான பணிகள் பல முடுக்கிவிடப்பட்டுத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஐயன் திருவள்ளுவர் சிலைக்கான 25ஆவது ஆண்டுவிழாவினை, மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களின் சிறப்புரையோடு பேரவை கொண்டாடி, திருக்குறள் தமிழின் அடையாளமென்பதற்கான கட்டமைப்புப் பணிகளில் ஈடுபட்டது.

ஈழத்தில் ஏற்பட்ட பெரும்புயல், மழைவெள்ளத்தில் சிக்குண்டு போன தமிழர்களுக்கான புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு, அவர்களுக்கான தங்குமிடங்களைக் கட்டிக் கொடுக்கும் பணிகளை உள்ளூர்த் தன்னார்வலர்களுடன் செய்து முடித்தது பேரவை.

சென்னையில் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் சார்பாக தமிழிசை விழா சிறப்பாக நடத்தப்பட்டு, முதுபெரும் பாடகர் பி.சுசீலா அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய்ப் பணமுடிப்புடன் கூடிய தமிழிசைக்குயில் விருது வழங்கப்பட்டமை தமிழார்வலர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

ஒவ்வொரு காலாண்டிலும்,



பேரவைப் பொதுக்குழுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மாணாக்கர்களுக் கான உதவிகள், இளையோருக்கான மணமாலை, மரபுக்கலைகளைப் போற்றும் நிகழ்வுகளும், இலக்கிய நிகழ்வுகளெனப் பலவும் தொடர்ந்து ஈடேறி வந்து கொண்டுள்ளன.



**ஜான்சிராணி பிரபாகரன்**
**விஸ்கான்சின்**

சென்னையில், தமிழ் நாடு அரசு ஏற்பாடு செய்திருந்த அயலகத் தமிழர்நாள் விழாவில் பேரவைக்கான முகாமிடங்கள் அமைத்தும், தமிழ்ப்பின்னலை விரிவாக்கும் பணிகளைச் செய்தும் கடமையாற்றினர். பேரவை வரலாற்றில் முதன்முறையாக, இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கான வீரவணக்க நாள் நிகழ்த்தப்பட்டது. 2025 மே 18ஆம் நாள் தமிழின அழிப்பு நாள் கூட்டமும் இடம்பெற்றது. நூற்றாண்டு விழா நாயகர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களை நேரில் சந்தித்து, சிறப்புச் செய்தனர் செயற்குழுவினர்.

பேரவையின் TamilER குழுவினர், அமெரிக்கா, கனடாவிலிருந்து கிடைக்கப் பெறும் இடர்கால, துயர்காலச் செய்திகளுக்கு செவிமடுத்து, உதவிகளை உடனுக்குடன் செய்து வருகின்றனர். அமெரிக்காவில் ஏற்பட்ட அரசியல் மாற்றம், அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட குடிவரவுச் சிக்கல்களுக்கான உதவிகளை நிலைநாட்டும் பொருட்டு, பேரவைச் செயற்குழுவும், சட்டம், குடிவரவுக்குழுவினரும், உகந்த சட்ட வல்லுநர்களைக் கொண்டு முகாம்கள் விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தி உதவிகளை மேற்கொண்டன. பேரவையின் உறுப்பு அமைப்புகளின் எண்ணிக்கை 75க்கும் கூடுதலாக ஆகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. உறுப்பினர் சேர்க்கைக்குழு திறம்படச் செயலாற்றி, குறுகிய கால அவகாசத்தில், உறுப்பியப் புதுப்பிப்புப் பணிகளைச் செய்து முடித்துள்ளமை பாராட்டத் தக்கதாகும்.

வட அமெரிக்க வாகை சூடி எனும் பெயரில், போட்டிகள் நடத்தும் குழு சீரமைக்கப்பட்டு, அறிவியல், தொழில்நுட்பம் முதலான துறைகளிலும் நம் பிள்ளைகள் மேம்பட வேண்டுமென்பதற்காய், அறிவியல் தேனீ போட்டிகளும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. தமிழிசை, கல்வி மேம்பாடு, தமிழ் பட்டயப்படிப்பு, இலக்கியம், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு, ஊடகம், சட்டம், மரபுக்கலைகள், தரவு சேமிப்பு, ஈழத்தமிழர் செயற்பாடு என எல்லாக் குழுக்களும் தத்தம் குறிக்கோள்களைத் தழுவிய பணிகளில் முனைப்பாய் இயங்கி வருகின்றன.

# பேரவையின் 38ஆவது விழா சிறக்க எமது வாழ்த்துகள்




# வீரப்பன் சுப்பிரமணியன் குடும்பத்தினர்



# உயிராயுதமான ஈழத் தமிழ்



**தீபச்செல்வன்**
கிளிநொச்சி, ஈழம்.

தமிழால் இணைவோம், தமிழராய் வாழ்வோம் என்ற தொனிப் பொருளில் வட அமெரிக்கத் தமிழ் சங்கப் பேரவையின் ஆண்டு விழா நடைபெறுவது என்பது ஈழ மண்ணில் வாழ்கின்ற எனக்குப் பெரும் ஆறுதலை, கொண்டாட்டத்தை, அகநிறைவைத் தருகிறது. இன விடுதலைக்காகவும் இன உரிமைக்காகவும் மாத்திரமின்றி மொழியுரிமைக்காகவும் நிகழ்ந்தேறிய தமிழீழ விடுதலைப் போராட்ட மண்ணில் இருந்து தமிழால் இணைந்து தமிழராய் வாழும் பெருமிதத்தைப் பற்றிப் பகிர்வது என்பது அர்த்தம் நிறைந்தது.

ஈழ விடுதலைப் போராட்டம் துவங்குவதற்கு முந்தைய காலத்தில் அதாவது 1956ல் தனிச்சிங்களச் சட்டம் ஸ்ரீலங்கா அரசால் கொண்டுவரப்பட்டது. சிலோன் என்று அழைக்கப்பட்ட இலங்கைத் தீவின் விடுதலைக்காக பிரித்தானியர்களுடன் ஈழ மக்களும் போராடிய நிலையில்தான் விடுதலைக்குப் பிறகு இப்படி தனிச்சிங்களச் சட்டம் திணிக்கப்பட்டது. பண்டைய ஈழம் முழுவதும் தமிழ் தளைத்தோங்கிய நிலையில், சுதந்திரத்தின் பின், தமிழ் மொழியின் உரிமை மறுக்கப்பட்டு சிங்களத்தை திணிக்கும் செயற்பாடுகளை இலங்கை அரசு மேற்கொண்டது. அதற்காகவே ஈழத் தமிழ் மக்களைப் படுகொலைகளும் செய்தது. 1958 இனப்படுகொலை தமிழ்மொழிமீதான ஒடுக்குமுறையின் தொடர்ச்சியாக இனம்மீதான அழிப்பாக நிகழ்ந்தது.

கலவரத்தில் ஈழ மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் அவர்களின் உடலில் ஸ்ரீ எனும் பொருள்படும் சிங்கள எழுத்து நெருப்பாலும் தாரினாலும் பொறிக்கப்பட்டு ‘குறியிடும்’ துயரங்களும் நிகழ்த்தப்பட்டன. இந்த நிலையில்தான் மொழியின் விடுதலைக்காகவும் நிலத்தின் விடுதலைக்காகவும் இனத்தின் விடுதலைக்காகவும் ஈழ மக்கள் தனிநாடு கோரிய போராட்டத்தைக் கையில் எடுத்தனர். எழுச்சி கொண்ட ஈழத்தை



அடக்க இனப்படுகொலைகளைத் திறந்த யுத்தமாக இலங்கை அரசு பயன்படுத்தத் தொடங்கியது. ஆனால் இலங்கை அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்து, இலங்கை அரசின் ஈழ இனவழிப்பை எதிர்த்து வீடுகள் தோறும் இருந்து எண்ணற்ற இளைஞர்கள் புலிப்படைகளாக களம் புகுந்தார்கள்.

போரில் எங்கள் ஊர்களைக் கைப்பற்றுகிற இலங்கை இராணுவம், முதலில் தமிழீழ நிலத்தில் இருக்கும் தமிழ் பெயர்களைக் கரியால் பூசி அழித்துவிடுவதையும் அதன்மீது சிங்கள எழுத்துக்களைப் பொறிப்பதையும் பார்த்திருக்கிறோம். ஆனால் சில நாள்களோ, சில வருடங்களோ சிங்களப் படைகளின் ஆக்கிரமிப்பில் இருக்கும் ஈழ நிலத்தின்

பகுதிகளை புலிப் போராளிகள் மீட்டெடுத்த பின்னர், அங்கு மீண்டும் தமிழை அழகுபட உயிர்ப்பிப்பார்கள். நான் வாழும் கிளிநொச்சி நகரம் அப்படித்தான் தனித்துவமான நகரமாகத் திகழ்ந்தது.

கிளிநொச்சி போர்க்கள நகரமாயிருந்து புலிகளால் மீட்கப்பட்டவேளை எனது அண்ணா ஆனையிறவு இராணுவ முகாமை அண்டிய எல்லைப் பகுதியில் நிற்கும்போது அவனைப் பார்ப்பதற்காக அம்மாவும் நானும் கிளிநொச்சி வந்தோம். எங்கள் நகரின் பெயர்ப்பலகைகள் எல்லாவற்றையும் இராணுவம் அழித்திருந்தது. பின்னர் நாங்கள் கிளிநொச்சிக்கு மீள்குடியேறத் திரும்பிய சில நாள்களில் எங்களைப் போலவே தமிழும் கிளிநொச்சி நகரில் உயிர்த்திருந்தது. தமிழரசி நகைமாடம் என்றும் பாண்டியன் சுவையகம் என்றும் சேரன் வாணிபம் என்றும் இளவேனில் வாணிபம் என்றும் எங்கள் நகரம் தமிழோடு எழுந்தது.

தமிழீழ நிர்வாகத்துறை என்றும் தமிழீழ நீதிமன்றம் என்றும் தமிழீழ காவல்துறை என்றும் தமிழீழ நிழல் அரசின் நிர்வாக மையங்கள் நிறைந்த நிலையில் அன்று வடக்கு கிழக்கு ஈழ தேசம் நிமிர்வோடு இருந்தது. போரில் எனது அண்ணா வீரமரணம் எய்தியவேளை அவன் எழுதிய நாள்குறிப்பேடு குருதி படிந்த நிலையில் எனக்குக் கிடைத்தது. அதில் அவன் தமிழால் தேசம் பற்றியும் ஈழ இனம் பற்றியும் எழுதிய கவிதைகளும் குறிப்புக்களும்கூட, பேனா மையினால் எழுதப்பட்டவையாக எனக்குத் தோன்றவில்லை. அவன் குருதியால் எழுதப்பட்டவை என்றே எனக்குத் தோன்றியது.

2009இல் நாம் மாபெரும் இனப்படுகொலையை சந்தித்தபிறகு, மேற்சொன்ன எங்கள் தேசம் இனப்படுகொலையால் அழிக்கப்பட்ட பிறகும் ஒரு பள்ளி ஆசிரியராக, நான் காலையில் என் பிள்ளைகளின் பெயரை வரவு இடாப்பில்(மாணவர் பதிவேடு) இருந்து இப்படித்தான் அழைக்கத் தொடங்கினேன். விண்கதிர்... கலைமுகில்... சமர்மாறன்... அருட்செல்வி... யாழினியன்... ஈழநிலவன்... இத்தனை அழிவுகளின் பின்னரும் மீண்டெழுகிற ஈழ நிலத்தில் நாம் உயிராயுதமாக வரித்துக் கொண்ட தமிழ் இருக்கிறது. கலப்பின்றி, செழுமையாக சொற்களுடன் ஈழத்தில் இருக்கும் தமிழ், உலகமெங்கும் வாழும் தமிழ் உறவுகளுடன் ஒரு உயிர்ப்பான இணைப்பினை ஏற்படுத்தி நிற்பதே தமிழால் இணைவோம், தமிழராய் வாழ்வோம் என்பதன் நிதர்சனம்.






# குழந்தைகளுக்குத் தமிழ் வரிவடிவைக் கற்பிக்க எளிய வழிமுறைகள்



பேராசிரியர்
தி. சி. சத்தியம்
தமிழ்நாடு

### முன்மொழி

குழந்தைகளின் உடல், மனம், அறிவுத் திறமோடு இசையும் வகையில் வடிவமைக்கப்படும் கல்வியே அவர்களை எளிதாகச் சென்றடைய முடியும். அத்தகைய கல்வி, குழந்தைகளின் அறிதல் திறனைத் தூண்டி துலங்கச் செய்திடும், அறிந்ததிலிருந்து அறியாதவற்றை நோக்கி அவர்களை ஆர்வத்துடன் அழைத்துச் சென்றிடும். எளிமையில் இருந்து கடினம் நோக்கித் தன்னம்பிக்கையுடன் செயல் படுத்தும். மொத்தத்தில் கல்வி, அறிவுத்திணிப்பாக இல்லாமல் ஆக்க ஆற்றலை மலர்த்தும். இத்தகைய தெளிவுடன், தமிழ் பேசும் குழந்தைகள் தமிழ் எழுத்துகளை எளிதாக எழுதிப் பழகிட, சில வழிமுறைகளை இக்கட்டுரை முன்மொழிகிறது.

### எழுத்து வடிவைப் பயிற்றுவிக்கும் முன்

தமிழ் பேசத் தெரிந்த குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது முதலில், அவர்கள் அறிந்த வகையில் பேசுவதற்கான சூழலை ஏற்படுத்த வேண்டும். பின்னர் சொற்களில் இடம்பெறும் ஒலிகளைத் தனித்து அறிவதற்கும் முறையாக இணைத்து சொற்களை ஒலிப்பதற்கும் பயிற்சி அளிக்க வேண்டும். அதற்குப்பின் ஒலியின் குறியீடாக விளங்கும் எழுத்து வடிவை அறிவதற்கு ஆயத்தப்படுத்த வேண்டும். எடுத்தவுடன் எழுத்துகளை எழுதும் முயற்சியில் ஈடுபடுத்தக் கூடாது. முதலில் எழுது பொருளில் அவர்கள் மனம் போன படி கிறுக்க வாய்ப்பு அளிக்க வேண்டும். அடுத்து தெரிந்த எளிய வடிவங்களை வரையச் செய்ய வேண்டும். பிறகு சூரியன், முழு நிலா, பிறை நிலா,பூ, இலை, மரக்கிளை போன்ற வடிவங்களை எளிய முறையில் வரையப் பழக்கலாம். இத்தகைய வரைதல் முன்னோட்டத்திற்குப் பிறகு நெடுக்குக்கோடு, கிடைக்கோடு, வட்டம், வளைவு, புள்ளி போன்ற வரைவுகளால் உருவாக்கப்படும் எழுத்து வரி வடிவங்களை அறிமுகப்படுத்த வேண்டும். அப்போது, வடிவங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, எளிதாக எழுதப் பழகுவார்கள்.

### எழுத்து வடிவங்களை எளிமையாகப் பயிற்றுவித்தல்

தமிழில் எழுத்தொலிகளும், அவற்றைக் குறிக்கும் வரிவடிவங்களும் மிகுதி. மொத்தம் 247 வடிவங்கள். தமிழை எழுதப் பழகுவதில் இது பெருஞ்சிக்கலாகக் கருதப்படுகிறது. எழுத்து வடிவ முறைகளைத் தெளிவாக அறிந்து கற்பித்தால், இச்சிக்கலை எளிதாகக் கடந்து விட முடியும்.

தமிழின் அடிப்படை எழுத்தொலிகளாகிய உயிர் 12, மெய் 18 க்குரிய எழுத்து வடிவங்கள் 30. மெய் எழுத்துகளின் புள்ளிகளை மட்டும் நீக்கினால், 18 அகரவரிசை உயிர்மெய் வடிவங்கள் எளிதாகக் கிடைத்து விடும். மற்ற உயிர்மெய் வடிவங்களை எழுத, 15 வகையான துணை எழுத்துகளையும், இணைக்கும் முறையையும் அறிந்தால் போதும். அடிப்படை வடிவம் முப்பதும், புள்ளி நீக்கலும், இணக்கப்பட வேண்டிய 15 துணை எழுத்துகளும் அறிந்து கொண்டால், தமிழில் தடையின்றி எழுத முடியும், ஆக 46 வடிவ முறைகளைக் கொண்டு 246 எழுத்துகளை எளிதாக எழுதி விடலாம்.

எழுத்துக்களை அறிமுகப்படுத்தும் போது, நெடுங்கணக்கு முறையைப் பின்பற்றாமல் எளிய வடிவில் தொடங்கி, வரிசையாகக் கூடுதல் வரைவுக்கு அழைத்துச் சென்றால், கற்பது எளிதாகும்.

### காட்டுகள்

ட, ப, ய, ம, ர
ட், ப், ய், ம், ர், ஈ

இவ்வாறு எளிய வளர்ச்சி முறையில் சில எழுத்து வடிவங்களை அறிமுகப்படுத்திய பிறகு, அவற்றைப் பயன்படுத்தி, எளிய சொற்களை எழுதும் பயிற்சியை அளிக்கலாம். காட்டாக படம், பாடம், மடம், மாடம், பாப்பா, மாமா, பார், யார் போன்ற சொற்களை மேற்குறித்த எழுத்துகளில் இருந்து உருவாக்கிக் காட்டி எழுதச் செய்யலாம். எழுத்துகளாகவே தொடராமல்

சொல்லாக்கத்தையும் சேர்க்கும்போது குழந்தைகள் ஊக்கமுடன் தொடர்வார்கள்.

### எளிமை நோக்கில் தமிழ் எழுத்துகளின் வரிசை

**உயிர் எழுத்துகள்:**

ஈ, எ, ஏ, உ, அ, ஆ, இ, ஒ, ஓ, ஐ, ஊ, ஔ

**மெய் எழுத்துகள்**

ட், ப், ய், ம், ழ், வ், ல், ர், ந், த்,

ற், ள், ன், ண், ச், க், ங், ஞ்

உயிர்மெய் எழுத்துகளுக்குரிய துணை எழுத்துகள்:

உயிர்மெய் எழுத்துகளுக்குரிய துணை எழுத்துகளையும் இவ்வாறு எளிய நோக்கில் வரிசைப்படுத்திக் காட்டலாம். உயிர்மெய் எழுத்துகளுள் உகர, ஊகார வடிவங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட துணை எழுத்து வடிவங்கள் உள்ளன.

**உகர உயிர்மெய் வடிவங்கள்**

பு, யு, வு, சு, ஙு

லு, நு, து, று, னு, ணு, ஞு

டு, மு, ழு, ரு, ளு, கு

**ஊகார உயிர்மெய் வடிவங்கள்**

பூ, யூ, வூ, சூ, ஙூ

லூ, நூ, தூ, றூ, னூ, ணூ, ஞூ

டூ, மூ, ழூ, ரூ, ளூ, கூ

இத்தகைய வரிசை முறையில் எழுதும் பயிற்சி எழுத்து வடிவங்களை தெளிவாகப் புரிந்து கொள்ளச் செய்யும். எளிதாக எழுதிட துணை புரியும்.

### சொற்களில் இடம்பெறாத எழுத்துகளைத் தவிர்த்தல்

உயிர்மெய் எழுத்து வடிவங்களில், ஔகார வரிசையில் 18, ஙகர வரிசையில் 17, ஞகர வரிசையில் ஞ, ஞா தவிர்த்த 15 ஆக 50 எழுத்துகள் சொற்களில் இடம்பெறுவதில்லை. தொடக்க நிலையில் இவ்வெழுத்துகளைத் தவிர்க்கலாம். வளர்நிலையில் தமிழ் நெடுங்கணக்கின் அமைப்பியலைக் கற்பிக்கும் போது இணைத்துக் கொள்ளலாம். இவ்வாறு குழந்தைகளுக்குச் சுமையைக் குறைக்கலாம்.

### ஓசை நயமுடன் எழுதும் பயிற்சி

ஒரே எழுத்தொலியில் தொடங்கும், ஒரே எழுத்தொலியில் முடியும், ஒரே எழுத்து ஒலியை இடையில் பெறும் ஓசை நயமுடைய ஒத்திசைக்கும் சொற்களை எழுதச் செய்யலாம். அப்போது, ஓசை நயமோடு மீண்டும் மீண்டும் ஒரே எழுத்தை எழுதுவதால், எழுத்து வடிவமும், குழந்தைகளின் மனதில் எளிதாகப் பதியும்.

### முனைப்பு மொழி

பொதுவாக, குழந்தைகளுக்கு, ஆடல், பாடல், தேடல், கண்டுபிடித்தல், பிரித்தல், இணைத்தல், உருவாக்கல் போன்ற செயல்களில் ஈடுபாடு மிகுதி. இத்தகைய ஈடுபாடுகளுக்கு இடம் அளிக்கும் வகையில் தமிழ் மொழிக் கல்வியை வடிவமைத்தால் கல்வி கலையாகும். கற்பது எளிதாகும். தமிழின் இனிமையும் நீர்மையும் குழந்தைகளின் அழகிய ஆளுமையாகும்.

## முதுபெரும் தமிழறிஞர் இரா. இளங்குமாரனார்



முதல் முறையாக இராலே வட கேரொலைனா-வில் நடந்த பேரவை விழாவின் சிறப்பு விருந்தினாராய், கவியரங்கத் தலைவராய் இருந்தவர் தமிழ் மூதறிஞர் இளங்குமாரனார். அவரை வரவேற்று அழைத்து வர விமான நிலையம் சென்ற தம்பதியினர் நீங்கள் எங்கள் வீட்டில் தங்குகிறீர்கள் ஐயா என்றபோது நம் வீடு எனச் சொல்லுங்கள் என்றார். இளையோரும் பெரியோரும் வியந்து போற்றும் மாமனிதர் நூற்றுக்கும் மேற்பட்ட திருமணங்களைத் தமிழ் முறைப்படி நடத்தியுள்ளார். உள்ளச் சோற்வுற்றோர் பலர் மீண்டுவர உறுதுணையாய் திருச்சி அருகில் அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலையை அமைத்து நிழலும் நூலும் பேணிய பெருந்தகை. இனிக்கும் இலக்கணம், கட்டுரைப் பயிற்சி, பிழையில்லாமல் எழுதுவது எப்படி எனத் தொடங்கி 5000 பக்கங்கள் கொண்ட அகராதி என நூரற்றுக்கும் அதிகமான நூல்கள் எழுதியுள்ளார். 94 வயதுவரை தமிழோடு பயணித்த அவர்தம் நூல்களை வேண்டிப் படிப்போம், வெற்றிநடை போடுவோம்.



# மாமதுரை தொழில்முனைவோர் மாநாடு



**எழிலன் இராமராசன்**
ஜார்ஜியா

தமிழ் வளர்த்த மதுரையில், பேரவையின் தொழில்முனைவோர் மாநாட்டினை, ஜனவரி 18, 2025ஆம் நாள், சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு ஆ.வெங்கடேசன், மாண்புமிகு எம். பூமிநாதன், மாமன்றத் துணைத்தலைவர் நாகராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கித் துவக்கி வைத்தனர். தேவி நாகப்பன் அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

பேரவைத் தலைவர் விஜய் மணிவேல், மாநாட்டின் நோக்கங்கள் குறித்துப் பேசினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாரதி பாண்டி, தொழில்முனைவோர் மாநாட்டின் அவசியம் குறித்துப் பேசினார். பாராமவுண்ட் நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் இராம் முருகேசன் அவர்கள், அடிப்படை நுணுக்கங்களை அறிந்து கொள்வதன் அத்தியாவசியம் குறித்துப் பேசினார். பொருளாதார வளர்ச்சிக்கான வழிகளை விரித்துரைத்துப் பேசினார் அறிவியலாளர் வெ.பொன்ராஜ்.

சுகாதாரத்துறையை செயற்கை நுண்ணறிவுப்புலம் கொண்டு மேம்படுத்துவதன் வழிகள் குறித்த கலந்துரையாடலில், எழிலரசன் நடராஜன்(*CEO at CoreStack*), சுந்தர் அழகுராஜ், நானு சுவாமி, அனு பிரியா







முதலான நிறுவனச் செயல் அலுவலர்களும் நுட்ப வல்லுநர்களும் பேசியமை விழிப்புணர்வு ஊட்டியதாக அமைந்தது. சிங்கை ஜி.ராமச்சந்திரன் அவர்களது பேச்சு, அனைவரையும் ஈர்ப்பில் ஆழ்த்தியது. லட்சுமி செராமிக்சின் நிர்வாக இயக்குநர் முத்துராமன், தொழில்முனைவின் சிறப்புகள் குறித்துப் பேசினார்.

பேரவைத் துணைத்தலைவர் எழிலன் இராமராஜன் அவர்களது நெறியாள்கையில், கருப்பொருளில் இருந்து பொதுநிறுவனமாக்குவது(IPO) வரையிலுமான படிநிலைகள் குறித்த பல்வேறு தகவல்கள், முழுப்பரிமாணத்தையும் ஊட்டத்தக்கதாக இருந்தன. கலந்துரையாடலில் தொழில் வல்லுநர்கள் ஐயா பாலகன் ஆறுமுகசாமி, இந்தியா சிமெண்ட்ஸ் செயல் அலுவலர் பார்த்தசாரதி இராமனுஜம், லேனா கண்ணப்பன், பிரேமானந் சேதுராஜன் முதலானோர் கலந்து கொண்டனர்.

பேரவைப் பொருளாளர் வள்ளிக்கண்ணன் மருதப்பன் அவர்களது நெறியாள்கையின்கீழ், வணிகத்தைக் கட்டமைப்பதில் கற்றுக் கொண்ட பாடங்கள் குறித்தான கலந்துரையாடல் இடம் பெற்றது. கலந்துரையாடலில் அமெரிக்க தொழில்முனைவோர் இரவி ஜெயராமன், மயில் இராஜேந்திரன், ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் முக்கிய அரங்கமும் துணை அரங்கமும் நிறைந்து காணப்பட்டது.

தேவி நாகப்பன் அவர்கள் நெறியாள்கையில், *"The power of her"* எனும் தலைப்பில் கவிதா ராமசாமி, அர்ச்சனா கல்பாத்தி, மீரா நாகராஜன், ருக்மணி தியாகராஜன் அடங்கிய குழுவினரின் கலந்துரையாடல் சிலபல மனத்திறப்புகளுக்கு வித்திடும்படியாக அமைந்திருந்தது. மாணவர்களை அழைத்து, அர்ச்சனா கல்பாத்தி அவர்களுடன் நின்று, நிழற்படம் எடுக்கச் செய்தமை வரவேற்புக்குரியதாகவும் மாணவச் சமுதாயத்துக்கு நம்பிக்கையளிக்கும்படியாகவும் அமைந்தது.







எண்ணற்ற இளைஞர்களை நாட்டுப்பணிக்காக ஆயத்தப்படுத்திக் குடிமைப்பணிகளில் அமர்த்திவரும் வணக்கத்துக்குரிய சென்னை முன்னாள் மேயரும் மனிதநேய ஐஏஎஸ் அகாடமியின் நிறுவனருமான சைதை துரைசாமி அவர்களின் பேச்சு, ஆலோசனைகள் பொருந்தியதாக இருந்தது.

பேரவைச் செயலாளர் கபிலன் அவர்கள் நடத்திய வேளாண் கருத்தரங்கில், விருதுக்குரிய செல்வ முரளி, தொழுவம் நிறுவனர் கபிலன், விவேக் ப்ளவர்ஸ் இயக்குநர் சேது மாதவன் ஆகியோர் பங்கேற்று வேளாண்மரபில் புத்தாக்கங்கள் குறித்துப் பேசினர்.

யங் இந்தியா உள்ளிட்ட அமைப்பு களின் ஒப்புரவாளர் களுக்குப் பேரவை சார்பாகவும் மாநாட்டுக் குழுவின் சார்பாகவும் சிறப்புகள் செய்யப்பட்டன. முனைவர் பாரதி பாண்டி அவர்களின் நெறியாள்கை யில், சுகாதாரத்துறை ஆளுமைகளும் திறமையாளர் களுமான ஆள்வார் ராமானுஜம், விவேகானந்தன் காமராஜ், பால்வண்ணன் சுப்பிரமணியம், இரமேஷ் சுந்தர்ராஜன் ஆகியோர் கலந்துரையாடினர். டாக்டர் ஆனந்த் மெகாலிங்கம், இந்தியாவின் முதல் மொபைல் ராக்கெட் குறித்த பின்னணியையும் கூடுதல் விவரங்களையும் விரித்துரைத்துப் பேசி, தொழில்சார் வாய்ப்புகள் குறித்த உரையை மேற்கொண்டார். போட்டியாளர் களின் தொழில்முனைவுக் கருத்தூன்றல்(*pitching contest*) போட்டியில் கலந்து கொண்டவர்கள், நடுவர்களின் வினாக்களுக்கு மட்டுமல்லாது பார்வையாளர்களின் வினாக்களுக்கும் விடையளிக்கும் நிலைக்கு ஆளாகினர்.

டாக்டர் பாரிவேந்தர் அவர்கள், பேரவையின் பணிகளைப் பாராட்டியும், மாநாட்டில் தாம் கலந்து கொள்ள வந்ததின் அவசியத்தையும் விரித்துரைத்துப் பேசி, புலம்பெயர் தமிழர்கள் தாய்த்தமிழ் நாட்டுக்குச் செய்து வரும் பணிகளையும் பாராட்டினார். குடிமைப்பணிகளில் தேர்ச்சி கொண்ட நிர்வாக ஆளுமை அண்ணாமலை அவர்கள், நாட்டின் பொருளாதாரம், அரசியல், இளைய தலைமுறையின் தொழில்முனைவுக்கான தொலைநோக்குப்பார்வை குறித்து விரித்துரைத்துப் பேசினார்.

சார்ந்தோருக்குச் சிறப்புகளும் விருதுகளும் அளிக்கப்பட்டன. மாநாட்டுக்கான விளம்பரங்கள், காணொலிகள், குறிப்புரைகள் எழுதுவதை, பேரவையின் தகவற்தொடர்புக்குழு மேற்கொண்டிருந்தது. பேரவைச் செயலாளர் கபிலன் அவர்கள், அனைவருக்கும் நன்றிநவில்ந்தார். மாநாட்டில் தோராயமாக 900 பேர், பெருமளவில் பெண்கள், மாணாக்கர்கள் கலந்து கொண்டிருந்தனர். ஊரகப்பகுதியில் தொழில்முனைவுப் புரட்சியை மேற்கொண்டிருக்கின்றது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை.


PRD
GOOD TO DRILL
FeTNA
38வது தமிழ் விழா
சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கள்
RALEIGH CONVENTION CENTER
500 South Salisbury Street, Raleigh, NC 27601
July 3,4 & 5 - 2025
BEST WISHES FOR THE
FeTNA 38th CONVENTION
INDIA'S NO.1 DRILLING RIG MANUFACTURER
PRD OZ RC
PRD BH 45 250
PRD OZ DRILL
SALES & SERVICE CENTERS
Nairobi, Kenya.
Conakry, Guinea.
Kankan, Guinea.
Bamako, Mali.
Ouagadougou, Burkina Faso.
Ja-Ela, Sri Lanka.
Dar Es Salaam, Tanzania.
Mwanza, Tanzania.
Accra, Ghana.
Riyadh, Saudi Arabia.
Follow us on
\ PRD RIGS
www.prdrigs.com
+91 97866 88799
www.prdrigs.com
marketing@prdrigs.com
Plot No. M8, M9, SIPCOT SEZ For Engineering Products,
Perundurai - 638052, Tamil Nadu, India.

# பேரவையின் 38ஆவது விழா சிறக்க எமது வாழ்த்துகள்



# செந்தில் குமார் சேரன்

## குடும்பத்தினர், NC





# போற்றுவோம் போற்றுவோமே!

**சண்முகா, கரு – டெக்சாஸ்**

மொழிக்குப் பிடியதாம் செவ்வியப் பாங்கோடே
ஆழ அகலம் உயிரும் வளஞ்சிறப்பும்
ஐந்துமடக் கித்தந்த தொல்காப் பியர்திறனைச்
சொந்தமாய்ப் போற்று வனே.

ஐயமற வாழ்த்திச் சமுதாய வாழ்வை
இயலிசை நாடக முத்தமிழில் செய்து
சிலம்பில் வடித்த இளவல் திறனை
கலைமகிழப் போற்று வனே.

இகழ்தலும் வேண்டா வியத்தலும் வேண்டா
செகத்திலிங்கு யாவரும் ஒன்றென் வகையிலே
இற்றைக்கும் வாழும் கணியனின் சிந்தையை
எற்றைக்கும் போற்று வனே.

கப்பலும் ஓட்டிய போராட்ட வேட்கைக்கும்
அப்பால், இலக்கிய ஆர்வத்தில் எப்போதும்
நூல்கள் உரைகள் படைத்தார் புகழை
பலகாலம் போற்று வனே.

ஒன்றும் பலபத்தும் நாற்பதும் நூறுமாய்ச்
சொன்னஅப் பாட்டும் தொகையும் இன்னும்
படைப்புகள் ஏராளம் இன்தமிழில் உள்ளதைத்
தேடிப் பயில்வனே யானே.



# தமிழரின் தொல் வணிகமும் பொருளாதாரமும்



திருமதி.
சம்மு இரவி
இல்லினாய்

நூலைப் படி – சங்கத்தமிழ்
நூலைப்படி – முறைப்படி
நூலைப்படி
காலையில் படி – கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி
-பாவேந்தர் பாரதிதாசன்.

காலை, பகல், மாலை, இரவு அனைத்து வேளையிலும் சங்கத்தமிழ் நூல்களைப் பாவேந்தர் படிக்கச் சொன்னதற்கு காரணம், சங்கத் தமிழ் நூல்கள் பண்டையத் தமிழரின் வாழ்வியலை அழகாகப் படம் பிடித்துக் காட்டுவது தான். தமிழரின் தொல் வணிகத்தைப் பற்றியும், பொருளாதாரத்தை பற்றியும் சங்க இலக்கிய, பத்துப்பாட்டு நூலான பட்டினப்பாலையில் உள்ள செய்திகளை எடுத்து காட்டுவது என் நோக்கம்

### பட்டினப்பாலை

பத்துப்பாட்டு நூலான பட்டினப்பாலை கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் இயற்றப் பட்டது.. இப்பாடலின் பாட்டுடைத் தலைவன் கரிகாற் பெருவளத்தான். பொருள் காரணமாகத் தலைவியைப் பிரியக் கருதும் தலைமகன், மிக்க சிறப்புடைய காவிரிப்பூம் பட்டினத்தைப் பரிசாகப் பெற்றாலும் கரிய நீண்ட கூந்தலை உடைய தலைவியைப் பிரிய மாட்டேன் என்று தன் நெஞ்சுக்குக் கூறுவதே இப்பாடலின் முதன்மையான செய்தியாகும். பண்டைத் தமிழகத்தில் சிறப்புப் பெற்றிருந்த கடல் வாணிகம் துறைமுகச் சிறப்பு, ஏற்றுமதியாகும் பண்டங்கள், சுங்கம் கொள்ளும் முறைமை, கடைத்தெருக்கள், வணிகரின் நேர்மை முதலிய செய்திகளை பட்டினப்பாலை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

### மருத நிலத்தின் சிறப்பு

மருத நிலத்து சர்க்கரை ஆலைகளில் பாகு காய்ச்சுவதால் எழும் புகையினால் வயலோரத்தில் வளர்ந்து இருக்கும் நெய்தல் மலர்கள் அழகு கெட்டு போனதாம். காவிரியில் வற்றாது நீர் உள்ளதால் வயல் கழனிகள் கோடை காலத்திலும் விளைந்துள்ளன, எருமைகள் செங்கதிர்களைத் தின்று மிகுந்த பால் சுரந்ததால், கன்றுகள் அந்த பாலைக் குடித்து பசியின்றி உறங்குகின்றன.. குலை குலையாக தென்னை, வாழை, காயுடன் கூடியு கமுகு மரம், கமழ்கின்ற மஞ்சள். பல இன மா மரங்கள். குலை குலையாக பனை, கிழங்குடன் கூடிய சேம்பு, முளையுடைய இஞ்சி முதலியன செழித்து வளர்ந்திருக்கின்றன. உயிர்கள் உணவைத் தேடி வேறு எங்கும் அலைந்து திரியாமல், எளிதில் பெற்று, வேண்டிய இடத்தில் தூங்குதல் வளமுடைய நாட்டின் அறிகுறியாகும்.

### சோழ நாட்டின் செல்வச் சிறப்பு

செல்வம் மிகுந்த வீடுகளின் முற்றத்தில் உலர வைத்திருக்கும் நெல்லை தின்ன வரும் கோழியை விரட்ட, பெண்கள் தங்கள் காதுகளில் உள்ள பொன்னாலான மகரக் குழைகளைக் கழட்டி வீசுவார்கள். பொன் சிலம்பு அணிந்த இளம் சிறுவர்கள் உருட்டி வருகின்ற மூன்று சக்கரங்களையுடைய சிறிய தேர்களின் வழியே இருக்கும் மகரக்குழைகள் தவிர வேறு எதுவும் இடர்களோ, பகையோ இல்லாத சிறந்த செழித்த பல ஊர்களை உடையது சோழநாடு.

### காவரிப்பூம்பட்டினத்து சிறப்புகள்

உப்பை விற்று பண்டமாற்றாகப் பெற்ற நெல்லை கொண்டு வந்த படகுகள், படகு துறைகளில் தறிகளில் பிணித்து நிறுத்தப்பட்டிருந்தது குதிரை லாயத்தில் குதிரைகள் கட்டப்பட்டிருந்தது போல இருந்தது. சங்க காலத்தில் தமிழ்நாட்டு வாணிகம் பெரும்பாலும் பண்டமாற்றாகவே இருந்திருக்கிறது. காவிரிப்பூம்



பட்டினத்து மக்கள் மற்றவருக்கு சோரிடும் அறம் செய்தல் கருதியே சோறாக்கினார்கள். சோற்றிலிருந்து வடித்த கொழுமையான கஞ்சி, ஆற்றினைப் போலப் பரந்து தெருவில் ஓடியது என்கிறது பட்டினப்பாலை.

### பண்டகசாலை

கடலிலே கப்பலில் வந்த பண்டங்கள் கரையில் ஏற்றப்பட்டும், நிலத்தில் இருந்து வந்த பண்டங்கள் கடலில் உள்ள கப்பலில் ஏற்றப்பட்டும் இரு வழியிலும் அளப்பதற்கு இயலாத வகையில் பண்டங்கள் கையாளப்பட்டன. சிறந்த காவல் அமைந்த சுங்கசாவடியில் அந்த பொருட்களை வகைப்படுத்தி, புலி இலட்சினையை பொறித்துப் பின்னர் அவை பொதிமூட்டைகளாகக் கட்டிக் காப்பகத்தில் அடுக்கப்பட்டன. அம் மூட்டைகளின் மேல் ஆட்டுக்கடாக்களும் நாய்களும் ஏறி விளையாடின. இது மலையின் உச்சியில் ஏறி விளையாடும் வருடை மான்களைப் போல இருந்தது. வருடை மான் - செங்குத்தான மலைகளிலே தான் வாழும்.

### பூம்புகாரின் செல்வ வளம் நிறைந்த வீதிகள்

கடலில் மரக்கலத்தில் வந்த குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. நிலத்தில் வண்டிகளில் வந்த மிளகு மூட்டைகளும், மேரு மலையில் பிறந்த மாணிக்கமும், பொன்னும், குடகு மலையில் தோன்றிய சந்தனமும் அகிலும், கொற்கை கடலில் பிறந்த முத்தும், கீழ் கடலில் பிறந்த பவளமும், கங்கை ஆற்றில் பிறந்த பொருட்களும், காவிரியால் விளைந்த பொருட்களும் (கரும்பு, நெல்) ஏற்றுமதி செய்யப்பட்டன. ஈழத்தில் இருந்து வந்த பொருட்களும், கடாரத்தில் இருந்து வந்த பொருட்களும், பிற இடங்களிலே பெற அரிய பொருட்களும் பூம்புகார் தெருக்களில் குவிந்து இருந்தன. உள்நாட்டு வணிகத்தையும், வெளி நாட்டு வணிகத்தையும் ஓவியமாக நம் முன் காட்டுகிறார்.

### வணிகர் குடிச்சிறப்பு

நுகத்தடியில் தைத்த ஆணி போல் நடுவு நிலைமையுடன் வணிகர்கள் வாழ்ந்தனர். பொருள்களை வாங்கும் பொழுது அதற்கு ஈடாகத் தாங்கள் கொடுக்கும் பொருட்களை விட அதிகமாக வாங்காமலும், தாங்கள் பொருட்களைக் கொடுக்கும் போது அதற்கு ஈடாக தாங்கள் பெறும் பொருட்கள் குறையாமலும் பொருட்களை விற்கும் போது அவற்றிற்கு தாங்கள் பெறக்கூடிய ஊதியத்தை வெளிப்படையாகக் கூறியும் வணிகம் செய்தனர்.

### பல நாட்டினரும் இனிது உறையும் புகார்

ஒரு நாட்டு மக்கள் பிற நாட்டு மக்களுடன் கலந்து வாழ்தல் அரிது. ஆனால் இந்த காவிரிப்பூம் பட்டினத்தில் மக்கள் அயல்நாட்டவரையும் கலந்து ஆதரிப்பர் என்றும், வேறு நாட்டிலிருந்து வந்த மக்களுக்கு இந்த காவிரிப்பூம்பட்டினம் வேற்றுமையின்றி இன்பம் கொடுக்கும் என்கிறார் புலவர். அந்த காலத்திலேயே மற்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வாழும் பழக்கம் இருந்திருக்கிறது.

இவ்வாறு பட்டினப்பாலை திருமாவளவனின் நாட்டில் செல்வமும், வணிகமும், அறச்செயல்களும், ஒற்றுமையுணர்வும் மேலோங்கியிருந்ததை மிக அழகாக விளக்குகிறது. சுருங்கச் சொன்னால், இந்நூல் தமிழக வரலாற்றின் பெட்டகம் ஆகும். சங்கத்தமிழ் இலக்கியங்களைப் படிப்போம். நம் தமிழரின் வாழ்வியலை அறிவோம். தமிழால் இணைவோம், தமிழராய் வாழ்வோம்.

**மெய்ப்பாடு (உணர்வுகள்) எட்டே**

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப

- தொ. சூத்திரம் 252.






# இது தான் தமிழர் திருமணம்



ஜெயா மாறன்
ஜார்ஜியா

திருமணம் என்றாலே மகிழ்ச்சி தானே! என் பெற்றோரின் திருமணம் மூன்று நாட்கள் நடந்ததாம். மாப்பிள்ளை குதிரையில் வந்தாராம். அவ்வளவெல்லாம் செலவு செய்ய முடியாதென்று என் திருமணத்தில் இரண்டு நாள் சடங்குகளையே நீக்கி விட்டு ஒரு நாள் தான் நடத்தினார்கள். சமீபத்தில் என் தோழி வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தேன். மெகந்தி, சங்கீத் எல்லாம் இருந்தது. நாம் பழகும் பிற மொழி மக்களின் பழக்கங்கள் பிடித்துப் போய் அவற்றையும் நம் திருமணங்களில் சேர்த்துக் கொள்கிறோம். அமெரிக்காவில் வளரும் தமிழ்ப் பிள்ளைகளின் திருமணங்களில் பால் ரூம் நடனம், கேக் வெட்டுவது போன்ற அமெரிக்கக் கலாச்சாரப் பழக்கங்கள் இருக்கும். இப்படி நம் வாழ்நாளிலேயே நாம் நான்கு வகைத் தமிழர் திருமணங்களைப் பார்த்துவிடுவோம். இப்போது எனக்கு ஒரு கேள்வி. உண்மையில் தமிழர் திருமணம் எப்படித்தான் இருந்தது?

நன்னனும் நங்கையும் திருமணம் முடிந்து இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சில நாட்களுக்குப் பின் எல்லா வீடுகளிலும் வருவது போல, ஒரு சிறு சண்டை. நங்கை கோபித்துக்கொண்டு பேசாமல் இருக்கிறாள். அப்போது நன்னன் மன வருத்தத்துடன், அவன் திருமண நாள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது என்பதையும், இன்று கோபித்துக்கொண்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பவள், அந்தத் தலைநாள் இரவில் எவ்வளவு அழகாக இருந்தாள் என்பதையும் நினைத்துப் பார்க்கிறான். அவனுடைய நினைவலைகளில் நாமும் மிதந்தால் தமிழர் திருமணத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமே?

திருமணத்தன்று நெய்யோடு கலந்த சுத்தமான புழுங்கல் அரிசிச் சோற்றைக் காயோடும் மிளகோடும் சமைத்து, சான்றோரையும் விருந்தினரையும் அழைத்து, 'வாங்க, வாங்க' என்று வாய் கொள்ளாமல் வரவேற்றுச் சாப்பிடச் சொன்னார்கள் (ஓ! முதலில் விருந்து, பின் தான் திருமணம் போல). சாப்பாடு முடிந்த பிறகு, சூரியனுடைய மென்மையான ஒளி பிரகாசிக்கின்ற அந்த இளங்காலைப் பொழுதில், ரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய பௌர்ணமி நன்னாளில் வீட்டை அலங்கரித்துக் கடவுளை வணங்கினார்கள். சரி. கல்யாணம் களை கட்டத் தொடங்கி விட்டது! பறையும் முரசும் முழங்க மணமகள் நங்கையைத் தோழியர் அழைத்து வந்து நீராட்டினார்கள். அதன் பின் அவளுக்குத் தூய ஆடை உடுத்தி, அவளுடைய அழகைக் கண் கொட்டாமல் இரசித்தார்கள். இதைத்தான் கவிஞர் கண்ணதாசன் 'பெண்ணுக்குப் பெண்ணே பேராசை கொள்ளும் பேரழகை எல்லாம் படைத்தவளாம்' என்று சொல்லி இருப்பாரோ? அப்படிப்பட்ட பேரழகி தான் நம் நங்கை. நறுமணமுள்ள அருகம் புல்லை வெள்ளை நூலில் மாலையாகக் கோர்த்து அந்த மாலையை அவளுக்குப் போட்டு, பறையும் முரசும் முழங்க திருமணப்பந்தலுக்கு அழைத்து வந்தார்கள். அவள் அணிகலன்கள் அணிந்திருந்ததால் அவளுக்கு வியர்த்துக் கொட்டியது. சற்றுப் பதட்டமாகவும் இருந்திருக்கும் தானே! அந்த வியர்வையைத் துடைத்து விட்டு அவளை நன்னனிடம் கொடுத்தார்கள் அவளுடைய பெற்றோர். இது தான் அகநானூறு சொல்லும் தமிழர் திருமணம். எழுதியவர், புலவர் விற்றூற்று மூதெயினனார்.

*அகநானூறு – 136 (1-19)*

*மைப்பு அறப் புழுக்கின் நெய்க் கனி வெண் சோறு*
*வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி,*
*புள்ளுப் புணர்ந்து இனிய ஆக, தெள் ஒளி*
*அம் கண் இரு விசும்பு விளங்க, திங்கட்*
*சகடம் மண்டிய துகள் தீர் கூட்டத்து,*
*கடி நகர் புனைந்து, கடவுட் பேணி,*
*படு மண முழவொடு பரூஉப் பணை இமிழ,*
*வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று,*
*பூக்கணும் இமையார் நோக்குபு மறைய,*
*மென் பூ வாகைப் புன் புறக் கவட்டிலை,*
*பழங் கன்று கறித்த பயம்பு அமல் அறுகைத்*
*தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற*
*மண்ணு மணி அன்ன மாஇதழ்ப் பாவைத்*
*தண் நறு முகையொடு வெண் நூல் சூட்டி,*
*தூ உடைப் பொலிந்து மேவரத் துவன்றி,*
*மழை பட்டன்ன மணல் மலி பந்தர்,*
*இழை அணி சிறப்பின் பெயர் வியர்ப்பு ஆற்றி,*
*தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்,*


Balagan Business & TaxService
AN AICPA PEER REVIEWED FIRM
SERVING ALL STATES FROM OUR NATIONS CAPITAL
“Tax Seasons Is Around The Corner, Are You Ready ?”
• Accounting And Bookkeeping Service
• Audit, Review, Compilation And Attestation Service
• Tax Service
• IRS Service
• Web Hosting
• Business Consultancy
• Dedicated Service With Smiling Faces
• Experienced And Reliable Staff Year
• Rely On 25 Years Of Experience
(301)931-1040, (301)931-1042
(301)595-4331, (703)723-4488, (703)723-4458
(703)723-1140 , (301)595-4332
www.balaganfinancials.com
Main Office: 12100 Franklin Street Beltsville, MD 20705
Branch Offices: 44335 Premier Plaza Suite#100, Ashburn, VA 20147
BALAGAN ARUMUGASWAMY, CPA



# அமெரிக்கச் சூழலில் தமிழ் கற்றல் கற்பித்தலில் சில எளிய படிநிலைகள்





புலவர் வெற்றிச்செழியன்
தமிழ்நாடு

முனைவர் கு.நிலவழகி
தமிழ்நாடு

கற்றல் கற்பித்தல் மொழி வழி நடைபெறுகிறது. தாய்மொழி வழிக் கற்றல் உணர்வாய், உயிர்ப்பாய் அமைந்துவிடுகிறது. அமெரிக்கா போன்ற அயன்மொழிச் சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகளின் நிலை வேறு. அவர்கள் தமிழை இரண்டாவது மொழியாகவே கற்கின்றனர். நீண்ட நெடிய பண்பாட்டுச் செழுமை கொண்ட தமிழ் மொழியை அவர்கள் கற்றறிவது, தாய்மொழியை அறிவது என்பதுடன், தமிழின் மரபறிவைப் பெறவும் தமிழ் உறவுகளோடு உணர்வாய், உயிர்ப்பாய் உறவாடவும் தேவைப்படுகிறது.

தேவை அல்லது விருப்பத்தினாலேயே ஒருவர் ஒன்றைக் கற்றுக்கொள்ள முற்படுவர். குழந்தை அல்லது மாணவர் விருப்பமுடன் கற்றலில் ஈடுபடும்போது கற்றல் சிறப்பாக நடைபெறுகிறது. தமிழ் மொழியைக் கற்றல் தேவையாக உணரப்படாத அமெரிக்கச் சூழலில், மாணவர்கள் விரும்பும் வகையில் தமிழ் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டி உள்ளது. இந்தத் தெளிவுடன் ஆசிரியர்கள் தமிழ் கற்பிக்கும் பணியை மேற்கொள்ளல் சிறப்பு. அதற்கான சில படிநிலைகளையும் எளிய உத்திகளையும் இங்கே காண்போம்.

அயல்நாடுகளில் வீட்டிலும் சுற்றத்திலும் தமிழ் உரையாடும் மொழியாக அமையாத குடும்பக் குழந்தைகள் பள்ளியிலேயே அடிப்படையில் இருந்து கற்க வேண்டியுள்ளது. இந்தச் சூழலில் பள்ளியின் பொறுப்பு முதன்மையானதாக ஆகிறது.

### சில கற்றல் கற்பித்தல் முறைகள்

புலக்காட்சி முறை, கண்டறி முறை, உரையாடல் முறை, பாடல் முறை, நடிப்பு முறை, விளையாட்டு முறை, பங்கேற்பு முறை, எனப் பல கற்றல் கற்பித்தல் முறைகள் உள்ளன. சூழலுக்கு ஏற்ப தேவையான முறைகளை ஆசிரியர் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

### கற்றலின் முதல் படி

இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்கும் குழந்தைகள் கேட்பதன் வழியாகப் படிக்கக் கற்று, எழுதக் கற்று, தொடர்ந்து கேட்பதன் வழியே பேசக் கற்றுக்கொள்ளுதல் இயல்பாய் அமைகிறது. படிக்க - எழுத கற்பதில், எழுத்துகளைச் சொற்கள் வழி அறிமுகம் செய்ய வேண்டும். தெரிந்த, அறிந்த உள்வாங்கிக் கொள்ள எளிய எழுத்துகளைக் கொண்டு அமையும் சொற்கள் தேவை.

- ஒரு உணர்வு அல்லது கருத்து,
- அதை வெளிப்படுத்தும் காட்சி.
- அதில் உள்ள படம்,
- அதன் பெயர்,
- பெயரைக் குறிக்கும் சொல்,
- சொல்லில் உள்ள எழுத்துகள் என்று, அதாவது

உணர்வு / கருத்து > காட்சி > படம் > பெயர் > சொல் > எழுத்து என, நம் கற்பித்தல் அமையும்போது மாணவர்கள் விரும்பிக் கற்பதுடன் கற்பதும் மனதில் ஆழப் பதியும்.

சான்றாக,பெரிய கடலில் செல்லும் அழகான கப்பல் என்ற காட்சி, அதில் உள்ள படங்கள், கடல் - கப்பல் என்ற பெயர்கள், பெயர்கள் தாங்கிய சொற்கள் சொற்களில் உள்ள எழுத்துகளை அறியத் தருதலில் தொடங்கலாம்.

கடல், கப்பல், இவற்றில்

- 'க' எழுத்து,
- பிறகு ட, ப அறிமுகம் செய்தல்
- பிறகு ல், ப் எனக் கற்றுத்தர வேண்டும்.

இந்த அகர வரிசை எழுத்துகளையும்

மெய் எழுத்துகளையும் அறிந்த பின்னால் க,ங,ச... என அகர வரிசையைக் கற்றுத் தர வேண்டும்.

- முதலில் அகர வரிசை (க,ங,ச,ஞ,...) எழுத்துகள்
- தொடர்ந்து மெய்யெழுத்துகள் (க்,ங்,ச்,ஞ்... )
- பிறகு உயிர் எழுத்துகள் (அ,ஆ,இ,ஈ,...)
- தொடர்ந்து உயிர்மெய் எழுத்துகளில் ஆகார வரிசை (கா,ஙா, சா,...)

- அதன் பிறகு, பிற வரிசை எழுத்துகள் (இகர வரிசை - கி,ஙி,சி,ஞி.. / ஈ வரிசை - கீ, ஙீ, சீ,... உ வரிசை - கு,ஙு,சு,, இந்த முறையில் படி நிலையாய் அறிமுகப் படுத்தலாம், மொழியியல் அடிப்படையில் இது எளிய முறை கற்றலாக அமையும் )

இப்படிப் படம், காணொளி, காட்சி இவற்றின் வழி கற்பது புலக்காட்சி முறை கற்றல் என்பர்.

இதில் ஒவ்வொரு வரிசை முடிந்த பிறகு சொல் அல்லது தொடர்களைக் கொடுத்து குறிப்பிட்ட எழுத்துகளை அடையாளம் காணச் செய்யலாம்.

'மஞ்சள் வண்ண மலர்கள்' இத்தொடரில் 'ம' எழுத்தை வட்டமிடுக என்பது போன்ற எளிய பயிற்சிகள் சிறந்த பயன் தரும். இப்பயிற்சி, கண்டறியும் முறை எனப்படும். இது கற்றலின் மீள்ப் பார்வையாகவும் கற்றலை வலுப்படுத்துவதாகவும் அமையும்.

### படிப்பதும் எழுதுவதும்

எழுத்துகளை அறிந்த பிறகு எழுத்துக்கூட்டி படிக்கவும், சொல்லி எழுதவும் கற்றுத் தர வேண்டும். எளிய சொல், சொற்றொடரில் தொடங்கிப் படி நிலையாக விரிவு செய்யலாம். அடுத்தடுத்த நிலைகளில் எழுத்துக் கூட்டாமல் இயல்பாகப் படிக்கவும் எழுதவும் கற்பிக்கலாம். எளிய திருக்குறள்கள், ஆத்திசூடியின் சில வரிகள், சிறார் பாடல்கள் என, புதிய பகுதிகளைப் படிக்கவும் எழுதவும் வழி காட்டலாம். பாடல் முறை, பங்கேற்பு முறைகள் இங்கே கற்றலை மேலும் ஆர்வமும் பயனும் உடையதாக்கும்.

### பேசவும் உரையாடவும்

அயல்மொழிச் சூழலில் மாணவர்கள் பேசுவதை விட படிப்பதும் எழுதுவதும் எளிதாக அமைந்து விடுகின்றன. பேசிப் பழக கூடுதல் முயற்சியும் பயிற்சியும் தேவை. பேசப் பழகுவதன் முதல் படி, கேட்பது. எளிய பகுதிகளை, கதைகளை ஆசிரியர் அல்லது ஒரு மாணவர் தெளிவாகப் படிக்க, பிறமாணவர்கள் உற்றுக் கேட்க வேண்டும்.

- திருத்தமாய் அமைந்த உரையாடல்,
- படிக்கப்பட்ட கதை அல்லது சிறு பகுதி,
- இசைக்கப்பட்ட பாடல் இவற்றின் ஒலிப்பதிவை மாணவர்கள் கேட்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதன் வழி மாணாக்கரின் கேள்வி அறிவை வலுப்படுத்தலாம்.

கேட்பதன் தொடர்ச்சியே பேசுவது. பேசுவது என்பது

- வினாக்கள் வினவுவது,
- வினாக்களுக்கான விடைகள்
- விரியும் விளக்கங்கள், என்பதாக அமைகிறது

ஒரு காட்சியை, படத்தை மாணவரிடம் காட்டி, ஆசிரியர் வினாக்கள் வினவி, மாணவர்கள் விடை சொல்லலாம். அது என்ன? எப்படி இருக்கிறது? என்ன செய்கிறது? போன்ற தொடர் வினாக்கள் மூலம் கூடுதல் விளக்கங்களைப் பெற முடியும்.

இதன் தொடர்ச்சியாக ஒரு மாணவர் மற்றொரு மாணவரிடம் வினா கேட்க, அவர் விடை கூற, அதன் தொடர்ச்சியை உரையாடலாக அமைக்க வேண்டும். சூழல் வழி உரையாடல்களை மேற்கொள்ளவும் பயிற்சி தர வேண்டும். உரையாடலுக்கு இடையே தேவையான சூழலில் ஆசிரியர் இணைந்து ஊக்கப்படுத்தலாம். இங்கே உரையாடல் முறை, நடிப்பு முறை பயன்படுகின்றன.

பேசிப் பழகுவதன் மூலமே பேசப் பழக முடியும். சூழலையும் வாய்ப்பையும் ஆசிரியரும் பெற்றோரும் உருவாக்கித் தருவதன் மூலம், மாணவர்கள் பேசவும் உரையாடவும் கற்றுக் கொள்வர்.

தமிழ்க் குடும்பங்கள் தங்கள் வீடுகளிலும், தமிழர்கள் சந்தித்துக் கொள்கின்ற சூழலிலும், நிகழ்வுகளிலும் பெரியவர்களும் குழந்தைகளும் தமிழில் பேசுவதை வழக்கமாக அமைத்துக் கொள்ள வேண்டும். தமிழ் பேசப் பழக இதைவிட ஒரு செழுமையான பயிற்சி வேறு எதுவும் இல்லை.

### தமிழ்ச்செழுமை

"கற்றது கைமண் அளவு; கல்லாதது உலகளவு." என்பது செழுமையான நம் தமிழை நாம் கற்றறிந்த அளவுக்கும் பொருந்தும். அயல் நாட்டவர் தமிழ்நாடு வந்து, தமிழ் கற்று, தமிழ் இலக்கண இலக்கியங்களைப் படித்து இன்புற்ற சிறப்புக்கு உரியது தமிழ். அந்தத் தமிழ் இன்பத்தை நம் தமிழ் மாணவர்களும் பெற வேண்டும்.

மாணவர்கள் படித்து வருகின்றபோதே படி நிலையாய், எளிமையான திருக்குறள்களையும் தேர்ந்தெடுத்த நல்ல சிறார் பாடல்களையும் சிறிய எளிமையான பழந்தமிழ்ப் பாடல்களையும் கதைகளையும் கட்டுரை போன்றவற்றையும் படித்து மகிழ ஆசிரியர் வழி காட்டி உதவ வேண்டும். இப்படி இலக்கிய இன்பத்தை மாணவர்களிடம் அறிமுகம் செய்தால் தங்களின் பள்ளிக் கல்விக்குப் பிறகும் அவர்கள் தமிழைப் படித்து இன்புறவும் தமிழ் படைத்து மகிழவும் செய்வர்.



# நானிலத்தை நலமாக்கும் தமிழ் மூச்சு!



முனைவர்
சுந்தர் பாலசுப்ரமணியன்
தென் கேரொலைனா

தமிழின் மாபெரும் அறிவுப் பெட்டகங்களுள் ஒன்று சித்தர்களின் இலக்கியம். கால வரையறைகளைக் கடந்து, பற்பல நூற்றாண்டுகளாகத் தமிழ் நிலப்பரப்பில் வேர்விட்டுக் கிளைத்த சிந்தனை மரபு சித்தர் மரபாகும். இதில் தத்துவம், அறம், இறையியல் போன்றவை மட்டுமல்லாமல் மருத்துவம் குறித்த எண்ணற்ற செய்திகளும் பொதிந்துள்ளன. இவற்றை முறையாக அறிவதும், இக்காலத்து அறிவியல் முறையில் ஆராய்வதும், உலக மக்களிடையே பரப்புவதும் தமிழர்களாகிய நம் கடமையாகும். அவ்வகையில் சித்தர் இலக்கியங்களுள் முக்கியமானதாகக் கருதப்படும் திருமந்திரத்தில் இருக்கும் மருத்துவக் கருத்துக்களின் அடிப்படையில் அமெரிக்காவில் எங்களது மருத்துவப் பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்துவரும் ஆய்வுகளைச் சுருக்கமாக இக்கட்டுரையில் காண்போம்.

### சார்ள்ஸ்டன், தென் கரோலினா:

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 2011ஆம் ஆண்டு விழாவை நடத்திய பனைநிலத் தமிழ்ச் சங்கம் அமைந்துள்ள எழில்மிகு நகரம் சார்ள்ஸ்டன் ஆகும். இங்கு அமைந்துள்ளது தென் கரோலின மருத்துவப் பல்கலைக் கழகம். இது தொடங்கப்பட்டு 200 ஆண்டுகளைக் கடந்துள்ளது. இங்கு சுமார் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்.

இங்குள்ள கதிரியக்க மருத்துவத் துறையில் எங்கள் குழு தற்போது ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாராய்ச்சிகள் திருமந்திரத்தில் பொதிந்துள்ள மூச்சுப் பயிற்சிகளை மூன்று வகைகளில் ஆராய்கின்றது: 1) மூச்சுப் பயிற்சிகள் எவ்வாறு மனித உடலில் வேலை செய்கின்றன, 2) அவற்றை எவ்வாறு நோய்களின்போது பயன்படுத்தலாம், 3) அவற்றை எவ்வாறு பிறருக்குக் கற்றுத் தருவது. இவற்றில் நாங்கள் எட்டியுள்ள இலக்குகளை இங்கே காணலாம்.

திருமந்திரம், பாடல் எண் 568:

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் அறுபத்து நாலதில் கும்பகம்
ஊறுதல் முப்பத்து இரண்டதில் ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே

இப்பாடல் மூச்சுப் பயிற்சியை எவ்வாறு செய்வது என்று திருமூலர் விளக்கியுள்ள பாடலாகும். இடது நாசியின் வழியே 16 மாத்திரை அளவு உள்ளிழுத்த மூச்சினை, 64 மாத்திர அளவுக்கு உள்ளே அடக்கிய பிறகு, 32 மாத்திரை அளவுக்கு வலது நாசி வழியே வெளியே விட வேண்டும். இப்பயிற்சிக்கு மாத்திரை அளவைக் கணக்கிட சொற்கட்டுகளை அல்லது மந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்ற முறையை உருவாக்கினேன். மாத்திரை அளவு என்பது தமிழ் இலக்கணத்தில் காணப்படும் ஒரு செய்தியாகும். இவ்வாறு பயிற்சியை மேற்கொண்டால் உமிழ் நீர் சுரக்கும் என்பதையும் கண்டுபிடித்தேன். கடந்த 2013ஆம் ஆண்டு எங்கள் குழு நிகழ்த்திய ஆய்வில், இவ்வாறு சுரந்த உமிழ் நீரில் அ) நரம்பு வளர்ச்சிக் காரணிகள், ஆ) நோய் எதிர்ப்பு மூலக்கூறுகள், இ) அழற்சியைக் கட்டுப்படுத்தும் புரதங்கள், ஈ) புற்றுநோய்த் தடுப்பான்கள் போன்றவை தூண்டப்படும் என்று கண்டறிந்தோம். இவ்வகையிலான கண்டுபிடிப்புகள் உலகில் முதன்முறையாக, ஒரு மூச்சுப் பயிற்சியின் மூலம் உமிழ்நீரில் புரதங்களை மாற்றிக்கொள்ள இயலும் என்பதை நிரூபித்தன. மேலும் தமிழில் இருக்கும் ஒரு இலக்கியத்திலிருந்து மூச்சுப் பயிற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது தமிழுக்கு உடலியல் ஆய்வில் ஒரு புதிய இடத்தைத் தந்துள்ளது. குறிப்பாக, சித்தர்களின் இலக்கியங்கள் உமிழ்நீரை அமிழ்தம், பால், தேன் என்று குறிப்பிடுவதையும், சித்தர்களுடைய பாடல்களில் பல்வேறு மூச்சுப் பயிற்சிகள் இருப்பதையும் இங்கே நாம் நினைவூட்டிக் கொள்ளவேண்டும். அவை ஒவ்வொரு பயிற்சியும் என்ன விதமாக உடலியல் செயல்பாடுகளை மாற்றும் என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

அவற்றை எதிர்கால ஆராய்ச்சிகள் கண்டறியும் என நம்புகிறோம்.

### மார்பகப் புற்றுநோயில் திருமூலர் மூச்சுப் பயிற்சி

கடந்த 2021ஆம் ஆண்டு தேசிய நலக் கழகத்தின் (National Institutes of Health) நிதியுதவியுடன் மார்பகப் புற்று நோய்க்குக் கதிரியக்க மருத்துவம் மேற்கொண்ட நாற்பது மகளிரிடம் ஆராய்ச்சி நடத்தப்பட்டது. இதில் பாதி பேருக்கு திருமூலர் மூச்சுப் பயிற்சியும், மீதி பேருக்கு மனப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. இச்சோதனைகள் தற்போது வெற்றிகரமாக முடிக்கப்பட்டுவிட்டன.

இதன் முடிவுகளின்படி, திருமூலர் மூச்சுப் பயிற்சியானது நோயாளிகளின் மனத் தளர்ச்சி, பயம் முதலியவற்றைக் குறைத்துள்ளது தெரியவந்தது. அதாவது, மூச்சுப் பயிற்சிகள் நம் மனதைத் திடமாக வைத்திருக்க உதவுகின்றன என்று புரிந்துகொள்ளலாம். மேலும், அழற்சியை ஏற்படுத்தும் புரதங்களையும் திருமூலர் மூச்சுப் பயிற்சி குறைத்துள்ளது. அதே நேரத்தில் நரம்பு மண்டலத்தை நலமாக வைத்திருக்கும் வகையில் மூலக்கூறுகளையும் உருவாக்கியுள்ளது. இதன் மூலம் நோயாளிகளின் வாழ்க்கைத் தரம் உயர வழியேற்பட்டுள்ளது. இவ்வாராய்ச்சி முடிவுகள் தேசிய அளவில் ஆராய்ச்சி மாநாடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. விரைவில் அறிவியல் சஞ்சிகைகளிலும் முழுமையாக வெளியிடப்படும். மார்பகப் புற்றுநோயைத் தவிர இதர புற்றுநோய்களிலும் தற்போது திருமூலர் மூச்சுப் பயிற்சி பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக் காட்டாக, தலை மற்றும் கழுத்து, நுரையீரல், இரத்தம் ஆகியவற்றில் ஏற்படும் புற்றுநோய்களைக் குறிப்பிடலாம்.

இவை தவிர கீழ்க்கண்ட நிலைகளிலும் மூச்சுப் பயிற்சி பயன்படுகிறது என்பதை எங்கள் ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறிந்துள்ளோம்:

- வயது முதிர்வால் ஏற்படும் மன மற்றும் உடல் பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளலாம்
- பணியிடத்தில் வேலைத் திறனை அதிகரிக்கலாம்
- மன ஒருமையுடன் உணவினை உட்கொண்டு உடல் பருமனைக் குறைக்கலாம்
- ஸ்கிளிரோடெர்மா போன்ற நோய்களில் களைப்பைப் போக்கலாம்
- மனத் தளர்ச்சி, இறுக்கம் போன்றவற்றைக் குறைக்கலாம்.

இத்தகைய ஆராய்ச்சிகள் மேலே குறிப்பிட்டவாறு எவ்வாறு மூச்சுப் பயிற்சிகளை உடல் நலத்துக்குப் பயன்படுத்துவது என்று ஆராய்கின்றன.

### திருமூலர் தமிழ் இருக்கை

மூச்சுப் பயிற்சி முறைகளையும், ஆராய்ச்சி முறைகளையும் பிறருக்குக் கற்றுத் தரும் வகையிலும், தொடர்ந்து நடக்கும் வகையிலும், தென்கரோலின மருத்துவப் பல்கலைக் கழகத்தின் புற்றுநோய் மருத்துவப் பிரிவில் திருமூலர் தமிழ் இருக்கை அமைக்க ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. தென்கரோலின மருத்துவப் பல்கலைக் கழகமும் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின்படி 1.5 மில்லியன் செலவில் இவ்விருக்கை நிறுவப்பட்டு, இதன் மூலம் திருமூலர் மற்றும் இதர சித்தர்களின் மருத்துவ முறைகள் ஆராய்ச்சி செய்யப்படும். இதற்கு கதிரியக்க மருத்துவத் துறையும் இணைக்கொடை வழங்க முன் வந்துள்ளது. உலகளாவிய தமிழர்கள், குறிப்பாக வட அமெரிக்கத் தமிழன்பர்கள் இவ்விருக்கைக்கு மனமுவந்து நிதியளித்து திருமூலர் தமிழ் இருக்கை விரைவில் அமைய உதவ வேண்டுகிறோம்.

### முடிவுரை

இங்ஙனம் தமிழின் தொன்மையான படைப்புகள் வெறும் இலக்கியங்களாக மட்டும் நின்றுவிடாமல், இக்காலத்தில் மக்கள் நலனை உலகம் முழுவதும் மேம்படுத்தவ உதவும் என்பதை எங்கள் ஆராய்ச்சி தெளிவுபட எடுத்துரைக்கிறது. அமெரிக்காவிலும் உலகெங்கிலும் இதனைப் போன்ற தமிழ் மருத்துவ ஆராய்ச்சிகள் பல்கிப் பெருகவேண்டும் என்பதே திருமூலர் தமிழ் இருக்கையின் நோக்கம்.


## கணிதப்புலமையும் தமிழும்

**பேராசியர் ப.பாண்டியராஜா அவர்கள் தனது கணிதப்புலமையை தமிழோடு இணைத்து முதல் முறையாக உருவாக்கியதே தொடரடைவு. சங்க இலக்கிய காலம் முதல் இன்று வரை பயன்பட்டுவரும் சொற்கள் தொடர்பான தொடர்கள் அனைத்தையும் ஓர் இடத்தில் காணக் கிடைக்கும் வகை செய்துள்ளார். தனி மனிதர்களின் தமிழார்வம், தமிழ் வாழ்க்கை மொழி என்பதை உணர்த்திக் கொண்டேயிருக்கும் என்பது உறுதி.**



# அறுசுவைக் களஞ்சியம்

காஞ்சனா
பக்தவத்சலம்
பென்சில்வேனியா

அம்மா சொல்லி
அறிந்து கொண்டேன்
குழம்பின் மேல்
அடர்பழுப்பு மிதவைகள்
கரப்பான்கள் அல்ல
தாளிப்பு வரமிளகாய்
என்று...

வெந்தயக் குழம்பில்
வரமிளகாய்
கவளம் சேர்கையில்
கார்ப்பின் உச்சம்
ஒவ்வாதென்றால்
இலையின் ஓரம்
குழம்புச் சட்டியில்
ஏது மிச்சம்?

நீரில் ஊறவைத்த
அரிசியும் உளுந்தும்
ஆட்டுக்கல் சேரும்
மூடிவைக்க பொங்கிப் பெருகும்
இட்டு அவித்த பின்
இலையில் சேரும்
தலைமுறை தாண்டிய
பாரம்பரியம்!

அள்ள அள்ளக் குறையாத
அட்சயப் பாத்திரம்
அது போல்
பல்சுவை ததும்பும்
ஊண் பல
அள்ளித் தரும் ஓர்
அட்சயப் பாத்திரம்
தமிழர் உணவு!

எண்ணைச் சட்டியில்
வெடித்துச் சிதறும்
சிறு கடுகும்
சுவை சேர்க்கும்
வெடிக்காத கடகும்
உணவிற்கு
அழகு சேர்க்கும்!

கூட்டும் பொரியலும்
அவியலும் மசியலும்
துவையலும் வறுவலும்
என எத்தனை வகையில்
சமையல் முறைகள்
ஒவ்வொன்றும்
ஒரு சுவையில்...

நொறுங்கத் தின்றால்
நூறு வயது
என்பது பழமொழி...
நொறுக்கித் தின்ன
அப்பளம் போதும்
சோறெதற்கு?
இது சிறு பிள்ளைகள் மொழி!

எத்தனை சுவைகள்
முந்திக்கொண்டு
வந்தாலும்
உவர்ப்பில் மட்டுமே
சேரும் அப்பளம்
எல்லோர் மனதிலும்
தனியிடம் சேரும்!

பழைய சோறும்
வெய்யிலில் காய்ந்து
சோற்று வடகமாய்
மறுபிறவி பெறும்
மீண்டும் உணவில்
சுவை கூட்டும்!

ஊறுகாயாய் உருமாறும்
எலுமிச்சையும்
மாங்காயும்
தரும் புளிப்பு
நினைக்கையில் நாவூறும்
சுவைத்த பின் ருசியோ
மனதில் நங்கூரமிடும்!

ஒவ்வொரு சுவையிலும்
நம் நாட்டின்
பாரம்பரியத்தை
நினைவூட்டும் ஒரு
பண்பாட்டுப் பெட்டகம்
தமிழர் உணவு!

பெண்ணின் கூந்தல் சேராப் பூ



தனியொரு மணம் இல்லாப் பூ
உணவில் சேர்க்கும்
சுவையோ துவர்ப்பு
இருந்தும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
வாழைப்பூ கூட்டு!

கொஞ்சம் இனிப்பால்
கொஞ்சம் புளிப்பால்
இவ்விரண்டையும் மிஞ்சும்
சிலிர்க்க வைக்கும் துவர்ப்பால்
மனதை வென்றுவிடும்
கொடிக்காய்புளி!
முதலில் துவர்க்கும்
நீர் அருந்த
நாவில் குளிரும் நெல்லியை
சுவைத்து விளையாடிய
நாட்களும்
நினைவிலுண்டு!

அறுசுவையில்
ஐவகையின் சங்கமமாய்
மிளகு ரசமும்
பாகற்காய் குழம்பும்
உணவை மருந்தாய் மாற்றிடும்
மாயம் செய்திடும்!

இளம் பிள்ளை நவில
நாவில் தேன்
உடன் சேர்த்து
தீந்தமிழும்
ஊறச் செய்யும்
இனிப்பு!
அதிரசம்
மோதகம்
பொங்கல்
என்று பண்டிகைக்கு ஒரு
இனிப்பு வகையும்
உண்டு!

சிப்பியில் நித்திலம் போல்
நூற்றாண்டுகள் பல
போற்றிப் பாதுகாத்து
வழி வழியாய் வந்த
தமிழர் உணவு இன்று
நம் கைகளில் சேர்ந்திருக்கும்
அறுசுவைக் களஞ்சியம்!
தமிழால் இணைந்தோம்! நன்றி!




LET US WORK TOGETHER ON YOUR NEXT DREAM HOME !

Whether you're a first-time buyer, looking to upgrade, or searching for the perfect investment property - I've got you Covered!! Whether you're buying or selling a home, I look forward to helping you find what fits your needs and goals so that you can focus on enjoying the Park City lifestyle.

**BY CHOOSING TO WORK WITH ME, YOU GET:**

- An Experienced Agent on your side
- Personalized Service to tailor to your unique needs and preferences
- Latest market trends and insights to make informed decisions
- Wide range of listings - from starter homes to luxurious estates
- Expert guidance from lot selection to closing – a complete A-to-Z process!

**ABOUT JAYAM LLC**

Licensed in NC & SC
Specializing in *Residential, Multi-unit, and Commercial Properties*
Offering *Property Management Services* Jayam Property Management LLC

With a deep understanding of the real estate market, *Jayam LLC* ensures a seamless and rewarding home-buying experience.

JAYANTHI MURUGAN
REALTOR®
973.216.8766
jayamuru98@gmail.com

JAYAM LLC




# கடல் அளவு த.தொ.நு. துறையை கரைத்துக் குடிக்க ஆசையா?



நித்யா துரைசாமி
கனடா

தகவல் தொழில்நுட்பத் துறையில் புதிதாக நுழைய விரும்புபவர்களுக்கும், ஏற்கெனவே இருப்பவர்களுக்கும் பெரிய அளவில் சாதிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால், எதிலிருந்து தொடங்கவேண்டும் என்பதில் ஐயமும் இருக்கும். ஆகவே அவசரப்பட்டு, சந்தையில் அதிகமாக விளம்பரப்படுத்தப்படும் பெருந்தரவு, மேகக் கணினியியல், செயற்கை நுண்ணறிவு போன்ற ஏதாவதொரு பாடத் திட்டத்தில் பல இலட்சம் உருபாய் கட்டி சிக்கிக்கொண்டுவிடுவர். ஆனால் அவர்கள் கற்றுக்கொண்டதோ கடலில் கரைத்த பெருங்காயமென ஆகிவிடும். எவ்வளவுதான் அவர்கள் கற்றுக்கொண்டாலும் புதிது புதிதாக நுட்பங்கள் வர வர திணறி விடுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஒருசில கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் மட்டுமே தெரியும். ஆனால் எது எதற்கு என்று புரியாத காரணத்தால், அவர்களுக்குள் எப்போதும் ஓர் அச்சம் இருந்து கொண்டே இருக்கும்.

அதிலிருந்து தப்பிக்க ஒரே வழி அடிப்படைகளை கசடறக் கற்றுக்கொண்டு விடுவது மட்டுமே! மொத்த நிரல் தொழில்நுட்ப உலகிலும் கற்றுக் கொள்வதற்கு நான்கே நான்கு விடயங்கள்தான் உள்ளன. ஒரு நிரல் மொழி, ஒரு தரவு தளம் மொழி, இணையத்தளப்பக்கம் உருவாக்க ஒரு மொழி, நிறுவுதலுக்கு உதவும் ஒரு கருவி. அவ்வளவே! அனைத்து விந்தைகளும், அதிசயங்களும் இந்த நான்கு அடித்தளத்தின் மீதுதான் கட்டமைக்கப் படுகின்றன. ஆகவே, கட்டிடங்களைப் பார்த்து வாய்பிளந்து நிற்காமல், அடித்தளத்தில் கவனம் செலுத்துபவரே சிறந்த பொறியாளர்! நீங்கள் ஒரு சிறந்த மென்பொருள் வல்லுனராக விரும்பினால், முதலில் இந்த நான்கு அடிப்படைகளை நன்கு கற்றுக்கொள்ளுங்கள்!

### 1. நிரல் மொழி

எந்த ஒரு விடயத்தையும் உருவாக்க முதலில் நிரல் எழுத வேண்டும். ஆகவே Python, Scala, java, shell scrpting போன்ற ஏதாவதொரு மொழியைக் கற்றுக்கொள்வது நல்லது. பலநூறு கணினி மொழிகள் இருந்தாலும், ஏதேனும் ஒரு மொழியைக் கற்றுக்கொண்டாலே போதுமானது! அனைத்தின் உள் கட்டமைப்புகளும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். எந்த நிரல்மொழியாயினும், அவை மெய்யான உலகச் செயல்பாடுகளை எதிரொலிக்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டிருக்கும். எடுத்துக் காட்டாக, நாம் எங்கு சென்றாலும் அளிக்கப்படும் விண்ணப்பப் படிவத்திலுள்ள, பெயர், வயது, பாலினம் போன்ற கேள்விகளுக்கான பதில்களை நாம் எழுத்துகளாகவும், எண்களாகவும் பதில் தருவோமல்லவா! இவையே நிரல்களில் கையாளப்படும் string, integer, Boolean போன்ற வெவ்வேறு வகையான தரவு வகை ஆகும். நிரப்பப் பட்ட விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொன்றாக எடுத்து அலசுவார்கள் அல்லவா! அதுபோன்ற செயல்களுக்கு உதவுவதே முழுச்சற்று(looping) எனும் கருத்தாக்கம். அவ்வாறு செய்யும்போது ஒருசிலவற்றை நிராகரிப்பதற்கும், ஒருசிலவற்றை அனுமதித்து அடுத்த நிலைக்கு அனுப்புவதற்கும் முடிவெடுக்க உதவுவதே கட்டுப்பாடுகள் (conditions). இதுபோன்ற நடைமுறை உலகத் தேவைகளை நிறைவு செய்வதற்கு ஏற்ப உதவுவதே மற்றவை (functions, classes, modules) எல்லாம்! ஆகவே நிரல்மொழிக்கும் நம்மொழிக்கும் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை. மிக எளிதாகக் கற்றுக்கொள்ளலாம்.

### 2. தரவு தள மொழி ( Database)

அடுத்ததாக, நாம் உருவாக்கிய நிரல் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளை சேமிக்க ஒரு நல்ல இடம் தேவை. இதற்கு பல தரவுத் தளங்கள் உள்ளன. இந்த மொழியில் உள்ள கட்டளைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அட்டவணை அளவில் கை வைப்பது DDL, ஆவணம் அளவில் கை வைப்பது DML, யார் யார் எங்கெங்கு கை வைக்கலாம் எனக் கூறுவது DCL. பலநூறு தரவு தளங்கள் இருந்தாலும்,

இவைதான் அடிப்படை. இதற்கான கட்டளைகளைப் படித்தாகி விட்டால் போதுமானது! ஆகவே Mariadb, Postgre, Oracle, MySQL, Cassandra, ADLS போன்ற எல்லாமே மேற்கூறிய மூன்று கட்டளைகளை கற்றுக் கொள்வதில் அடங்கிவிடும்.

### 3. வலைப்பக்கம் உருவாக்க ஒரு மொழி

நிரல் மொழி, தரவு தள மொழி என எதுவுமே அறியாத பாமர மக்கள் எவ்வாறு நீங்கள் உருவாக்கிய ஒன்றை பயன்படுத்தப் போகிறார்கள்? பயனர்களுக்கு அதை விண்ணப்பப் படிவம் போன்ற எளிய வடிவத்திலேதான் காட்சிப்படுத்த வேண்டும். இதற்கு உதவுவதே UI/UX வடிவமைப்பு. HTML, JS, CSS போன்றவை இதில் அடங்கும். நாம் உருவாக்கியிருக்கும் தரவுதளத்திலிருந்து ஒருசில தகவல்களை எடுக்க என்ன வேண்டும் என்பதை அந்தப் படிவம் வழியாகவே வாங்கி கொண்டு, பின்புலத்தில் அந்த வேலையை செய்ய வேண்டும். இத்தகைய பின்புற வேலைகளுக்கு உதவுவதே நுண்ணிய பணி/பயன்பாட்டு நிரல் இடைமுகம் போன்றவை. Rest API, Flask API, Fast API, Django framework போன்றவை இதற்கு உதவுகின்றன.

### 4. நிறுவுதல் கருவிகள்

கடைசியாக, நீங்கள் உருவாக்கியதை, பல்லாயிரக் கணக்கான மக்கள் பயன்படுத்தப்போகும் வழங்கியில் நிறுவினால்தான், அது அனைவரையும் சென்றடையும். இந்த வேலைக்குத்தான் பணிநிரவல் என்று பெயர். பொதி கலன் (Docker Container) எனும் கருவி இந்த வேலையை சிறப்பாக செய்கிறது. திருமணத்துக்குப் பிறகு, புது வீட்டுக்குப் போகும் பெண், புழங்கத் தேவையான அனைத்துப் பொருட்களும் தாய் வீட்டு சீதனமாக வந்து சேரும் அல்லவா! அதுபோல வழங்கியில் இயங்கப் போகும் நமது மென்பொருளுக்குத் தேவையான அனைத்தையும் இந்த கலனில்போட்டு அனுப்பிவிடும். அடுத்து உங்கள் கணினியில் நீங்கள் செய்யும் மாற்றங்கள் உடனுக்குடன், வழங்கியில் செய்யப்பட வேண்டும் அல்லவா! இதுவே தொடர் ஒருங்கிணைத்தல், தொடர் பணிநிரவல் (CI/CD) ஆகும். இதற்கு உதவுவதே Jenkins! இது நிரல்களை சேமித்து வைக்கும் Github கருவியின் துணைகொண்டு, உடனுக்குடன் அதை வழங்கியில் சென்று சேர்க்கிறது.

இந்த நான்கு விடயங்களை நன்கு கற்றால் போதும்! தகவல் தொழில்நுட்பத் துறையில் சிறக்கலாம்! சாதிக்கலாம்!! கட்டணமில்லா தொழில்நுட்ப மின்னூல்கள் வழி படித்து பயனடையலாம்.

‘அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்,
பெருமை முயற்சி தரும்’ - குறள் 611

முயன்றால் கடலே ஆயினும் உள்ளங்கை தண்ணீராகி விடும். அள்ளிப் பருகுவோம் வாருங்கள்!

## ஔவையும் தமிழும்

சங்ககால ஔவையார்: புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை

பன்னிரண்டாம் நூற்றாண்டு ஔவையார் :ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி

நீண்ட ஆயுளைக் கொடுக்கும் அரிய நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்து அழகிய தமிழுக்கு சிறப்பு செய்தான் குறுநில மன்னன் அதியமான் நெடுமானஞ்சி. ஆழ்ந்த அறம் சுமக்கும் உருவில் பொதிந்த அழகிய தமிழை கலை உருவில், காண்போரைக் கவர்ந்திடும் வகையில் தொடரச் செய்ய கடவாய்ப்பல் உதிர்த்து நாடக மேடையில் வலம் வந்தார் ஔவை சண்முகம். சங்ககாலமும் சமகாலமும் போற்றிடும் ஔவையார் நூல்கள் அறிவோம் அதன் வழி வாழ்வோம்.

## இசையும் தமிழும்

இருபதாம் நூற்றாண்டில் தமிழிசையை உயிர்ப்பித்தவர்களில் ஆபிரகாம் பண்டிதரும் ஒருவர். தனது சொந்த செலவில் எட்டு தமிழிசை மாநாடுகளை நடத்தியுள்ளார். கருணாமிர்த சாகரம் எனும் இசை நூலை நமக்குத் தந்துள்ளார். தமிழிசையை தலைமுறைக்குக் கற்றுத்தந்து, ஆண்டுதோறும் ஐந்து நாட்கள் நிகழ்வாக இனிய தமிழிசை விழா எடுக்கிறார் இன்னிசை ஏந்தல் திருபுவனம் ஆத்மநாதன். ஐந்து நாள் விழா எடுக்கும் அவரோடு இணைந்து ஒரு நாள் விழாவை பேரவை நடத்துவது மகிழ்வான தகவலாகும்.

# அருட்பெருஞ்ஜோதி அருட்பிரகாச வள்ளலார்



பத்தொன்பதாம் நூற்றாண்டில் அருள்வடிவாய்
தமிழுலகை உய்விக்க வந்த உத்தமர்
ஆன்மீக நெறியில் உயிர்கள் தழைத்திட
தீந்தமிழ்த் திருமுறைப் பாடல்கள் தந்தவர்
மனுமுறை கண்ட வாசகம் இயற்றிய பெருமான்!

சைவ சிற்றிலக்கியத்தில் பக்திக் காவியமாய்
ஆன்மநேய ஒருமைப்பாட்டை பறைசாற்றும் நூலாய்
ஆன்ம நாயகனாக பரம்பொருளைத் துதிப்பதாய்
அகத்துறை உளநிலையில் பேரின்பத்தை அடைவதற்காய்
மருட்பா வென்ற திருவருட்பாவருளிய எம்மான்!

எவ்வுயிரும் தம்முயிரென எண்ணிடல் வேண்டும்
அன்பு, தயவு, கருணை, இரக்கம் கொண்டொழுக வேண்டும்
ஜீவகாருண்யம் வாழ்வியல் நெறியாக வேண்டும்
மெய்யின்பமதுவே என்றுணர்ந்திட வேண்டுமென
அருட்பெருஞ்ஜோதி தனிப் பெருங்கருணை தந்தக் கோமான்!

வாடிய பயிரைக் கண்டு வாடியவர்
பசித் தீயால் யாசிப்பவரைக் கண்டழுதவர்
பிணியால் துன்புற்றோர் காணத் துயருற்றவர்
மானமுடையோர் வறுமையால் உள்ளமயர்ந்து
மெலிவது கண்டு மெலிவுற்றக் காருண்யன்!

ஆணும் பெண்ணும் தனித் தனியன்று
ஒருவருக்குள் ஒருவரேயென்ற கருத்துப் புரட்சி
சாதி ஒழிய சமயங்கள் சேர்ந்தொழுக
சமரச சுத்த சன்மார்க்க சத்தியசங்க மலர்ச்சி
அணையா அடுப்பில் அட்சயம் வைத்து

பசிப் பிணி தீர விழைந்த
கருணையுள்ளம் கொண்ட வள்ளல் பெருமான்!

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்தல்
தன்கடன் ஜீவகாருண்யத்தில் ஒழுகுதல்
ஞானம் நல்லறம் கண்டுணர்தல்
சமூக நீதி பெண்ணுரிமை போற்றுதலென
முத்தான அறங்கள் பலப்பல
வித்தாய் தமிழர் மறுமலர்ச்சிக்கு நல்கிய
அருட்பெருஞ்ஜோதி அருட்பிரகாச வள்ளலார்
இராமலிங்க அடிகளார் புகழ்
பாரெங்கும் பரவி நிலைக்கட்டுமே!!!



**நளினி சுந்தரராஜன்.**
விஸ்கான்சின்




INTEGRATED
YOUR LONG TERM WEALTH PARTNER
NRI
TRUSTED BY MILLIONS FOR 50 YEARS
Grow with India. Grow with Integrated.
Senior Citizen Health Insurance
Geriatric Care tie ups
Support matching your time zones
Regular Income for Senior Citizens
Tax Filing in India
Investment Opportunities in India
Support through local representatives
Scan here to connect with us
WhatsApp: +91 89259 71163/ +91 89259 71162 /
support +91 89259 71158 / +91 89259 71159
Reach out to us for franchise opportunities
nriwealthintegrated.in



# கொள்கையை பெரும் சொத்தாக மதித்து வாழும் மாமனிதர் தோழர் நல்லகண்ணு



தோழர் யா. அருள்
தமிழ்நாடு

இந்தியாவின் அப்பழுக்கற்ற அரசியல்வாதியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான நல்லகண்ணு அய்யா அவர்களுடன் மக்கள் சார்ந்த போராட்டங்களில் சுமார் 20 ஆண்டு களுக்கு மேல் ஒன்றாகப் பயணித்து இருக்கிறேன். அவரோடு குடிசை மக்களின் வாழ்வாதாரா உரிமைப் போராட்டங்களில் துவங்கிய எனது பயணம் இன்று வரை தொடர்கிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்களால் ஆர்.என்.கே என அன்போடு அழைக்கப்படும் நல்லகண்ணு அய்யா அவர்கள் வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பது தான் மிகப்பெரிய பெருமை. அதுவே வரலாறு.

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் கர்மவீரர் காமராஜர், கக்கன் ஆகியோருக்கு பிறகு பணம், பொருள், சொத்து மீது ஆசைப்படாத அரசியல் ஆளுமை தோழர்கள் என்.சங்கரய்யாவும், நல்லகண்ணு அய்யாவும் மட்டும் தான். நேர்மையான அரசியல்வாதியாக, துளி அளவு கூட சொத்து இல்லாமல் அரசு கொடுத்த வீட்டில் குடியிருக்கும் மக்கள் தலைவர் ஆர்.என்.கே மட்டும் தான்.

பல அரசியல் தலைவர்கள் உடலுக்குப் பிரச்சினை என்றால் தனியார் மருத்துவமனையில் தஞ்சம் அடையும் நிலையில் எனக்குத் தெரிந்து அரசு மருத்துவமனையில் மட்டுமே சிகிச்சை பெற்று வரும் ஒரே அரசியல் தலைவர் இவர் மட்டுமே. அதற்குக் காரணம் அரசு நடத்துகிற மருத்துவமனைகளில் சிகிச்சை சிறப்பாக இருக்க வேண்டும். மக்களும் அரசு மருத்துவமனையை நோக்கிச் செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கமே.

17ம் வயதில் பொது வாழ்வில் தன்னை இணைத்துக் கொண்டவர் அடக்குமுறைகள், கொடுமைகள் பற்றித் துளியும் கவலைப்படாமல் தனது 100 ஆண்டு வயதிலும் கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று மக்களுக்கு உண்மையாக இருக்கிறார்.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் 1980-களில்



சாதிக்கலவரம் அதிகம் நிகழ்ந்தன. அப்போது தோழர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எல்லாம் நேரில் சென்று பார்த்து, பாதிக்கப்பட்ட மக்கள் பக்கம் நின்றிருக்கிறார். திருமதி. இரஞ்சிதம் நல்லகண்ணு அவர்களின் அன்புத் தகப்பனார் திரு. அண்ணாசாமி அவர்கள் தூங்கிக்கொண்டிருந்தபோது சாதி வெறியர்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். அப்போதும் கூட மனதில் வலியைத் தாங்கிக்கொண்டு, சாதி ஒழிப்புக் களத்தில் தொடர்ந்து நின்று போராடிய சமூகநீதிப் போராளிதான் தோழர் நல்லகண்ணு அய்யா. ஆணவக் கொலைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருவதோடு கோகுல்ராஜ், சங்கர் படுகொலைக்கு நீதியைப் பெற்றுத் தந்தவர்.

1925ம் ஆண்டு டிசம்பர் 26ம் நாள் அப்போதைய ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டத்திலிருந்த தற்போது தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருவைகுண்டம் எனும் ஊரில் திரு. ராமசாமி, திருமதி. கருப்பாயி எனும் தம்பதியரின் ஒன்பது குழந்தைகளில் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். தன்னுடைய பன்னிரண்டாவது வயதிலேயே போராட்டக்களத்தில் குதித்த தோழர் கல்லூரிப் படிப்பை பாதியிலே நிறுத்தி விட்டார். கட்சியில் சேர்ந்த பிறகு சென்னையில் உள்ள ஜனசக்தி பத்திரிக்கையில் பணிபுரிந்தார். சென்னை வாழ்க்கை பிடிக்கவில்லை என்பதால் ஊர் திரும்பி மக்கள் பணியில் ஈடுபட்டார்.

1949ம் ஆண்டு டிசம்பர் 20ம் நாள் நெல்லை சதி வழக்கு ஒன்றில் தோழர் நல்லகண்ணு அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அப்போதிருந்த காங்கிரஸ் அரசை எதிர்த்து கம்யூனிஸ்ட்கள் நடத்திய போராட்டங்களுக்காக போடப்பட்ட வழக்குதான் அது. ஏறத்தாழ 9 ஆண்டுகள் சிறையில் தன் வாழ்வைக் கழித்தார்.

மதுரை சிறையில் இருந்த போது
"நான் மாடாய் உழைக்கிறேன்டி
மதுரைச் சிறையிலிலே
அன்னமே இரஞ்சிதமே "

என்று பாடிக் கொண்டே இருப்பாராம் தோழர். இவ்வரிகளில் பொதிந்துள்ளது தோழர் இரஞ்சிதம் நல்லகண்ணு அவர்களின் உறுதுணையும், ஒத்துழைப்பும். 1958ம் ஆண்டில் நொச்சிக்குளம் என்ற கிராமத்தில் விவசாயிகளுக்கு காவல்துறையினர் பெரும் கொடுமைகளை நடத்தினர். அதை எதிர்த்து தோழர் நல்லகண்ணு அவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். அதேபோல 1981ம் ஆண்டில் உடுமலைப்பேட்டையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு, மதுரைக்குச் செல்வதற்காகத் தோழர் பேருந்து நிலையம் சென்றிருக்கிறார். பேருந்து நடத்துனர் மதுரை, மதுரை என்று குரல் எழுப்பவே, அங்கிருந்த பெஞ்சில் தலைக்கு ஒரு பையை வைத்துத் தூங்கிக்கொண்டிருந்த நல்லகண்ணு அய்யா எழுந்து உட்கார்ந்தாராம். அப்போது அங்கே வந்த காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் அருகில் சென்று பார்க்கும்போது அவர் வேற யாருமல்ல தோழர் நல்லகண்ணு அவர்கள்தான் என்பதைக் கண்டு, "இத்தனை எளிமையான தலைவரை நான் பார்த்தது இல்லை" என்று பெருமைப்பட்டாராம்.

பின்னர் 1995 - 1996 காலக்கட்டத்தில் விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் சாதிக்கலவரத்தை தடுக்கும் பொருட்டு தோழர் ஆர்.என்.கே அவர்கள் இதர கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களுடன் சாதி நல்லிணக்கப் பயணம் மேற்கொண்டார்.

"நீரின்றி அமையாது உலகு" என்ற வாக்கின்படி 27.09.2010 அன்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்து தாமிரபரணி ஆற்றுப்படுகையில் அள்ளப்படும் மணல் பிரச்சினையால் தூத்துக்குடி மக்களின் குடிநீர் கேள்விக்குறியாகிவிடும் என்பதை தனது வாதத்திறமையால் எடுத்துவைத்து அதில் வெற்றியும் கண்டார்.

அந்த தீர்ப்பை வழங்கிய நீதிபதி அவர்கள் " நம் எல்லோருக்கும் தனிப்பட்ட வேலைகள் இருக்கின்றன. ஆனால் இந்த மனிதருக்கு எந்த நேரமும் பொதுமக்கள் பற்றிய சிந்தனையும் , அவர்களுக்காக உழைப்பதும் என்ற உயரிய எண்ணம் உடையவர் தோழர் நல்லகண்ணு மட்டுமே" எனப் பாராட்டிப் பேசினார். ஒரு நீதிபதியே அரசியல் கட்சித் தலைவரைப் புகழ்ந்து பேசியது மிகவும் போற்றுதலுக்குரியது. .

தோழர் ஆர்.என்.கே அவர்களின் இரக்கக் குணம் சொல்லி மாளாது. நான் படித்ததில் ஒரு நிகழ்வு என்னை ரொம்பவே யோசிக்க வைத்தது. நெல்லை சதி வழக்கில் கைதானத் தோழர்களில் ஒருவர் வேலாயுதம் அவர்கள். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டு, தோழர்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த காலம் அது. அப்போது அம்பை ரயில் நிலையத்தில் இறங்கி வாகைக்குளம் கிராமத்திற்குள் தோழர் ஆர்.என்.கே உள்ளிட்ட கம்யூனிஸ்ட் தோழர்கள் நுழையும்போது வேலாயுதம் அவர்களின் குடும்பம் அவர்களுக்கு புகலிடம் கொடுத்து உணவளித்திருக்கிறார்கள். ஆயுள் தண்டனை

கைதியாக இருந்த தோழர் வேலாயுதம் காசநோயால் இறந்து போகிறார். தோழர் எஸ்.ஜேக்கப் என்பவர் தியாகி வேலாயுதம் குறித்து எழுதிய நூலை தோழர் ஆர்.என்.கேவிடம் வழங்கி இருக்கிறார். அந்தப் புத்தகங்களை விற்று, மறைந்த தோழர் வேலாயுதம் அவர்களின் மகள் திருமணத்தை சீரும் சிறப்புமாக நடத்தியிருக்கிறார். காரல் மார்க்ஸ், திருவள்ளுவர், சுப்பிரமணிய பாரதி, லெனின், சேகுவேரா , பிடல் காஸ்ட்ரோ, அண்ணல் அம்பேத்கர், ஜீவா, பாப்லோ நெருடா, பகத்சிங், மாசேதுங், தந்தை பெரியார், சிங்காரவேலர், மகாத்மா காந்தி, ஏங்கல்ஸ் ஆகிய தலைவர்களின் சிலைகள் அவரின் அறையில் கம்பீரமாக மின்னும் அவரோடு பயணித்த காலங்களில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல அனுபவங்களில் 2022ம் ஆண்டு நிகழ்ந்த கூவம் ஆறு ஆக்கிரமிப்பு எனக் காரணம் காட்டி வீடுகளை இடிக்க வழங்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்பானது. ‘அருள் காம்ரேட் என்ன செய்யலாம்’ எனக் கேட்டார். நானோ உடனே பாதிக்கப்பட்ட இடத்திற்கு சென்று மக்களைச் சந்திப்போம், அவர்களுடன் நிற்போம் காம்ரேட் என்றேன். அப்போது சுற்றெரிக்கும் வெயில் வாட்டியது. வாங்க போலாம் காம்ரேட் எனச் சொல்லி சட்டையை மாற்றிக்கொண்டு காரினில் ஏறினார் 97 வயதான நில உரிமைப் போராளி நல்லகண்ணு.

பாதிக்கப்பட்ட இடம் சென்று மக்களைச் சந்தித்து, கொளுத்தும் வெயிலில் நின்று முதலமைச்சர் அவர்களை தொலைபேசியில் தொடர்புகொன்டு உடனடியாக வீடுகளை இடிப்பதை அரசு நிறுத்த வேண்டும் என கோரிக்கை வைத்தார். கொளுத்தும் வெயிலில் நிற்கக் கூடத் தெம்பில்லாமல் துணிச்சலுடன் முதலமைச்சர் அவர்களுக்குப் போன் போடுங்கள் என்றார் தோழர் ஆர்.என்.கே. அய்யாவின் பேச்சுக்கு மறு பேச்சுத் தெரிவிக்காமல் வீடுகள் இடிப்பதை நிறுத்தச் சொல்லி முதல்வர் உத்தரவு போட்டார். அதற்குமுன் வரை காவல்துறை லத்தியுடன் மக்களை அடித்துக் கொண்டிருந்தது. தோழர் ஆர்.என்.கே அவர்கள் தமிழ்நாடு முதல்வர் அவர்களிடம் பேசின பின் அரசு அதிகாரிகள், காவல்துறை அந்த இடத்தை விட்டுச் சென்றனர். அனைத்து வீடுகளும் காப்பாற்றப்பட்டது. மக்கள் அனைவரும் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு நன்றி கூறி மகிழ்ந்தனர்.



# LAW OFFICES OF MARY KENNEDY, LLC

PERSONALIZED LEGAL SERVICE FOR YOUR IMMIGRATION MATTERS



## ABOUT US

With over two decades of experience in practicing immigration law we can help you even in the most challenging immigration cases. Law Offices of Mary Kennedy, LLC is a full-service established immigration law firm based in Schaumburg, IL with offices in Chicago, IL, Naperville, IL and Fort Lauderdale, FL.

## What We Do?

We offer a wide range of services for our clients looking for assistance with all kinds of immigration matters, from the most straightforward forms to representing clients in even the most complex situations. We bring our expertise, empathy, talent and experience together to ensure the highest quality results for our clients, and this dedication sets us apart from other firms. We are fully committed to ensuring that your immigration experience is as stress-free and as successful as possible.

## CONTACT US

+1 847-220-1560, +1 3128781255

www.mkimmigrationlaw.com

1750, E Gold Rd, Ste 1138, Schaumburg, IL - 60173

605, N Michigan Ave, 4th Floor, Office 494, Chicago, IL - 60611

Mall of India, 776 Illinois Rte 59, Suite 191, Naperville, IL - 60540

## Our Services:

- EB-5 Investment Visa
- Family Based Immigration
- Business Based Immigration (H1B, L1, TN, E-3)
- Temporary VISA (B1, B2)
- Permanent Resident/ Employment based Green card
- Employer Compliance (PAF, PAF Audit, I-9 Audit, Employment Verification)
- Religious VISA (R1)
- Naturalization



# அமெரிக்கத் தமிழ்ப்பள்ளிகளும், தமிழ்நாட்டுத் தாய்த்தமிழ்ப் பள்ளிகளும்



சரண் சரவணன்,
வட கேரொலைனா.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் ஔவையின் வாக்குக்கேற்ப இன்று புலம்பெயர்ந்து அயலகத்தில் வாழும் தமிழர்கள் எண்ணற்றோர். இதில் பெரும்பாலோர் தமிழ்வழியில் ஆரம்பக்கல்வியாவது கற்றவர்கள். இன்று அவர்களின் அடுத்த தலைமுறை, அவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் அங்கு வழங்கும் கல்வித் திட்டத்தில் கற்று வளரும் போது, நம் தாய்மொழியாகிய தமிழைக் கற்க வாய்ப்பில்லாமல் போகிறது. இது இங்கு புலம் பெயர்ந்துள்ள பெருவாரியான தமிழர்களுக்கு ஒரு பெரிய மனக்குறையாக உள்ளது. இக்குறைபாட்டை நீக்கும் நோக்கத்துடனும், நம் தமிழ் மொழியின் பழம் தொன்மைகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் நோக்கத்துடனும் ஆரம்பிக்கப் பட்டவை, அமெரிக்காவில் இயங்கும் தமிழ்ப்பள்ளிகள்.

### அமெரிக்காவில் தமிழ்ப்பள்ளிகள்

வார இறுதி நாட்களில் அமெரிக்கா முழுவதும் பல மாநிலங்களில் இத்தமிழ்ப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. முழுக்க முழுக்க தன்னார்வலர்களின் துணையுடன் எவ்விதக் கைமாறும் எதிர்பாராமல் இத்தமிழ்ப் பள்ளிகள் இங்கு சேவை செய்து வருகின்றன. புலம்பெயர்ந்து புதிதாக வரும் பல தமிழர்கள், இப்பள்ளிகள் இருப்பது அறிந்தவுடன், தங்கள் குடியிருப்புக்குப் பல மைல் தொலைவில் இருந்தாலும் தயங்காமல், மிக ஆர்வத்துடன் வந்து தம் பிள்ளைகளை இப்பள்ளிகளில் சேர்க்கிறார்கள். இத்தமிழ்ப் பள்ளிகளுக்குத் தம் பிள்ளைகளைச் சேர்க்க வந்த பெற்றோர்களே, பின்னாளில் தன்னார்வலர்களாக, ஆசிரியர்களாக இப்பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து பயணிக்க உதவுகிறார்கள்.

### அயலகத் தமிழ்ப்பள்ளிகளின் பாடத்திட்டங்களும் படிப்பு முறைகளும்

வாரம் ஒருநாள் - பொதுவாக ஞாயிற்றுக் கிழமைகளில் - மட்டும் இப்பள்ளிகள் கூடுவதால், பாடத்திட்டங்கள் மிக எளிமையாகவே இருக்கும். அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம், கலிபோர்னியா தமிழ்ப் பாடத்திட்டம், சிங்கப்பூர் தமிழ்ப் பாடத்திட்டம் போன்ற சில பாடத்திட்டங்களை இங்குள்ள பள்ளிகள் பின்பற்றுகின்றன.

பொதுவாக இப்பள்ளிகளில் ஐந்து அல்லது ஆறு மாணாக்கர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்தில் வகுப்புகளை அமைக்கிறார்கள். அது அம்மாணாக்கர்களுடன் ஆசிரியர்கள் நெருங்கிப் பழகி அவர்களுக்குக் கற்றலில் உள்ள சிக்கல்களைப் புரிந்து அவற்றைக் களைய உதவியாக உள்ளது. பள்ளியில் படிப்பதோடு மட்டும் அல்லாமல் வீட்டிலும் அவர்கள் தொடர்ந்து தமிழுடன் உறவாடும் வகையில் வீட்டுப்பாடங்கள் மற்றும் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் மூலம் அவர்களுக்குத் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது. இவற்றுடன் பள்ளி வாயிலாக ஆண்டு தோறும் தமிழ்ப் போட்டிகள் (பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி, கதை சொல்லுதல் முதலியன), பள்ளி ஆண்டு மலருக்கான படைப்புகள், மற்றும் ஆண்டு விழா மேடை நிகழ்ச்சிகள் - மூலம் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியுடனான உறவை வளர்க்கிறார்கள். குறிப்பாக இங்கு கற்கும் அத்துணை மாணாக்கர்களையும் மேடை ஏற்றி தமிழ் நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் செய்வதின் மூலம், அவர்களின் தமிழ் ஆளுமைத் திறனையும், தமிழில் நம்மால் மேடையில் பேச முடியும் என்னும் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறார்கள்.

### தமிழ்நாட்டில் தாய்த்தமிழ்ப் பள்ளிகள்

தாய்மொழி வழிக் கல்வியின் சிறப்பை ஏற்று, தமிழ் உணர்வாளர்கள் மற்றும் கல்வியாளர்களால் தமிழில் கல்வி தரும் தனியார்ப் பள்ளிகள், இந்தத் தாய்த் தமிழ்ப் பள்ளிகள். எந்த வணிக நோக்கமும் இல்லாமல் சமூக உணர்வோடு இப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் இப்பள்ளிகளைத் தவிர்த்துப் பிற தனியார்ப் பள்ளிகள் அனைத்தும் ஆங்கில வழியிலேயே நடைபெறுகின்றன. அரசுப் பள்ளிகளும், அரசு உதவி பெறும் பள்ளிகளும் ஆங்கில வழிப் பள்ளிகளாக மாறிவரும் இன்றைய சூழலில் இந்தத்

தாய்த்தமிழ்ப் பள்ளிகள் கூடுதல் கவனம் பெறுகின்றன. குழந்தைகளின் வளர்ச்சியின் முதல் படியான மழலைக் கல்வியை அரசும், தனியாரும் ஆங்கில வழியிலேயே தருகின்றனர். இச்சூழலில் தாய்த் தமிழ்ப் பள்ளிகளும், தமிழ் வழிப் பள்ளிகளும் மட்டுமே மழலையர்களுக்குத் தமிழ் வழியில் கல்வி கற்பிக்கின்றன. தமிழ் வழியில் கல்வி தருதல் என்பதைத் தாண்டி தமிழ்க் கலை, பண்பாடு, சிறப்புகள் எனத் தமிழ் விழுமியங்களை இணைத்துக் கற்றுத் தரும் தமிழியப் பள்ளிகளாகவும் இவை விளங்குகின்றன. தமிழ்வழிக் கல்விப் பணியைத் தமிழ்த் தொண்டாய் மேற்கொண்டு வருபவை இந்தத் தாய்த் தமிழ்ப் பள்ளிகள்.

### அயலகம் – தமிழகம் இணைந்த கல்வி

தமிழ்நாட்டில் இயங்கிவரும் தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு இங்குள்ள பெற்றோர்கள் சிலர் தங்கள் குழந்தைகளை விடுமுறை சமயம் அழைத்துச் செல்கிறார்கள். இது இருவேறு சூழல்களில் வளரும் ஒத்த வயதுடைய மாணாக்கர்கள் கலந்துரையாடி, ஒருவர் அனுபவத்திலிருந்து ஒருவர் கற்றுக் கொள்ள வழி வகுக்கிறது. இது இருசாரருக்கும் உலகம் தழுவிய பார்வையை இளம் வயதிலேயே வளர்த்துக் கொள்ள உதவுகிறது. அமெரிக்கப் பள்ளிகளின் கோடை விடுமுறை நாள்களும், தமிழ்நாட்டுப் பள்ளிகளின் கோடை விடுமுறை நாள்களும் வெவ்வேறு மாதங்களில் வருவதால், அமெரிக்காவிலிருந்து வரும் குழந்தைகள், தமிழ்நாட்டில் பள்ளி நடக்கும் காலத்தில் அங்கு பங்கேற்க வாய்ப்பு அமைகிறது. தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து தாய்த்தமிழ் பள்ளிகளும், அயலகக் குழந்தைகளுக்கு இவ்வாய்ப்பைத் தங்களது பள்ளிகளில் வழங்கத் தயாராக உள்ளன. இங்குள்ள அமெரிக்கப் பெற்றோர்கள் அனைவரும், இவ்வாறான வாய்ப்பைத்தங்கள் குழந்தைகளுக்குவழங்கவேண்டும்.

### தாய்த்தமிழ்ப் பள்ளிகளும் அமெரிக்கத் தமிழ் அமைப்புகளும்

தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு அமெரிக்காவிலிருந்து பலர் வருகை புரிந்துள்ளனர், தாய்த்தமிழ்ப் பள்ளிகள் பலவற்றைப் பார்வையிட்டுள்ளனர். பள்ளி நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளனர். ஆசிரியர்களுடன், பெற்றோர்களுடன் உரையாடி ஊக்கப் படுத்தியுள்ளனர்.

### தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கான உதவி

தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு அமெரிக்காவின் பல்வேறு அமைப்புகளும் தனியாட்களும் பல நிலைகளில் உதவி வருகின்றனர். கொரோனா பெருமுடக்க நேரத்தில், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை தாய்த்தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கான தொகுப்பூதிகத்தை பல தவணைகள் வழங்கி பெருந்துணையாக இருந்துள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பே பன்னாட்டுக் கல்வி அறக்கட்டளை தாய்த் தமிழ்ப் பள்ளிகளுக்குக் கற்றல் கருவிகள் வாங்கவும் பாடல் நூல் அச்சிடவும் உதவி செய்துள்ளது.

பொதுவாகத் தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வி இடர்பாடானச் சூழலில் இருந்தாலும், தமிழ் உணர்வாளர்களாலும், தமிழ் அறச் சிந்தனையாளர் களின் முன்னெடுப்பாலும் 17 தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தமிழ்நாட்டில் தொடர்ந்து இயங்கி வருகின்றன. பெரிய அளவில் அரசு உதவி ஏதும் இல்லாமல் தங்கள் சொந்த முயற்சியிலும், பொருட்செலவிலும் கல்வியாளர்கள் பலர் தனியார் தாய்த்தமிழ்ப் பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். நூற்றுக்குமேல் இருந்த தாய்த் தமிழ்ப் பள்ளிகள் 17 ஆகக் குறைந்துள்ளமை அதில் உள்ள சிக்கலை நமக்கு உணர்த்துகிறது. இவற்றைக் காப்பாற்ற வேண்டிய தேவை நமக்கு உள்ளது.

### நாம் என்ன செய்யலாம்:

நாம் இவர்களுடன் தோள் கொடுத்து அவர்களின் பணி மற்றும் பணச் சுமைகளைக் குறைக்கலாம்.

- தமிழ்நாட்டிற்கு விடுமுறைக்குச் செல்லும் காலங்களில், இப்பள்ளிகளுக்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுடன் உரையாடி மகிழலாம்.
- உங்கள் தமிழ்ப்பள்ளி அனுபவங்களை அவர் களுடன் பகிர்ந்து அவர்களை ஊக்கப்படுத்தலாம். உங்களை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு இக்குழந்தைகள் முன்னேற அது ஒரு உந்து சக்தியாக விளங்கும்.
- முடிந்தால் இப்பள்ளிகளின் புரவலர்களாக இணைந்து உங்களால் முடிந்த பணிகளைச் செய்து கொடுக்கலாம்.
- இத்தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு நாம் செய்யும் பணிகள், நம் தமிழுக்குச் செய்யும் பணியாகவே ஆகும்.

நன்றி !

## 15ம் நூற்றாண்டு கபிலர் அகவல்

**ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்**
**நன்றே செய்யவும் வேண்டும் நன்றும்**
**இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்**
**இன்னே செய்யவும் வேண்டும்**



# தமிழ் இலக்கியத்தில் மருத்துவம்



பாண்டியன் நடராஜன்
தமிழ்நாடு

சித்த மருத்துவம் பழம் தமிழர்களின் மருத்துவ முறை ஆகும். பஞ்ச பூதங்களை அடிப்படையாக கொண்டது. இலை,காய்,கனிகளிருந்தே மருந்து தயாரிக்கப்பட்டது.

தமிழ் இலக்கியத்தில் குறிப்பாக சங்க இலக்கியங்களில் பல இடங்களில் மருத்துவக் குறிப்புகள் உள்ளன. சிலவற்றை இங்கே காண்போம்.

திருக்குறளில் மருந்து என தனியாக ஒரு அதிகாரமே உள்ளது.

சித்த மருத்துவம், தென்னாட்டில் குறிப்பாக தமிழ் நாட்டில் இன்றும் வழக்கில் இருக்கும் ஒரு மருத்துவ முறையாக உள்ளது. இது உலகில் உள்ள தொன்மையான மருத்துவ முறைகளில் ஒன்றாகத் திகழ்கிறது. சித்தர்களால் உருவாக்கப் பட்ட இந்த முறை இந்திய அரசாங்கத்தாலும் தமிழ் நாடு அரசாங்கத்தாலும் ஊக்குவிக்கப்படுகிறது.



சித்த மருத்துவம் மனிதனுக்கு முழுமையாக மருத்துவம் அளிக்க முயல்கிறது(holistic treatment).

சுக்கு மிளகு திப்பிலி மூன்றும் நோய்களைத் தடுக்கும் என்ற குறிப்பைக் காணலாம். கீழ் கண்ட பாடல் இஞ்ஞி, சுக்கு, கடுக்காயின் சிறப்பைக் குறிப்பிடுகின்றது.

சித்தர்களின் வாக்கு:
"காலையில் இஞ்சி, கடும்பகல் சுக்கு,
மாலையில் கடுக்காய் மண்டலம் உண்டால்
கோலை ஊன்றி குறுகி நடக்கும் கிழவனும்,
கோலை வீசி குலாவி நடப்பானே"

என்பது சித்தர் வாக்கு.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாறாத காதல் நோயாளன் போல என்ற குலசேகர ஆழ்வார் பாடல் அறுவை சிகிச்சையும் (surgery and cauterisation) மேற்கொள்ளப்பட்டது என்பதை குறிக்கின்றது. இடைவிடாது சண்டையிட்ட மூவேந்தர்கள் ஏதேனும் அறுவை சிகிச்சை முறை வைத்திருந்தார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது.

புண்ணிற்கு பஞ்சை இடும் பழக்கமும் புறநானூற்றில் குறிப்பிடப் படுகின்றது.

புறநானூறு பாடல் 353
உழக்குக் குருதி ஒட்டிக்,
கதுவாய் போகிய நுதிவாய் எகமொடு,
பஞ்சி களையாப் புண்ணர்,
அஞ்சுதகவு உடையர், இவள் தன்னை மாரே.

உணவே மருந்தாகவும், உணவு மருந்தாகவும் பயன் படுத்த வேண்டியதன் அவசியத்தை பல திருக்குறள் பாடல்கள் தெளிவு படுத்துகின்றன. இன்றைய மருத்துவமும் உடல் நலனுக்கும், மன நலனுக்கும் உணவின் முக்கியத்தை உணர தொடங்கி விட்டது.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு. குறள் 945

உணவின் முக்கியத்தை மிக அழகாக இந்த குறளில் குறிப்பிடுகின்றார்.

குறை ஏதும் இல்லாத உணவை அளவோடு உண்டால், நமக்கு எந்த ஒரு நோயும் நொடியும் வராது.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும். குறள் 947

பசிக்கு சாப்பிடாமல் சுவைக்கு சாப்பிடுவதால் விளையும் கேட்டினை விளக்குகின்றார். சுவைக்கு அடிமை ஆகி அளவின்றி சாப்பிடுபவர், அளவற்ற நோய்க்கு ஆளாகுவர்

எக்காலத்திற்கும் பொருந்தும் மருத்துவ அனுகு முறையையும் இக்குறளில் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். குறள் 948

நோய் என்ன எண்பதைக் கண்டறிந்து, அதற்கு மூல காரணம் என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து, அந்த மூல காரணத்தைத் தவிர்க்கும், கட்டுப்படுத்தும் வழிமுறையைச் செய்ய வேண்டும்.



“சித்தர்களால் உருவாக்கப் பட்ட சித்த மருத்துவ முறை இந்திய அரசாங்கத்தாலும் தமிழ் நாடு அரசாங்கத்தாலும் ஊக்குவிக்கப்படுகிறது.”

மருத்துவமும் மருந்தும் எல்லோருக்கும் ஒரே சீராக இருப்பதில்லை. இதனை அழகாக இந்த குறளில் குறிப்பிடுகின்றார்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். குறள் 949

ஒரே நோய் வெவ்வேறு மனிதர்களிடையே வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்துவதையும், நோய் வெவ்வேறு வீரியத்துடன் செயல்படுவதையும் உணர்ந்து செயல் பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். நோயாளியை எடை போட்டு அவருக்கு வந்திருக்கும் நோயின் தன்மையையும் கணக்கிட்டு செயல் பட வேண்டும்.






# அமெரிக்காவில் தமிழ் வளர்க்க!




வெங்கட் நடராஜன்
தென் கேரொலைனா


### அயலகத்தில் தமிழ்

சிங்கப்பூரில் தமிழ் ஒரு அலுவல் மொழி மட்டுமல்லாது அனைத்துப் பள்ளிகளிலும் கற்பிக்கப் படுகிறது. மேலும் வானொலி, தொலைக்காட்சி, நாளேடு போன்ற ஊடகங்கள் தமிழை அன்றாடம் ஒளிரச் செய்கின்றன. இதற்கும் மேலாக அனைத்துத் தமிழர்களும் நெருக்கமாக வசிக்கிறார்கள். எனவே தமிழ் பேசும் சூழல் தானாகவே அமைந்துள்ளது. இலங்கை மற்றும் மலேசியாவிலும் கிட்டத்தட்ட இதே மாதிரியான சூழல் தான். ஆனால் அமெரிக்கச் சூழல் அசாதாரணமானது. இங்கு சில மாற்றம் உறுதியாகத் தேவை.

கல்வெட்டு, ஓலைச்சுவடி, தட்டச்சு என உருமாறிய தமிழ், கடந்த அரை நூற்றாண்டாக எந்த மாற்றத்தையும் காணவில்லை. இது எண்ணியல் காலம், இதில் தட்டுதல், தொடுதல், தேய்த்தல், ஏன் குரல் மூலம் கூட உள்ளீடு செய்யமுடியும். இந்தத் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப நவீன எழுத்துருக்களை நாம் அறிமுகம் செய்ய ஒரு குழு அமைத்து ஆராய வேண்டும்.

### அன்றாடச் சொற்கள்

சிறுவர்கள் அன்றாடம் ஆங்கிலத்தில் பயன்படுத்தும் வாக்கியங்களைத் தழுவி தமிழில் பாடங்கள் அமைத்தல் வேண்டும். அதை வழக்கத்திலும் கொண்டு வரவேண்டும். எடுத்துக்காட்டு *I am playing, I like games, I am so tired.*

### தமிழ் நேரம்

குடும்பத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தைத் தமிழ் நேரமாகக் கடைப்பிடித்து முழுமையாகத்தமிழிலேயே உரையாட வேண்டும்..

### காட்சிப்படுத்தல்

சிறுவர்கள் கண்ணில் படுமாறு தமிழ் ஒட்டிகள் ஒட்டலாம். இதுபோல் சிட்டை, குளிர்மி காந்தம், எண்ணியல் காட்சி போன்றவற்றைப் பயன்படுத்தலாம். நல்ல தமிழ் நாள்காட்டி கூட தினமும் தமிழ் படிக்கத் தூண்டும்.



### பயன்படுத்தும் சூழல்

அமெரிக்காவில் தமிழ்ச் சூழலை நாமே தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். வீட்டில் முடிந்தவரை தமிழில் பேச வேண்டும்.இரு குடும்பங்கள் சந்திக்கும்போது பெரியவர் சிறுவர் வயது வித்தியாசம் பாராமல் அனைவரும் தமிழில் சேர்ந்து உரையாடலாம். சிறுவர்களை தமிழில் பேச ஊக்குவிக்கலாம். அவரவர் நம்பிக்கைக்கு ஏற்றார் போல் இறைப் பாடல்கள், வழிபாட்டு முறைகளைத் தமிழில் மேற்கொள்ளலாம்.

சிறுவர் சார்ந்த ஊடக நிகழ்ச்சிகளை அதிகரிக் கலாம், அதில் மாணவர்கள் அதிக அளவில் பங்கு கொள்ளும் வகையில் ஊடாடும் ஊடக நிகழ்ச்சிகள் நடத்தவேண்டும்.எடுத்துக்காட்டு வானொலியில் புதிர் போட்டி, வினாடி வினா பிறந்தநாள் வாழ்த்து போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

*'npr news'* போன்ற செய்திகளை மொழி பெயர்த்து தமிழிலும் ஒலிக்கலாம். அதேபோல் விளையாட்டு, திரைப்படம், அறிவியல் போன்றவற்றில் மாணவர்

கவனம் பெறும் நிகழ்ச்சிகள் வேண்டும். இதுபோல் ஆங்கிலத்திலும் தமிழிலும் நிகழ்ச்சிகள் இடம் பெற்றால், அவர்கள் எளிதாகத் தொடர்புபடுத்திப் புரிந்துகொள்ள இயலும்.



பேரவையின் அருவி மலர் போல் சாரல் மலர் அறிமுகப்படுத்தி அதில் மாணவர்களின் படைப்பு களை வெளியிடலாம். தமிழ்ச் சங்கங்கள் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதோடு மட்டும் நின்று விடாமல் இளைஞர்களின் படைப்பாற்றலை வெளிக்கொணரும் வகையில் இதழ்கள் வெளியிடலாம். தமிழ்ச் சங்கங்கள் பெரும்பாலும் புலம்பெயர்ந்த தமிழர்களாலேயே நடத்தப்படுகிறது. அனைத்து தமிழ்ச் சங்கங்களிலும் குறைந்தபட்சம் ஓரிரு அமெரிக்க மண்ணின் தமிழர்களைச் செயற்குழுவில் இணைக்கலாம். ஒருங்கிணைந்த வழிகாட்டுதலோடு படிப்படியாக அவர்கள் தமிழ்ச் சங்கத்தை எடுத்து எதிர்காலத்தை நோக்கி நடத்தும் வகை செய்திடலாம்.

இந்த மண்ணின் மைந்தர்கள் சரளமாகத் தமிழ் பேசுபவர்களாக, ஆசிரியர்களாக, சங்க நிர்வாகிகளாக, ஊடகவியலாளர்களாக, எழுத்தாளர்களாக, கவிஞர்களாக, பேச்சாளர்களாக உருவெடுக்கும்போது தமிழ் அமெரிக்க மண்ணில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதில் துளியளவும் அய்யமில்லை.

“‘காலத்திற்கேற்ப எளிமைப் படுத்தினால் காலம் தாண்டியும் பயனிக்கும் என்பது திண்ணம்.”






# தமிழராய் வாழ்வோம்!





நாஞ்சில் இ. பீற்றர்
மெரிலாண்ட்

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்'

என்ற மகாகவியின் கூற்று இன்று மெய்ப்படுகிறது. உலகில் உயிர்கள் தோன்றி மனிதகுலம் பரிணமித்து மொழிபேசி வளர்ந்தபொழுது, தம்முள்ளத்தில் கருக்கொண்ட எண்ணத்தை உருக்கொண்டு எழுத்தாக்கி, மயக்கமில்லாமல் பொருள் கொண்டதாக்கிய செம்மொழி தமிழ்!

இயற்கையைப் புரிந்து தழுவி, எல்லா உயிர்களுக்குமான உலகாக இவ்வுலகை மாற்றுவதைத் தம் கடமையாகக் கொண்ட மாந்த மாண்பை வலியுறுத்தும் மொழி தமிழன்றி வேறேது?

இரந்தார்க்கு ஈதலும், இறவாப் புகழுடன் வாழ்தலும் பிறவிக்கடன் என உரிமையுடன் உரைக்கும் குரல் தமிழுக்கே உரியதன்றோ?

உயிர்,மெய் என முப்பது அடிப்படை எழுத்துகளை இயல்பாக இணைத்து உருவாக்கிய, அணிசெய் அறன்மனை தமிழின் வாழ்விடம்! அறஞ் செய விரும்பு, ...என நீளும் அறவுரைகள், நல்வாழ்வை விரும்பும் உலக மாந்தர் அனைவருக்குமானதல்லவா?

மேலும், தமிழர்தம் வாழ்வியலை அகம் புறம் என்றும் அவர்கள் வாழும் நிலம் சார்ந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலையென வகுத்து, ஒவ்வொரு நிலத்திற்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என இலக்கண வரைமுறை வகுத்து வாழ்ந்தமை உணர்த்தும் அறம் உயரியது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

எனும் குறள் குடும்ப ஒழுக்கத்தை வலியுறுத்துகிறது.

"புகழ்எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்"

புகழ் வரும் எனில் உயிரையும் கொடுப்பர்; பழி வரும் எனில் உலகமே கிடைக்கும் என்றாலும் அதைச் செய்யமாட்டார்கள். அறமற்ற செயலைச் செய்யார் சான்றோர் என இயம்புகிறது புறநானூறு!



தமிழ்கூறும் நல்லுலகைக் கட்டியெழுப்ப, பேச்சு மொழியும், எழுத்து மொழியும், கருத்துச் செறிவும் கொண்டதாகக் கொள்வோம்!

சங்க இலக்கியங்கள் வழிகாட்டுதலில், அறம் போற்றும் தமிழராய் வாழ்வோம்!



GRAND AJM BUILDERS
Tradition - Innovation - Safety
A Single REAL ESTATE HUB
connecting the USA to Tamil Nadu
Onsite Coordinator
Construction & Real estate Team
Join the NRI What's app community to buy and sell property within the NRI network, scan below
Mubeena Abdullah
+ 659 253 4747
www.grandajmbuilders.com
RS 2350
30%
Our Services
Construction
• Individual Villa
• Apartments & JV
• Industrial / Commercial
Real Estate
• Layout Development
• Land Buy & Sale
• Property Manageme
Land Buy & Sale
Rental Management
• Paperwork (Agreements)
• Rental collection
• Maintenance
RENTAL
Investment
• Layout development
Own a land,
We help you to sell
Property Management
• Monthly photos & Videos
• Meintenance
LAND NOT FOR SALE



# காணாமல் போனவர்



ஈசுவரன் இடைக்காடர்
கனடா

1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மாலைப் பொழுது யாழ்நகரை நோக்கி இராணுவம் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற தகவல் வந்ததும் இரவோடு இரவாக யாழ்ப்பாணத்தின் வலிகாமப் பகுதியிலிருந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயரத்தொடங்கினர். மக்களின் கண்ணீரைக் கண்டுதான் என்னவோ வானமகள் ஓயாது கண்ணீர் மழை பொழிந்து கொண்டிருந்தாள். எங்கும் கும்மிருட்டு;அங்குலம் அங்குலமாக மக்கள் கூட்டம் நகர்ந்து கொண்டிருந்தது. எனது மிதிவண்டியில் பின்னிருக்கையில் கொஞ்சம் துணிமணிகள், ஒரு சில அத்தியாவசியப் பொருட்கள், முன்னால் எட்டுவயது நிரம்பிய என் ஒன்றுவிட்ட அண்ணா மகள். “அண்ணா இறந்து ஒரு மாதம் நிறைவடையாத நிலையில் அண்ணியால் மூன்று பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு போகமுடியாது. நீ ஒருத்தியை ஏற்றிக் கொண்டு போ, தம்பி” என்று அம்மா சொன்னார். கூட்ட நெரிசலில் அம்மாவையோ அண்ணியையோ கண்டு பிடிக்கமுடியவில்லை. கைதடிப் பாலத்துக்கு அருகில் வரும் போது

“சித்தப்பா, தண்ணி விடாய்க்குது, எனக்கு எங்கையாவது தண்ணி வாங்கித்தருவியளா?” என்று குழந்தை கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தால் எங்கேயும் நல்ல தண்ணீர் இல்லை. பாலத்துக்கு அடியில் உப்புநீர் ஓடிக்கொண்டிருந்தது. குழந்தை சோர்ந்து போய் இருந்தது. மிதிவண்டியை ஓரமாக நிறுத்தினேன். கூட்டத்தைத் தாண்டிப் போய் யாரிடமாவது தண்ணீர் வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுக்கலாம் என்று நினைத்தேன். “இந்த இடத்தை விட்டு அரக்காதை, நான் பக்கத்தில போய் எங்கையாவது தண்ணி இருக்கா எண்டு பார்த்து வாரன்” என்று சொல்லி குழந்தையை மிதிவண்டியில் உட்கார வைத்து விட்டு கூட்ட நெரிசலுக்குள் நுழைந்தேன். அவ்வளவு தான்.அந்த நெரிசலில் எங்கெங்கோ தட்டுத்தடுமாறி ஒருவரிடம் தண்ணீரைப் பெற்றுக் கொண்டு மீண்டும் மிதிவண்டி நிறுத்திவைத்திருந்த இடத்திற்கு ஓடிவந்து பார்த்தேன். குழந்தையைக் காணவில்லை.

ஒரு கணம் இதயம் நின்று விட்டது போலிருந்தது. “ பவானி,, பவானீனீ.....” என்று கத்திக் கூச்சலிட்டேன். நகர்ந்து கொண்டிருந்த மக்களில் சிலர் “என்ன தம்பி என்ன பிரச்சனை? ஏன் அழுறாய் அப்பு?” என்று கேட்டனர். “இந்தச் சனநெரிசலுக்குள்ள பிள்ளையை ஏனப்பு விட்டிட்டுப்போன நீ” என்று ஒரு சிலர் “சரி சரி கலங்காதை உங்கை எங்கையாவது சனத்தோட சனமா நடந்து போய்க் கொண்டிருப்பா. ஆளைக் கண்டுபிடிச்சிடலாம் ‘என ஒரு சிலரும் எனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தனர். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கூட்டத்திற்குள் வேக வேகமாக நகர்ந்து முன் சென்று எங்கேயாவது பவானி கண்ணில் தெரிகிறாளா என்று பார்த்தேன். மிக மெல்லிய விளக்கு வெளிச்சத்தில் எதுவும் தெரியவில்லை. எவ்வளவு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தேனோ தெரியவில்லை. சனம் வேகமாக நகர்ந்து எங்கேயோ போய் விட்டிருந்தது. கிழக்கு வெளுக்கத்தொடங்கியது. நான் அங்கேயே தேங்கிப் போய் நின்று கொண்டிருந்தேன். உந்துருளில் சென்று கொண்டிருந்த போராளி ஒருவர் வண்டியை நிறுத்தி “என்னண்ணை இங்கை நிற்கிறியள்? பாதுகாப்பான இடத்தை நோக்கி நகருங்கோ’ என்று சொல்லிவிட்டுப் போனார். என்னையறியாமல் ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு எப்படியோ தட்டுத்தடுமாறி கரவெட்டியில் மாமா இருக்கும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன்.

கண்ணீரோடு வீட்டு வாசலில் நின்ற என்னைப் பார்த்து மாமா பதறிவிட்டார். “என்ன தம்பி? என்ன பிரச்சனை?” என்ற மாமாவிடம் “சங்கரண்ணான்ர அண்ணி என்னை நம்பி ஒப்படைச்ச பிள்ளையைக் காணவில்லை மாமா. இப்ப என்ன செய்யிறதெண்டு தெரியல்லை. அண்ணிக்கு என்ன பதிலை நான் சொல்லுறது...” என்று நான் அழ “இரு தம்பி ஆளுக்காள் போய் எல்லா இடமும் தேடிப்பாப்பம். பிள்ளை எங்கை போகப்போகுது? இங்கை தான் எங்கையாவது அகதி முகாமில ஆரும் ஆக்களோட இருப்பாள். யோசிக்காதை ‘என்று மாமா சொல்லித்தேற்றிவிட்டு அடுத்த நொடியே மிதிவண்டியில் ஏறி எல்லா அகதி முகாம்களிலும்

தேடத்தொடங்கினார்.

எங்களோடு சேர்ந்து நாலைந்து உறவினர்களும் பிள்ளையைத் தேடத்தொடங்கினோம். தொலைபேசி இல்லாத காலப்பகுதி காலையில் தேடத்தொடங்கினால் மாலை வரை ஓயாது எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போய் பிள்ளையைத் தேடினோம். வடமராச்சி, தென்மராச்சிப் பகுதியிலிருந்த எல்லாப் பள்ளிக் கூடங்களும் கோயில்களும் மரநிழல்களும் தற்காலிக அகதிமுகாம்களாக மாறியிருந்த காலப்பகுதி. எங்கேயும் பிள்ளையைக் கண்டு பிடிக்கமுடியவில்லை. எல்லோரும் மனச்சோர்வடைந்து போயிருந்தனர். காயப்பட்ட சில குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல் வந்தது.

மறுநாள் முழுவதும் மருத்துவமனையெல்லாம் ஏறி இறங்கினோம். குழந்தைக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. நல்லவேளை அண்ணியும் மற்ற இரண்டு குழந்தைகளும் தென்மராச்சியில் இன்னொரு உறவினர் வீட்டில் தங்கியிருந்தார். பவானி எங்களோடு வடமராச்சியில் இருப்பதாக அவர் நம்பிக் கொண்டிருந்தார். குழந்தை தொலைந்து இரண்டு நாட்களாகிவிட்டது. ஏற்கனவே திடீர் மாரடைப்பில் கணவரை ஒரு மாதத்திற்கு முன்பு பறிகொடுத்த அண்ணியிடம் இந்த உண்மைகளை எப்படிச் சொல்வது? உன்னை நம்பித்தானே குழந்தையை ஒப்படைத்தேன்? எங்கே தொலைத்து விட்டாய் என் குழந்தையை? என்று நாளை அண்ணி கேட்டால் என்ன பதில் சொல்வேன்? உண்மையை எத்தனை நாட்களுக்குத் திரை போட்டு மறைக்கமுடியும்? என் உறக்கம் கெட்டு மூன்று நாட்களாகிவிட்டது. எறிகணை வீச்சிலும் விமானத்தாக்குதலிலும் மக்கள் இறந்து போகும் செய்திகள் வேறு எம்மை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. இந்த இரவு விடியவே கூடாது என்று வேண்டிக்கொண்டு என்னை அறியாமலே உறங்கிப் போனேன்.

மறுநாட்காலை பொழுது புலர்ந்தது. வீட்டிலிருக்கும் எல்லா ஆண்களும் மூன்றாவது நாள் தேடுதல் பணிக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். எதிர்வீட்டுத் தாத்தா அன்றைய ஈழநாடு செய்தித்தாளுடன் ஓட்டமும் நடையுமாக நாங்கள் தங்கியிருந்த வீட்டுப் படலையைத் திறந்து ஓடிவந்தார். ‘தம்பி, ஒருக்கா இந்தச் செய்தியை பாரு மோனை” என்று யாழ் இடப்பெயர்வுக்குப்பின் ஒற்றைத்தாளில் வெளிவந்த இரண்டு பக்கச் செய்தித்தாளை நீட்டினார்.

இரண்டு பக்கங்களிலும் போரில் இறந்து போனோர் பெயரும் காணாமல் போனோர் பெயரும் இடம்பெற்றிருந்தது. அத்தோடு செய்தித்தாளின் ஒரு மூலை பவானி என்ற 7 வயதுப்பிள்ளை தங்கள் வீட்டில் இருப்பதாகவும் பெற்றோரைத் தேடிவருவதாகவும் யாரோ ஒருவர் பெயர் முகவரியுடன் செய்தி வெளியிட்டிருந்தார். அவசர அவசரமாகச் செய்தித் தாளில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிக்கு ஆளுக்கொரு மிதிவண்டியில் ஏறிப் புறப்பட்டோம்.

அந்த முகவரி நான் பவானியைத் தவறவிட்ட இடத்திலிருந்து ஒருசில கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது. நான்கு கம்புகளை நாட்டி அதன்மேல் சில பனை ஓலைகளைப் போட்டு அதன் கீழ் மிதி வண்டி திருத்தும் வேலையைச் செய்து கொண்டுவரும் ஒருவரே அந்த விளம்பரத்தைப் போட்டிருந்தார். நாம் அங்கு போன போது எறிகணை வீச்சுக்குப் பயந்து அவர் அங்கிருந்து சிறிது தூரத்தில் உள்ள தனது வீட்டில் அந்தப் பிள்ளையைத் தங்க வைத்திருந்தார். நல்லமுறையில் பிள்ளை பவானியை அந்த மூன்று நாட்களும் பராமரித்திருந்தார், இத்தனைக்கும் அவர் வசதியானவர் இல்லை, சிறிய ஓலைக் குடிசை ஒன்றில் தனது மனைவி இருபிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர். அவர் நினைத்திருந்தால் குழந்தை பவானி அணிந்திருந்த தங்கச் சங்கிலி, காப்பு, தோடு போன்றவற்றைக் கழட்டிவிட்டு பிள்ளையைத் துரத்தி விட்டிருக்கலாம். வறுமையில் வாடினாலும் மனிதத்தன்மை மிக்க மனிதராக அவர் இருந்தார். அவரின் நல்ல பண்புக்கு நன்றிக்கடனாக நாங்கள் ஒருசிறுதொகை பணத்தை அன்பளிப்பாகக் கொடுக்க முயன்றபோது அதனை வாங்க மறுத்துவிட்டார். நாங்கள் வற்புறுத்திக் கொடுக்கப் பார்த்த போது “மனிதப்பண்புக்கு விலை பேசாதேங்கோ தம்பி!” என்று கூறி மறுத்துவிட்டார். கண்கள் பனிக்க அவருக்கு நன்றி சொல்லிவிட்டுக் குழந்தை பவானியையும் ஈழநாடு செய்தித் தாளையும் கொண்டு போய் அண்ணியிடம் ஒப்படைத்தேன்.

போர்ச்சூழலும் வறுமையும் உயிரிழப்பும் கண்டு தாங்கொண்ணா துயர்கொண்டு அழுததில் கண்களில் கண்ணீர் வற்றிப் போயிருந்தாலும் மனதில் மனிதம் உயிரோடு இருந்த காலப்பகுதி. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்ற வாக்கிற்கிணங்க நேர்மையும் உண்மையுமாக நின்று வழிநடத்திய அந்த தலைமையின் கீழ் நின்றவர்களும் மக்களும் சூதுவாதற்றவர்களாக இருந்ததில் வியப்பேதுமில்லையே!

*1995 யாழ் இடப்பெயர்வின் போது எங்கள் குடும்பத்தில் நடந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதியது. யாவும் கற்பனை அல்ல.*

# குன்றாப் புகழோடு குன்றக்குடி அடிகளார்!



ரஞ்சனி
சிறீகதிர்காமநாதன்
கனடா

ஏழையென்றும் பணக்காரனென்றும்
மூளையில்லா முட்டாளென்றும் அறிஞனென்றும்
ஆண்டானென்றும் அடிமையென்றும்
உயர்ந்தவனென்றும் தாழ்ந்தவனென்றும்
வாழும் சமூகத்தைக்கண்டு நெஞ்சம் பதறி
உதவிக்கரம் நீட்டிய பெரியோனே குன்றக்குடி அடிகளார்

அன்பும் இரக்கமும், பக்தியும், ஒழுக்கமும், ஓங்கவேண்டும்
வன்பும் மூர்க்கமும் பலாத்காரமும் அவலமும் நீங்கவேண்டும்
மனிதநேயத்துடன் சமத்துவமும் வளர்ந்திடவேண்டும்
என்ற கொள்கையுடனும் உறுதியுடனும்
சமயத்தையும் சமூகத்தையும் இணைத்த
சான்றோனே அடிகளார்

விருப்பு வெறுப்பற்ற அன்பே வடிவான இறை பண்பின்
இருப்பை நன்கு கற்று அறிந்து உணர்ந்து
எல்லா உயிர்களிடமும் சமநோக்கும் அன்பும் கொண்டே
உயர்ந்த சாதி இழிந்த சாதி என இழிவுபடுத்தும் பிரிவினையை
அடியோடு களைய பாடுபட்ட கருணயாளனே அடிகளார்

சமய சீர்திருத்தங்கள் செய்திடவே ஈ.வே.ரா பெரியாருடன்
கைகோர்த்தாலும் இறைபக்தியில் நீங்காது
பக்திஉணர்வு மங்காது மனித நேயத்தை வளர்க்க
அரும்பாடுபட்டு உழைத்த உத்தமனே அடிகளார்
சமயவாழ்வு வெறும் கிரியைகள் மட்டுமல்ல
பொறுமை, இரக்கம், கருணை, சமநோக்கு
நேர்மை,உண்மை, எல்லாம் சேர்ந்த அறவாழ்வே
சமயம் காட்டிடும் வழி என்றே கூறி வாழ்ந்து
காட்டிய உயர்ந்தோனே அடிகளார்
மாலைகள் சாத்துவதும், பூக்களால் அலங்கரிப்பதுவும்,
விரதங்கள் அனுட்டிப்பதுவும் , திருவிழாக்கள் செய்வதும்
மட்டுமே ஆலயவழிபாடுகள் அல்ல
என்ற எண்ணமதை மனதில் இருத்தி
சமயத்தின் அடிப்படை
மனத்தூய்மையும்,மனிதஒழுக்கமுமே
என்றுணர்ந்தே எவனொருவன் மனத்துக்கண்
மாசிலா அறத்தின் வலிமையுடன்
தவறாது தத்தம் கடமைகளை
மகிழ்வோடு செய்பவனுக்கே
அவன் அருள் கிட்டும் என்றே வாழ்ந்தார் அடிகள்



# தமிழரின் புலமையும், வீரமும்

செல்வபிரியா
பென்சில்வேனியா



# பிரபஞ்சத்தின் வாழ்த்து

## கபிலன் வைரமுத்து

பெருங்காமநல்லூர் நூற்றாண்டு மலருக்கு ஒரு கட்டுரை தர முடியுமா என்று பெருங்காமநல்லூர் தியாகிகள் சங்கம் எனக்கு ஒரு கோரிக்கை வைத்தனர். பெருங்காமநல்லூர் எங்கே இருக்கிறது ? அந்த ஊரின் பெயரில் எதற்கு தியாகிகள் சங்கம் ? அவர்கள் செய்த தியாகம் என்ன ? நூற்றாண்டு மலரெனில் நூறாண்டுக்கு முன் நடந்த ஏதோ ஒரு சம்பவத்தை இது குறிக்கிறதா ? அது என்ன சம்பவம் ? கடந்த ஆண்டு செய்த தியாகங்களே மறக்கப்படும்போது நூறாண்டுகளுக்கு பிறகும் நினைவு கூர வேண்டிய தியாகமா ? தியாகிகள் சங்கத்தின் கோரிக்கை எனக்கு புதியதொரு தேடலுக்குக் கம்பளம் விரித்தது. அது சிவப்பு கம்பளம் என்று நடக்க நடக்கப் புரிந்தது. அந்தச் சிவப்பு, பெருங்காமநல்லூர் தியாகிகளின் ரத்தச் சிவப்பு என்று புரிந்தபோது மெய் சிலிர்த்தது.

பிரிட்டிஷ் இந்தியாவின் குற்றப் பரம்பரை சட்டம் என்று பரவலாகத் தவறுதலாகச் அறியப்படும் குற்ற இனச் சட்டம் இந்தியாவின் பழங்குடி மக்களின் மீது பாய்ந்த ஒரு கொடூரம். ஆதிக்கத்திற்கு அடிபணியாத கூட்டங்களை இன வரையறைச் செய்து, அவர்களின் இனமே குற்ற இனம் என்று அறிவித்த ஆங்கிலேய ஏற்பாடு. குற்றம் செய்தால்தான் குற்றவாளி என்பதில்லை. குறிப்பிட்ட இனத்தில் பிறந்தாலே குற்றவாளிதான் என்று மானுடத்திற்கே எதிராக நிறைவேற்றப்பட்ட ஓர் அநீதி. இந்தியாவின் பிற மாநிலங்களில் இந்தச் சட்டத்தை நிறுவிவிட்டு தமிழ்நாட்டு பக்கம் திரும்புகிறது ஆங்கிலேய அரசாங்கம். மதுரையும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளும்தான் முக்கிய இலக்கு. இந்தியாவின் பூர்வகுடிகள் அனைவரும் இந்தச் சட்டத்தை ஏற்க இயலாமல், அதை எதிர்க்கவும் வழி இல்லாமல் புழுங்கிப் புழுங்கி புழுவாகிக் கிடந்தபோது, மதுரைக்கு அருகில் உள்ள பெருங்காமநல்லூரில் எழுகிறது குற்ற இனச் சட்டத்திற்கு எதிரான முதல் குரல். அனைத்து மக்களும் சட்டத்திற்குட்பட்டு கை ரேகை பதிய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்தபோது ‘கை ரேகையைத் தர முடியாது’ என்று ஒரே குரலாய் ஊர் திரண்டது. அவர்களில் பதினாறு பேர் பிரிட்டிஷ் காவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மிச்சமிருந்தவர்கள் ஒரே சங்கிலியில் பிணைக்கப்பட்டு கால்நடையாக திருமங்கலம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அதன்பின் தொடர்ச்சியாக நடந்த பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு இந்தியாவில் 1949 ஆம் ஆண்டு குற்ற இனச் சட்டம் முற்றிலும் நீக்கப்பட்டது. நூறாண்டு அல்ல. ஆயிரமாண்டுகளுக்குப் பிறகும் போற்றப்பட வேண்டிய பெருநிகழ்வு இது. இன்று இந்தியாவின் அனைத்து குடிமக்களும் கை ரேகையை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டோம். உலகின் பல்வேறு அரசுகள் தங்கள் குடிமக்களைக் கண்காணிக்க நவீன அறிவியல் முறைகளைத் தொடர்ந்து கையாளுகின்றன. முதலாளிகள் பாதுகாப்பு வளையத்திலும், சாமானிய மனிதர்கள் கண்காணிப்பு வளையத்திலும் இருக்கும் போக்கு முன்பை விட இன்று பலமடங்கு அதிகரித்திருக்கிறது. பெருங்காமநல்லூரில் நிகழ்ந்த தியாகம் இன்று புதுப்புது அர்த்தங்களோடு நம் மனதில் உயிர்த்தெழுகிறது.

குற்ற இனச் சட்டத்துக்கு எதிராகப் போராடி உயிர் நீத்தவர்கள் என் ரத்த வழி முன்னோர்கள் எனில் பிரிட்டிஷ் அரசின் பார்வையில் நானும் குற்ற இனத்தைச் சேர்ந்தவன்தான். இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்பட்ட ஒரு நிகழ்வை உலக மேடையில் ஓங்கிச் சொல்ல நினைத்தேன். ஆகோள் என்ற நாவல் வழி அதைச் செய்திருக்கிறேன். மாக்கியவெல்லி காப்பியம் என்ற இரண்டாம் பாகம் வழி குற்ற இனச் சட்டத்தின் எதிர்கால அபாயம் குறித்து விவாதித்திருக்கிறேன். ஆகோள் முதல் பாகம் ஆங்கிலத்திலும் வெளிவந்திருக்கிறது என்பதால் உலகின் பிற பழங்குடியினங்களும் இந்தப் புதினத்தில் முகம் பார்த்துக்கொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

திரைப்பாடல்கள், கதை, திரைக்கதை,வசனம் என்று பல்வேறு களங்களில் இயங்கும்போதும் என் கலையின் பூரணமாக நான் நினைப்பது, எந்தவொரு வணிக அலங்காரமும் இல்லாத என் இலக்கியப் படைப்புகளைத்தான். நான் உருவாக்கும் ஒவ்வொரு கதாபாத்திரமும் இந்த மண்ணில் ஏதோவொரு பேரன்புச் செய்தியை விதைக்க வேண்டும் என்பது என் விருப்பம். பேரன்பு எப்போதும் பேரன்பு வடிவத்தில் மட்டுமே இருப்பதில்லை. அது பெருங்கோபமகாவும், போராட்ட உருவிலும், விடுதலையின் வடிவிலும் மாறி மாறி தோன்றக் கூடியது. உயிர்ச்சொல்லில் வரும் நளாயினி, ஆகோளில் வரும் சின்னமாயன், மாக்கியவெல்லி காப்பியத்தின் மாயவனம் என நான் உருவாக்கியிருக்கும் பேரன்புப் படை பெரிது.

உயிர்களின் இலக்கு உயிர்ப்போடு இருப்பது மட்டுமே. உலக வாழ்வு சுமக்கும் மற்ற அனைத்து அர்த்தங்களும் மனிதர்கள் உருவாக்கியவை. காலத்திற்கேற்ப மாறக் கூடியவை. போலியானவை. ஒவ்வோர் உயிரையும் ஒவ்வொரு நிகழ்வு உயிர்ப்போடு வைத்திருக்கிறது. பறப்பது மட்டுமே பறவைக்கு போதுமானது. நீந்துவது மட்டுமே மீனுக்கு இலக்கு. மணப்பது மட்டுமே மலரின் இருப்பு. பிற உயிர்களுக்கு நிழல் தரும்படி தழைப்பது மட்டுமே தாவரங்களின் பூரிப்பு.

ஆனால் மனிதர்கள் நாம் நம்மை உயிர்ப்போடு வைத்துக்கொள்ள மண்,பொன்,புகழ்,அதிகாரம்,பணம்,கௌரவம்,மதம்,சாதி,நிறம்,வெற்றி,உயர்வு,சாதனை,பெருமை,இலட்சியம் என ஏராளமான முள்கிரீடங்களைத் தயாரித்து வைத்திருக்கிறோம். இதில் ஏதேனும் ஒன்று குறைந்தாலும் நாம் உயிர் குறைந்து போகிறோம். அறிவியல் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை விட, புத்தம் புதிய துன்பங்களைக் கண்டுபிடிப்பதில் நாம் சிறந்தவர்கள் என்பதை ஒவ்வொரு நாளும் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். எது நடந்தபோதும், நிபந்தனையற்ற அன்பைத் துணைக்கு அழைத்துக்கொண்டால், ஒரு நதிக்கரையில் நின்று கால் நனைப்பது போல எளிதானது இந்த வாழ்க்கை.

உலகம் நிகழ்த்தும் போர்களுக்கு எதிராக என் பூச்செடிகளை வளர்த்திருப்பேன். நான் உங்களுக்கு அவசியமற்றவன். என்னை நீங்கள் தெரிந்துகொள்வதால் உங்களுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால் என் கதாபாத்திரங்களை நீங்கள் தெரிந்து கொள்வதன் மூலம் பிரபஞ்சத்தின் வாழ்த்தைப் பெற முடியும். அவர்களில் சிலர் ஏற்கனவே பிறந்துவிட்டார்கள். இன்னும் பலர் கருவில் இருக்கிறார்கள். வருவார்கள்.



**பேரன்புடன்**

## கபிலன் வைரமுத்து


THE
CLASSY
ONES
WORLDWIDE
DELIVERY IN 5 DAYS
Kumaran Silks
SINCE 1955
Think Silk, Think Kumaran Silks
KANJEEVARAM | BANARASI | BRIDAL SAREES | SHIRTS | MEN'S KURTA | 3P DHOTIS SET
EXPLORE OUR CUSTOMIZATION AND VIDEO CALL SHOPPING SERVICE @ www.kumaransilks.com


பேரவையின் 38 ஆவது விழா
சிறக்க எமது வாழ்த்துகள்
பால் பாண்டியன்
குடும்பத்தினர்



# சிறார்களின் ஆரோக்கிய வாழ்விற்கான யோக ஆசனங்கள்



கவிதா இளையராஜா
புளோரிடா

ஓகம் என்கிற யோகா நம் தமிழ் சித்தர்கள் அறிந்து பயின்று வாழ்ந்து உடலும் மனமும் பக்குவப்பட நமக்களித்துச் சென்ற அறிவியலாகும். ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை நல்ல விடயங்களையும் கற்றுத் தந்து நெறிப் படுத்தும் கலையாகும். அன்றும் இன்றும் பலதரப்பட்ட உடல் மற்றும் மன நோய்களில் இருந்து தற்காத்துக்கொள்ளவும் நோய்கள் வந்தால் குணப்படுத்தவும் உதவும் மருத்தும் ஆகும். அன்பே சிவமாகும் என்று உலகுக்கு உரக்க சொன்ன ஆன்மீகமாகும்!!!

தமிழ் சொல்லாகிய “ஓகம்” என்பதே யோகா என்பதற்கு அடிப்படையாகும்.

யோகம் என்ற சொல்லுக்கு இணைதல், ஒன்றுபடுதல், சேர்தல் என்ற பல பொருளுண்டு. யோகம் என்பது நமது உடல், உயிர், மனம் இந்த மூன்றையும் ஒன்றிணைக்கக் கூடியது

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே"

என்கிற திருமூலரின் அட்டாங்க யோகமே அனைத்து வகை யோகங்களுக்கும் முதன்மையானது ஆகும்.

யோகா ஆசனங்கள் உடல் வலிமைக்கும், நோயற்ற வாழ்விற்கும், நீண்ட ஆயுளுக்கும், ஆரோக்கியமான வாழ்விற்கும் வழிவகை செய்கிறது. உடலின் நிலை அல்லது தோற்றத்தை குறிப்பது ஆசனங்கள்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்று நம் முன்னோர்கள் கூறிச் சென்றது உடலுக்கு மட்டுமன்றி மனதிற்கும் வாழ்க்கை நெறிகளுக்கும் தான்!!

அடுத்த தலைமுறையின் வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு யோகப்பயிற்சி நமக்கு கிடைத்த வரமாகும்!!

### முந்தைய தலைமுறை குழந்தைகளின் வாழ்க்கை முறையும், தற்போதைய வாழ்க்கை முறையும்

முந்தைய தலைமுறைகளில் பாரம்பரிய விளையாட்டுகளான கபடி அல்லது சடுகுடு, கும்மியாட்டம், பாண்டி ஆட்டம், பம்பரம், கோலி குண்டு, பரமபதம், பல்லாங்குழி போன்ற பல விளையாட்டுகளை குழந்தைப் பருவம் முதலாகவே விளையாடி வந்தனர். இந்த விளையாட்டுக்கள் அனைத்தும் உடலுக்கும் மனதிற்கும் மிகுந்த நன்மைகளை செய்து வந்தன. ஆனால் தற்போதைய வாழ்க்கை முறையில் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக கணினி, அலைபேசி, மின்னணுக் கருவிகளின் பயன்பாடுஅதிகரித்துள்ளதால் குழந்தைகள் இவற்றில் அதிக நேரம் செலவிடுகின்றனர். இதனால் குழந்தைகளின் உடல் நலமும், மனநலமும் பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்புகளில் இருந்து விடுபடசிறுவயது முதலாகவே தேவையான யோகா பயிற்சி முறைகளை வழங்க வேண்டும்.

### சிறார்களுக்கான சில எளிய ஆசனங்களும் அவற்றின் பயன்களும்

| | |
|---|---|
| பத்மாசனம் | மன ஒருமைப்பாட்டிற்கு சிறந்தது |
| புஜங்காசனம் | நினைவாற்றலை மேம்படுத்தும் |
| விருச்சாசனம் | மனம் ஓர்மை நிலை பெறச்செய்யும் |
| பச்சிமோத்தாசனம் | மூளையின் செயல்பாட்டை மேம்படுத்தும் |
| தனுராசனம் | ஞாபக சக்தி அதிகரிக்க செய்யும் |
| மகராசனம் | மன அழுத்தம், தூக்கமின்மையை போக்கும் |
| சேதுபந்தாசனம் | நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் |
| சுகாசனம் | மனம் அமைதி நிலைபெறவும், நினைவாற்றலை ஓங்கவ்ம் செய்யும் |
| சர்வாங்காசனம் | ஞாபகசக்தியை அதிகரித்தல், மன ஒருமைப்பாடு |

மூச்சு பயிற்சியின் மூலம் மாணவர்களிடையே

# வாழும் தமிழே வழிகாட்டு





செந்தலை
ந. கவுதமன்
தமிழ்நாடு

ஓடிய காவிரி வெண்மணல் தீர்ந்திடும்
உள்ளத் தவிப்பினி நீங்கிடுமா?
ஊன்றிய கால்களும் சேற்றை விளக்கியே
ஓங்கிப் புயலென பாய்ந்திடுமா?

வாடித் தளர்பயிர் நீர்பெறு மா?தெற்கில்
வாடும் உயிர்க்குலம் சீர்பெறுமா?
வாழ்வைக் கொடுத்திடும் பாதை கிடைத்திடுமா?
வாரித் தரும்ஒளி பாய்ந்திடுமா?

ஓடி வரும்தடை யாவும் சிதறுமா?
ஊற்றாய்த் தமிழ்வெள்ளம் பீறிடுமா?
ஒன்றிரண் டாயஅல்ல நூறுநூ றாயிரம்
உண்மைத் தமிழ்உள்ளம் சேர்ந்திடுமா?

மேடு தகரட்டும் மக்கள் மனவயல்
மேலும் விளைச்சலைத் தந்திடட்டும்
வெல்லும் தமிழ்க்கென உள்ளம் இணைந்திடும்
வீர வரலாறு வந்திடட்டும்.

காணப்படும் வயிற்றுப்பகுதியில் உள்ள தசைகளை குறைக்கவும், சோம்பல், மறதி, அடிக்கடி சளி பிடித்தல் முதலியன நீங்கவும், தலைவலி, உறக்கமின்மை, மூச்சுத்திணறல் போன்றவற்றை குணமாக்கவும் முடியும். நரம்பு மண்டலம், காற்று மண்டலம், தசை மண்டலம் இவற்றில் உள்ள நோய்கள் நீங்கவும், பள்ளி மாணவர்களுக்குப் பாடங்கள் படிப்பதில் கிரகிக்கும் திறன், பதிவு கொள்ளும் திறன், நினைவு கூறும் திறன் ஆகியவற்றை அதிகரித்து கல்வியில் சிறந்து விளங்கவும், சிறந்த அமைதி, தெளிவு, கவனத்தை அதிகரிக்கச் செய்யவும் பயன்படுகின்றன.

சிறுவயதிலேயே கண் பயிற்சி செய்வதன் மூலம் கண் பார்வை மேம்படுகிறது. கண் நோய்கள், வலி, எரிச்சல் வராமல் தடுத்து குணப்படுத்தவும் பயன்படுகிறது. கண்ணாடி போட்டுள்ளவர்கள் கூட இந்த கண் பயிற்சியைத் தொடர்ந்து செய்து வருவதன் மூலம் கண்ணாடி தேவை இல்லாமல் போய்விடும் அளவிற்கு சிறப்பு வாய்ந்தது கண் பயிற்சி ஆகும்.

**யோகா விளையாட்டு :** யோகமுறையில் சொல்லித் தரப்படும் விளையாட்டுக்கள் குழந்தைகளுக்கு நினைவுத்திறனையும், கவனிக்கும் திறனையும் அதிகரிக்கின்றன.



**மன விளையாட்டு :** இந்தப் பயிற்சி சிறுவர்களின் இடது மூளை மற்றும் வலது மூளை இரண்டின் செயல்திறனையும் அதிகரித்து சமப்படுத்துகிறது.

உடல்நலம், மனநலம் மற்றும் சமூக நலத்தை மேம்பாடு அடையச் செய்ய நாம் ஒவ்வொருவரும் யோகாவை கற்றுக்கொள்வோம்.நம் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுப்போம்!!

# ennVee®

Delivering Tomorrow's Solutions Today

## A Technology Transformation Partner with more than 2 Decades of driving Impactful Business Outcomes

- Enabling AI-powered Solutions for Enterprise Reinventions
- End-to-end Enterprise Solutions Partner for our Clients
- Delivering Competitive Advantages with Digital Transformation
- Delivering Digital Efficiencies and 360 Degree Value



**ennVee TechnoGroup Inc.**

Naperville, Illinois

www.ennvee.com | corp@ennvee.net



# காற்றோடு கலந்தாலும் தமிழ்தான் உன் அடையாளம்!



சூர்யா
கோபாலகிருஷ்ணன்
வட கரொலைனா

பரிதியாய் தீயொளிரும் உயர்சிந்தனை கொண்ட தமிழ் இளம் நெஞ்சங்களுக்கு, நீண்ட பாதையைக் கடந்து, உலகை ஒரு அகழியாய் ஒன்றிணைத்து, வாழ்வில் வளம் பெற எட்டுத்திசையிலும் முன்னேறியுள்ளீர்கள். வட அமெரிக்காவில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என சகோதரத்துவம் பேணி, முன்னோர் கண்ட கனவெல்லாம் எட்டி, உயரங்களைத் தொட உண்மையாய் போராடிக் கொண்டிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

தமிழ்நாட்டின் பெருமதிப்பிற்குரிய மாமேதைகள் தமிழர் நலனுக்கு வழங்கிய அறிவுரைகளை உங்களுக்குச் செங்கால் நாரையாய்ச் சிறகடித்துக் கருத்துரைக்க வருகிறேன். இளமையை விட, இன்னுயிரை விட உயர்ந்த மதிப்புக் கொண்ட சிந்தனைத்துளிகள் அவை.

- அனைத்துயிர்க்கும் அன்புடைமை தான் நாகரிகத்தின் முதற்கொடி, அகத்துள் மகிழ்ச்சி கொண்டு அடுத்தவரை அணுகுங்கள்.
- வன்மத்தைக் காட்டிலும் மன்னிக்கும் மனப்பாங்கே நற்பலன் தரும். கனியிருப்பக் காய் கவர்ந்திடாமல் இன்சொற்களே பேசுங்கள்.
- நேர்மையும் நல்லொழுக்கமும் சூழ்நிலைக்கேற்ப மாறும் ஆடைகளல்ல, அவை நம் அடையாளங்கள் என்று நெஞ்சில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்.
- மாறுபாடுகளை மதிப்பதும், நீதியோடு வாழ்வதும்தான் உண்மையான கல்வியின் விளைவு என்பதை ஆழ்மனதில் பவளப்பாறையாய் பதிவிடுங்கள். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள்.
- இலக்கியச்சுவையை நுகர்ந்திடுங்கள், கலையழகினில் மனதைத்தொலைத்திடுங்கள்.
- படைக்கு அஞ்சாமல் கடமைகளை நிறைவேற்றிடுங்கள்.
- நாகரிகமும் நாணயமும் கலந்த மனித உணர்வுகளின் அடிப்படையில் ஒரு பளிங்கு மாளிகையாய் அரசியலைக் கட்டமைத்திடுங்கள். மக்கள் பணியில் ஈடுபடுங்கள். அரசுகள் அமைவதே கனிவு காட்டிடவும், மனிதத்தன்மையின் மேம்பாட்டினை வளர்க்கவும் தான் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.
- சமதர்ம நெறியில் நாட்டம் கொண்டவர்கள் அல்லவா தமிழர்கள்? பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று பல்லுயிர்க்கும் பகிர்ந்தளித்து ஒன்றுபட்ட வாழ்வை கொண்டாடும் பொங்கல் புதுநாள் போன்றதொரு பொன்விழா உலக நாடுகளில் காண்பதரிது. அந்நாளை நம் வாழ்க்கை முறையின் பாடமாக அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்லுங்கள்.
- ஆங்கிலத்தையும் அயல் மொழியையும் கற்றாலும் தீங்கனிச்சுவை தரும் செந்தமிழை உயிர் மூச்சென சுவாசியுங்கள்.

வளம் கொழித்திட வழி தேடும்போது இவையனைத்தையும் முன்னோர்கள் விட்டுச்சென்ற வழித்தடங்களாக நினைவில் கொள்ளுங்கள். உங்களின் ஒவ்வொரு செயலும், நாளைய சமுதாயத்திற்கான ஒளியீடாகட்டும். வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் நம் தலைமுறை.

## கோழிக்குட்டி

இத்தாலி நாட்டறிஞர் வீரமாமுனிவர் தமிழ்க் கூட்டமொன்றில் பேசும்போது பேச்சின் இடையே 'கோழிக் குட்டி" என்றார். கூட்டத்தில் பெறும் நகைப்பு உண்டாயிற்று. நகைப்பின் காரணம் புலனாகவில்லை. அருகில் இருந்தோர் "கோழிக்குஞ்சு" என்று சொல்லவேண்டும். அதுவே மரபு. இச்சொல்லை இப்பொருளில் வழங்கவேண்டும் என்று முன்னோர்கள் சொல்லியும் எழுதியும் வைத்துள்ளனர். தாங்கள் மரபு நிலை மயங்கக் கூறியபடியால் நகைப்பு ஏற்பட்டது என்றனர். வருந்திய முனிவர் இலக்கண இலக்கியங்களைக் கற்றபின்தான் சொற்பொழிவாற்றுவது என உறுதி கொண்டார். வெற்றியும் பெற்றார்.



# செய்யுளில் அடிப்படை இலக்கணம்



**செந்தில்குமார் சேரன்**
வட கரொலைனா

செய்யுளை உரை இல்லாமல் படித்துப் புரிந்துகொள்ளும் ஆழ்ந்த அறிவு இன்று தமிழரிடையில் அரிதாக இருக்கிறது. இவ்வாறு இருக்க, ஐரோப்பாவின் செர்மனி நாட்டில் பேராசிரியர் ஏவா வில்டன் தலைமையில் மாணவர்கள் பலர் சான்றோர் செய்யுளை முனைவர் பட்டப் படிப்பாகப் பயின்றும் ஆய்வு செய்தும் வருகிறார்கள். இவர்களுடன் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு எனக்கு அண்மையில் கிட்டியது. செய்யுளைப் படிக்கும்பொழுது இவர்கள் ஆங்கில வழியில் கலந்துரையாடி விளக்குவார்கள் ஒழிய அனைவருக்கும் நுணுக்கமான புரிந்துணர்வு உள்ளது. இக்கால உரைநடைத் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு செய்யுளின் கட்டமைப்பை விளக்கக்கூடிய பாடங்களை எங்கும் காணோம் என்பது வருத்தமான உண்மை. இக்கட்டுரையில் திருக்குறளின் வெவ்வேறு எடுத்துக்காட்டுகளால் குறிப்பு வினைமுற்று என்னும் சொல்லமைப்பை விரிவாக விளக்கவிருக்கிறேன்.

வினைச்சொல் என்றால் என்ன? ஆங்கிலத்தில் *verb* என்பர். அண்ணன் துரத்தினால் அவள் ஓடி ஒளிவாள் என்னும் தொடரில் துரத்தினால், ஓடி, ஒளிவாள் ஆகியவை வினைச்சொற்களே. முதல் இரண்டும் வினையெச்சங்கள் ஆகும், ஒளிவாள் வினைமுற்று ஆகும். வினையெச்சம் என்பதைத் தொல்காப்பியத்தில் வினையெஞ்சுகிளவி எனச் சொல்லப்படும், ஏனெனில் ஒரு வினைச்சொல் எஞ்சுகிறது, அஃதாவது மேலும் ஒரு வினைச்சொல் இடம்பெற்றாகவேண்டும். வினைமுற்று இருந்தால் அச்சொற்றொடர் முற்றுப்பெறுகிறது, இதனை *finite verb* என்பர்.

தமிழில் வினைமுற்றுகள் இருவகைப்படும். நாம் நன்கு அறிந்திருப்பது தெரிநிலை வினைமுற்று. இதற்குக் காலமும் உண்டு (இறந்த, நிகழ், எதிர்காலம்), இடமும் உண்டு (தன்னிலை, முன்னிலை, படர்க்கை) பாலும் உண்டு (ஆண், பெண், ஒன்றன், பலர், பலவின்பால்). பனிக்கட்டி உருகும் என்னும் தெரிநிலை வினைமுற்றுச் சொல்லானது, உருகுதல் என்னும் வினை, ஒன்றன்பால் எழுவாய் (அது - பனிக்கட்டி), எதிர்காலம் ஆகியற்றைத் தெரிவிக்கும். மற்றொரு வகை வினைச்சொல்லான குறிப்பு வினைமுற்றில் வினையோ காலமோ இல்லை! சில குறள்களைப் பகுத்துப் பொருள் காண்பதின் வழியாக உணர்ந்துகொள்வோம்.

முதற்குறட்பாவைப் பகுத்து ஆராய்வோம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எளிதாகப் புரிந்துகொள்தற்கு மாற்றி எழுதினால், "எழுத்தெல்லாம் அகரம் முதல. உலகு ஆதிபகவன் முதற்றே." இரு வேறு தொடரிலும் ஈறாக அமைந்த "முதல்" என்னும் சொல்லைக் குறிப்புவினைமுற்றாகக் காண்கிறோம். இச்சொல்லின் பொருள் துவக்கம், மூலம், காரணம், முதன்மை போன்றவையாகும். எந்தத் தொடரிலும் வினையோ செயலோ இல்லாததைக் கவனிக்கவும். முதல் எனும் சொல் எழுவாய்க்கு ஏற்ப விகுதி பெற்று பொருள் உணர்த்துகிறது. இதன் பொருள்: "எழுத்தெல்லாம் அ என்ற எழுத்தை முதலாகக் கொண்டன. உலகு ஆதிபகவனை முதலாகக் கொண்டது."

எழுத்தெல்லாம் பன்மைச்சொல் (பலவின்பால்) என்பதால், முதல் + அ(பன்மை விகுதி) = முதல.

உலகு ஒருமைச்சொல் (ஒன்றன்பால்) என்பதால், முதல் + து(ஒருமை விகுதி) = முதற்று.

ஒருமைக்கு "து" விகுதி என்பதும் பன்மைக்கு "அ" விகுதி என்பதும் நாம் நன்கறிந்த தெரிநிலை வினைமுற்றுகளில் காண்கிறோம்: ஆடு மேய்ந்தது. ஆடுகள் மேய்ந்தன.

நீத்தார் பெருமை, “சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமென ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு”. இதன் பொருள்: ஐம்புலங்களின் வகை

தெரிந்தவனிடமே உலகம் இருக்கிறது.

“சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என ஐந்தின் வகை” என்பது ஐம்புலஙக்ளின் வகை என நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. தெரிவான்கண் என்றால் தெரிந்தவனிடம். தெரிவான்கட்டே என்பது குறிப்புவினைமுற்று: தெரிவான்கண் + து + ஏ. “அவற்றைத் தெரிவான்கண்ணே உலகு இருக்கிறது” என்று தெரிநிலை வினைமுற்றாக எழுதுவதற்குப் பதிலாகத் “தெரிவான்கண் இருக்கிறது” ஆகிய இரு சொற்களைச் சுருக்கமாக ஒரே சொல்லில் “தெரிவான்கட்டு” என குறிப்புவினைமுற்றாக எழுதியிருக்கிறது.



வாய்மை, “பொய்ம்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்.” இதனை எளிதாகப் புரிந்துகொள்வதற்கு மாற்றி எழுதினால், “புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின், பொய்ம்மையும் வாய்மை இடத்த.” இதன் பொருள்: குற்றம் நீங்கிய நன்மை உண்டாக்கும் என்றால் பொய்களும் வாய்மைத் தன்மை உடையன.

இடம் என்னும் சொல்லுக்கு இங்கே தன்மை எனப் பொருள்கொள்ளவேண்டும். “இடம் உடையன” என்னும் தெரிநிலை வினைமுற்றுக்குப் பதிலாகக் குறிப்புவினைமுற்றாக இடம்+ அ = இடத்த என்று பன்மையில் எழுதியிருக்கிறார். புணர்ச்சி விதிப்படி அத்து சாரியை பெற்று இடத்த என வந்துள்ளது. “பொய்ம்மையும்” பன்மைச் சொல்லாக எடுத்துக்கொள்வோம்.

அறன் வலியுறுத்தல், “மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன். ஆகுல நீர பிற.” எளிதாகப் புரிந்துகொள்ள மாற்றி எழுதினால், “மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறன் அனைத்து. பிற ஆகுல நீர.” இதன் பொருள்: மனதில் குற்றம் இல்லாதவன் ஆதல் அறம் ஆகும் (அறம் அவ்வளவே ஆகும்). பிற செயல்கள் ஆரவாரத் தன்மை உடையன.

அனை என்பது அவ்வளவு, ஒப்பு எனக் குறளில் பொருள்படும், “அத்தனை” என்னும் சொல்லின் சுருக்கமாகும். மனத்துக்கண் ஒருமை என்பதால், அனை + து = அனைத்து. நீர்மை என்பதன் பொருள் இயல்பு, தன்மை, குணம் ஆகும். பிற பன்மைச்சொல் என்பதால், நீர் + அ = நீர.

“எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும்” என்றால் -த்து விகுதியை இனி நம்மால் ஐயமின்றி விளக்கிக் கூறமுடியும். குறளில் பெரும்பாலான குறிப்பு வினைமுற்றுகள் அஃறிணை எழுவாயாக ஒன்றன்பால் (அது) அல்லது பலவின்பால் (அவை) சொற்களாகும். உடைத்து என்னும் சொல் முப்பதுக்கும் மேற்பட்ட முறைஇடம்பெறுகிறது. உயர்திணை குறிப்பு வினைமுற்றுகளும் குறளில் பரவலாக உள்ளன. கயமை, “தேவர் அனையர் கயவர்” (தேவருக்கு ஒப்பானவர்கள் கயவர்). காமத்துப்பாலில், “வாழி அனிச்சமே! நினினும் மென் நீரள்...” (வாழ்க அனிச்சப்பூவே! உன்னை விட மெல்லிய இயல்பு உடையவள்...). இக்காலத்தமிழில் “அடியேன்” என்னும் உயர்திணை குறிப்புவினைமுற்றுச் சொல் அறிவோம். அஃதாவது, (கடவுளுக்கு) அடிமையாக இருக்கிறேன். பக்தி இலக்கியத்தில் நாயேன் என்று பாடியிருக்கிறது.

இப்படிப்பட்ட பல இலக்கணச் செய்திகளை மேன்மேலும் முறையாகவும் ஆழமாகவும் கற்றுக்கொள்வோமானால் சான்றோர் செய்யுள் நம் கை வசமாகும்.

**விழையா உள்ளம் விழையும் ஆயினும்**
**என்றும் கேட்டவை தோட்டியாக மீட்டாங்கு**
**அறனும் பொருளும் வழாமை நாடி**
**(அகநானூறு 286)**

**இயல்பாகவே நல்லதல்லதை விரும்பாத உள்ளம் ஒருவேளை ஒன்றை விரும்புமாயின், உள்ளத்தை அதன் வழியில் விடாது, விரும்பிய பொருளின் நன்மை தீமை ஆராந்து நன்வழிச் செலுத்த வேண்டும்.**



# இலங்கை அரசின் போர்க் குற்றங்களும், இன அழிப்பு நீதிக்கான பயணமும்



சுந்தர் குப்புசாமி
மெரிலாண்ட்

*2009-ல் முடிவுற்ற போரில் இலங்கை அரசாங்கம் செய்த போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மற்றும் தமிழ் இன அழிப்புக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (UNHRC) பல தீர்மானங்களின் பின்னர், குற்றவாளிகளைப் பொறுப்பேற்கச் செய்யும் முயற்சிகள் பல சவால்களைச் சந்திக்கின்றன. இலங்கைத் தீவில் சிங்கள அரசு எந்தக் காலத்திலும் தமிழர்களுக்கு நீதி வழங்கப் போவது இல்லை. இந்தக் கட்டுரை UNHRC தீர்மானங்கள், உலகளாவிய நீதி கோரல் அல்லது உலகளாவிய அதிகார வரம்பு (Universal Jurisdiction), சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice) வழியாக நீதி பெறுவதற்கான வழிமுறைகள், புலம் பெயர்ந்த தமிழர்களின் முயற்சிகள் மற்றும் அவற்றின் நிலையை ஆராய்கின்றது.*

## UNHRC தீர்மானங்களின் சுருக்கம்

### 1.தீர்மானம் 11/1 (2009):

இது இலங்கை முழுமையான போரின் வெற்றியைக் கொண்டாடினாலும், இலங்கைக்கான மனிதாபிமான உதவி வழங்குவதும், மனித உரிமை மீறல்களை ஆராய்வதும் அவசியம் என்று கூறியது. இது சர்வதேச விசாரணை நடத்த வேண்டிய அவசியத்தைக் குறிப்பிடவில்லை.

### 2.தீர்மானம் 13/1 (2010):

UNHRC, இலங்கையில் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்களை விசாரிக்கவும், இராணுவம் மேற்கொண்ட குற்றங்களுக்கான பொறுப்பினை வலியுறுத்தினாலும், சர்வதேச விசாரணையை முன்வைக்கவில்லை.

### 3.தீர்மானம் 19/2 (2012):

இந்தத் தீர்மானம், இலங்கை மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்பை நிறைவேற்றவில்லை என்று கூறியது. LLRC ஆணையத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு அழைப்பு விடுத்தது.

### 4.தீர்மானம் 22/1 (2013):

இது இலங்கை அரசுக்கு மீண்டும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை விசாரிக்க அழைப்பு விடுத்தது; ஆனால் சர்வதேச விசாரணையை முன்வைக்கவில்லை.

### 5.தீர்மானம் 25/1 (2014):

இந்தத் தீர்மானம், இலங்கையில் மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கச் சர்வதேச விசாரணையைத் தொடங்க வேண்டுமென்று அறிவித்தது.

### 6.தீர்மானம் 30/1 (2015):

இது இலங்கைக்கான ஓர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தை (உள்ளூர் மற்றும் சர்வதேச நீதிபதிகள் கொண்ட) உருவாக்கும் பரிந்துரையைக் கொண்டிருந்தது. ஆனால் இலங்கை அரசு இதை அப்போது ஏற்றுக்கொண்டாலும் பின்னர் நிறைவேற்றவில்லை.

### 7.தீர்மானம் 46/1 (2021) மற்றும் 51/1 (2022):

இந்தத் தீர்மானங்கள், போர்க்குற்ற ஆதாரங்களைக் காப்பாற்றுவதற்கும், மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்துவதற்கும் OSLAP (Office of Sri Lanka Accountability Project) என்ற ஆணையத்தை ஏற்படுத்தியது.

## நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான பாதைகள், பொறுப்புக்கூறலின் நிலை:

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்புக்கான பொறுப்புக்கூறல் என்பது என்றுமே சாத்தியமில்லை. இலங்கை உள்நாட்டுப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதற்கான சட்ட முயற்சிகளில் தமிழ்

புலம்பெயர்ந்தோர். ITJP, INGOs, மனித உரிமை அமைப்புகள், காணாமலாக்கப் பட்டவர்களின் தாய்மார்கள் போன்றவர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றிக் கொண்டுள்ளனர். மனுக்கள் மற்றும் வக்காலத்துகள் மூலம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (ICJ) வழியாகக் குற்றவாளிகளை நீதிக்கு முன் நிறுத்த புலம்பெயர்ந்தோர் பணியாற்றியுள்ளனர்.



- ICC-யில் முயற்சிகள்: இலங்கை ரோம் சட்டத்தில் (ICC-யை நிறுவிய ஒப்பந்தம்) கையெழுத்திடவில்லை என்றாலும், புலம்பெயர்ந்தோர் இலங்கை அதிகாரிகளால் செய்யப்பட்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை குறித்து விசாரணை கோரி பல மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். 2018 ஆம் ஆண்டில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இந்த வழக்கை ICC-க்கு பரிந்துரைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. ஆனால், இலங்கையுடன் வலுவான உறவுகளைப் பேணுகின்ற சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் அரசியல் எதிர்ப்பு இந்த முயற்சிகளைத் தடுத்து நிறுத்தியுள்ளது.
- ICJ-யில் முயற்சிகள்: இனப்படுகொலை குற்றத்தைத் தடுப்பது மற்றும் தண்டிப்பது தொடர்பான மாநாட்டின் கீழ் ICJ மூலம் பொறுப்புக் கூறலைத் தமிழ் புலம்பெயர்ந்தோர் கோரியுள்ளனர். 2019 ஆம் ஆண்டு ICJ-யில் நடந்த காம்பியா v. மியான்மர் வழக்கு, இலங்கைக்கு எதிராக இதே போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தாலும், இனப்படுகொலைக்காக இலங்கைக்கு எதிராக எந்த நாடும் இதுவரை வழக்குத் தொடரவில்லை. இலங்கையுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்ட நாடுகள் அத்தகைய நடவடிக்கைகளைத் தொடரத் தயங்குவதே இதற்குக் காரணம்.

நீதியைப் பின்தொடர்வதற்கான ஒரு முக்கியமான வழியாக உலகளாவிய அதிகார வரம்பு வெளிப்படுகிறது. இந்தக் கோட்பாடு, குற்றங்கள் எங்கு நடந்தாலும், சர்வதேச குற்றங்களில் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை எந்தவொரு அரசும் வழக்குத் தொடர அனுமதிக்கிறது. உலகளாவிய அதிகார வரம்பு பொறுப்புக்கூறலுக்கான மிகவும் சாத்தியமான பாதையை வழங்குகிறது. ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர்களை இந்தக் கொள்கையின் கீழ் வழக்குத் தொடர பொருத்தமான நாடுகளாக இருக்கின்றன. உலகளாவிய அதிகார வரம்புச் சட்டங்களை ஏற்றுக்கொண்ட நாடுகளில் இலங்கை அதிகாரிகள் கண்டறியப்பட்டால் அவர்கள் மீது வழக்குத் தொடர இந்த வழி அனுமதிக்கும். கூடுதலாக, OHCHR இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தின் (OSLAP) பங்கு, மீறல்களை ஆவணப்படுத்துவதிலும், உலகில் எங்கும் சர்வதேச அதிகார வரம்பு வழக்குகளை ஆதரிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும்.

முடிவில், அரசியல் எதிர்ப்பு காரணமாக இலங்கையில் உள்நாட்டுப் பொறுப்புக்கூறல் சாத்தியமில்லை. தமிழ் புலம்பெயர்ந்தோரின் தொடர்ச்சியான முயற்சிகளும், உலகளாவிய அதிகார வரம்பின் சாத்தியமான பயன்பாடும் நீதியைப் பெறுவதற்கு முக்கியமானவை. அரசியல் தடைகளை எதிர்கொண்ட போதிலும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற வைப்பதற்கான சாத்தியமான வழிகளை ICJ மற்றும் ICC ஆகியவை வழங்குகின்றன. குற்றவாளிகளைப் பொறுப்புக்கூற வைப்பதிலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு கோருவதிலும் OSLAP மற்றும் சர்வதேச ஆதரவு மிக முக்கியமானதாக இருக்கும். இந்த முயற்சிகள் தொடரும் போது, போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கு நீதி கிடைக்கச் சர்வதேச ஆதரவும் பொதுச் சமூகத்தின் ஆதரவும், ஈழத்தில் தமிழ் மக்களின் ஆதரவும் மிக முக்கியமானதாக இருக்கும். தமிழ் புலம்பெயர்ந்தோர், தொடர்ச்சியான வாதங்கள் மற்றும் சட்ட முயற்சிகள் மூலம் நீதியை நிலைநிறுத்துவதில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிப்பார்கள்.



# அறநெறிக் காவலர்



கவிஞர்
காரை கிருஷ்ணா
தமிழ்நாடு

நடுத்திட்டில் பிறந்து
நடுநிலை மாறாது
நலிந்தோரைக் காத்தவர்-
குன்றக்
குடியின் தவமாய்க்
குடிகாக்கும் குலமாய்
குன்றாய் மிளிர்ந்தவர்.

நாளும் பிள்ளையிடம்
நலமாய்க் குறளோதி
காலணா பெற்றவர்.- என்றும்
வாழும் தமிழாய்
வள்ளுவன் வரியாய்
வையத்தில் வாழ்பவர்

காவி உடுத்தி
ஆவி முழுதும்
அன்பால் நிறைத்தவர் -நல்
ஓவியத் தமிழை
நாவில் நிறுத்தி
நயம்படச் சொன்னவர்

சமபந்தி போசனத்தால்
சமயப்புரட்சி செய்து
மனிதநேயம் காத்தவர் -நல்
சமயப் பணியும்
சமூகப் பணியும்
சமமாய் புரிந்தவர்.
தங்கப் பல்லக்கை
அங்கத்தில் அடியவர்
சுமப்பதைத் தவிர்த்தவர் --உயர்
தங்க தமிழர்
என்றும் உயர
ஏற்றத்தைச் செய்தவர்
உலகத்தமிழன் உறவாய்
கலங்கரை விளக்காய்
அறிவொளி பரப்பியவர்-இவர்
இலக்கு முழுவதும்
நலிந்தோர் வாழ
கிழக்காய் உதித்தவர்

குமரிக் கலவரத்தைச்
சமரசம் செய்யவே
சடுதியில் சென்றார் -உயர்
இமயம்போல் நின்றே
சமயச் சண்டையைத்
தமிழால் வென்றார்.

சந்நிதான மெங்கும்
அந்நிய மொழிகள்
ஆட்சி செய்ய -மீண்டும்
செந்தமிழைக் கருவறையில்
வந்தனை செய்ய
வழிகள் கண்டார்.

நீரும் நெருப்பும்
சேருமா? கூடுமா?
பெரியாரும் அடிகளாரும் - தமிழ்
நெறியால் கலந்திட்டார்
பாரினில் ஏற்றத்
தாழ்வைக் களைந்திட்டாரே.

எண்ணம் முழுவதும்
அன்பை நிரப்பிச்
சிவமாய் வாழ்ந்தவர் -என்றும்
உண்மை வழியில்
தன்னைக் கரைத்தவர்
குன்றக்குடி அடிகளாரே.




INDIAN SIZZLER
Exotic Cuisine
Now open
DAILY LUNCH BUFFET
Catering services
• Wedding
• Birthday celebration
• Banquets
• Baby showers
• Meeting
• Corporate events
• Private party's
• Special occasion
• Live counters
We have special dinner buffet on weekends!
+1 669 777 3077
4150 Great America pkwy,santa clara, CA 95054 ,United state



# கடை விரித்தார், கொண்டோமா?



**செந்தில் முருகன்**
மேரிலாந்து

பத்தொன்பதாம் நூற்றாண்டு, சாதி, சமயம், மதம் என்பவை மனிதர் மனதை வேரோடு பற்றிய காலம். கல்வியற்ற மூடநிலை, தாழ்த்தப் பட்டோருக்குத் துன்பமே வாழ்வு, உணவுமில்லா துயர்நிலை மக்களின் உயிரில் மூச்சாய்ப் பதிந்தது. இருள் ஆட்சி நடத்திய அந்த நாள்களில், விழிப்பின் ஒளியாக வந்தார் சிதம்பரம் இராமலிங்கம் வள்ளலார் எனும் பேரொளி.

### ஆன்மீகக் குரலா அல்லது பொதுவுடமைக் குரலா?

அறிவின் ஒளியை மட்டுமல்ல; அருவத்தின் கருணையையும் பரப்பிய தீபம். இயல்பில் மென்மையான அவர்,

"கலை உரைத்த கற்பனையே நிலைஎனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" எனச் சாபமிட்டவர்.

தனக்கு, முன் வாழ்ந்த திருமூலரும், திருநாவுக்கரசரும் வேதங்களையும், சாத்திரங்களையும் மிகக் கடுமையாகச் சாடியதைப் போலவே வள்ளலாரும் அவற்றைச் சாடி புறத்தொதுக்கினார். ஆனால், அவர்களைப் போல, இறைவனை மட்டுமே முதல் பொருளாகக் வழிபட்டவர். அவர் மத மயக்கங்கள்,மாயைகள் ஆகியவற்றிலிருந்து முற்றிலுமாக விடுவித்ததின் பயனாய் திருவருட்பா-ஆறாம் திருமுறை என்ற நூல் புரட்சியாக வெடித்தது. 'பொதுவுடைமை' பேசும் முதல் குரல் என்றால், அது, 'வள்ளலாரின் ஆறாம் திருமுறை' என்பது மட்டுமே.

சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திர சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

என்ற ஆன்மீகவாதியின் குரல், அழுக்குச் சமுதாயத்தை வெளுப்பதற்காக ஓங்கி ஒலித்த குரலன்றோ!

### சாத்திரக் குப்பையைச் சாடிய சன்மார்க்கி

சாதி மற்றும் சமயச் சடங்குகளால் நிரம்பிய வேதங்கள், சாத்திரங்கள் போன்றவற்றில் ஆன்ம நேய ஒருமைப்பாடு இல்லை என்று கருதிய வள்ளலார், அவைகள், உண்மையை நோக்காதவை, பொய்யானவை, புழங்கிக் கிடக்கும் சழக்கு என்றெண்ணி வெறுத்தார். சாதியையும் மதத்தையும் பற்றிய அவரது பார்வை, அந்த காலத்துக்கேற்ற ஒரு மிகப் பெரிய புரட்சி எனலாம்.

"இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு"
மடமா, அல்லது சங்கமா?

அவர் மடம் அமைக்கவில்லை. மடம் என்பது மரபுக்கேற்ப பதவிகளை நியமிக்கும் மரபின் அடையாளம். அச் சங்கம் ஆடவருக்கும், பெண்டிருக்கும் இடம் அளித்து, ஒருபோதும் சாதி மதபேதம் இல்லாத சமரச சன்மார்க்கத்தின் வழிகாட்டி ஆக அமைந்தது. இதற்காகத்தான் மடம் எனப் பெயரிடாமல் சங்கம் என்ற பெயரினை அவர் இட்டார்.

"தயை உடையார் எல்லோரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே" என்பது அவரது சிந்தனை.

சமரசம் என்பது நாடு, மொழி, சமயம், சாதி அனைத்தையும் கடந்து அனைவரும் ஒன்றுபட்டு நிற்பது என்று கூறிய வள்ளலார்,

### பசிப்பிணி தீர்த்த மருத்துவர்

அக்காலத்தில், பூமி குலுக்கியதைவிட, பசியின் கோரம் உயிர்களை அதிகம் குடித்தது. இதனை அவர் தம் பாடலில்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
என்று துயரமடைந்தாரே!

இச் சூழ்நிலையை மாற்ற எண்ணி 1867 ஆம் ஆண்டில், 'சத்திய தருமச்சாலை' என்ற அமைப்பை நிறுவி, பசி தீர்க்கும் மணிமேகலையாக செயல்பட்டார். 'மக்களிடையே ஒழுக்கம் வளர வேண்டுமானால்

முதலில் அவர்களைப் பசிப்பிணியிலிருந்து நீக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே அவரின் செயல்பாடு அமைந்திருந்தது. பல்வேறு அமைப்புகளும், பசிப் பிணி போக்கும் அந்த அரிய பணியை இன்றும் செய்வதை நாம் கண் கூடாகக் காணலாம்.

நாடு, மதம்,மொழி, இனம், சாதி என்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி உலகோர் பசி போக்குவதையே முதன்மைப் பணியாய் கொண்டு செயல்பட்டு இந்தத் தருமசாலை 150 ஆண்டுகளைக் கடந்து தம் பணியைச் செவ்வனே செய்து வருகிறது.

அண்மைக் காலத்தில் நாம் சந்தித்த ‘பெருந்தொற்று’ காலத்தில் கூட பெருமகனார் மூட்டிய ‘அணையா அடுப்பு’ இடைவிடாமல் தன் பணியை ஆற்றிப் பலரின் பசியைத் தீர்த்தது.

**வள்ளலார் கொள்கைகளும்,தமிழர்களின் கடமைகளும்**

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, வள்ளலார் என்ற ஒளியமுதம் இந்த இருளுக்கே எதிராக எழுந்திருந்தார்.

அவருக்கு, மனிதன் என்பதே மதம்; அன்பு என்பதே வழிபாடு; கருணையே உன்னதமான ஆன்மீகம். தமிழகத்தில் இன்றளவும் பக்தியின்பால் கோயில்களை நாடுவோர் கோடி கோடியாய் இருப்பினும், “யாதும் ஊரே யாவரும் கேளிர்: என்ற ஒற்றுமை மனப்பான்மை அறப்பண்பு தொடர வித்தாய் வாழ்ந்தவர் வள்ளலார்.

மேலும், அக்காலத்தில் முதன் முதலாகப் பொதுமக்களுக்காகத் திருக்குறள் வகுப்பு நடத்தத் தொடங்கியவர் வள்ளலாரே!

வள்ளலாரின் சீரிய பண்புகளை, நெறிமுறைகளை மக்களிடம் பரப்பும் உயர்ந்த நோக்குடன் 1935 ஆம் ஆண்டு திருவருட்பா நூலின் ஆறாம் திருமுறையின் நூறு பாடல்கள் தொகுக்கப்பட்டு, அது, ‘இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு’ என்ற பெயரில் குடியரசுப் பதிப்பகத்தின் மூன்றாவது வெளியீடாக வெளியிட்டவர் பெரியார். இது, ஆன்மீகமும், பகுத்தறிவும் ஒன்று சேர்ந்த இடமன்றோ!

வள்ளலாரை, வழிபாட்டுக்குரியவராகச் சிந்திக்காது, அவரின் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்வது தான் இன்றைய தேவைகளுள் தலையாய ஒன்று.






# தோழர் நல்லகண்ணு ஐயா —தனிப்பெரும் தலைவர்



புஷ்பராணி
மேரிலாந்து

தகைமைசால் நல்லகண்ணு ஐயாவைச் சிறப்பு விருந்தினராக நமது வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவையின் 25 வது வெள்ளி விழாவுக்கு அழைத்திருந்தோம். நான் அவ்விழாவின் துணை ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினேன். தமிழர் நலன், உரிமை, புறச்சூழல் என அனைத்துக்குமாய் அயராது போராடிக்கொண்டிருந்தவர் நமக்காக நேரம் ஒதுக்கி இங்கு வந்திருந்தார். அப்போது எனக்கு கிடைத்த அரிய அறிமுகம் முதலாக பிற அனுபவங்களை நினைவு கூற விழைகிறேன்.

### பேரவையின் அழைப்பும் அமெரிக்க அரசாங்கத்தின் அங்கீகாரமும்

முதன்முதலில், பேரவையில்தான் அந்த மாமனிதரை நேரில் சந்தித்தேன். அப்பொழுது அவரை நேரில் பார்த்து, பேசிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது நான் பெற்ற பெரும்பேறாகும்.

பேரவையின் 25வருட வரலாற்றில் சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முதல் தடவையாக எமது விருந்தாளிக்கு, அவரின் எளிமையான வீடு தேடிச் சென்று, அவரின் அமெரிக்க நுழைவுச்சான்றினையை (வீசா) அன்னாரிடம் கையளித்து அன்னாரை பெரும் மதிப்படையச் செய்தனர். நல்லகண்ணு ஐயா பொதுவுடமை கட்சியைச் சார்ந்தவராக இருந்தும் இந்தப் பெரியவருக்கு மதிப்பளித்தது நம் பேரவைக்குக் கிடைத்த பெருமை.

### எளியோனின் ஏற்றமிகு செயல்:

வெள்ளிவிழாவிற்குப் பின் முதன் முறையாக தமிழ்நாட்டுக்குச் செல்லும் பொழுது தமிழ் செயற்பாட்டாளர்கள், உணர்வாளர்கள், ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுப்பவர்கள் என நான் சந்திக்கவிருந்த பட்டியலில் முதலிடத்தில் இருந்தவர் நல்லகண்ணு ஐயா.

என்னை விமான நிலையத்தில் இருந்து அழைத்து செல்வதற்காக தோழர் சி.மகேந்திரனும், விசுவநாதன் ஐயாவும் வந்திருந்தார்கள். நான் விமான நிலையத்தில் இருந்து போகும் வழியிலேயே நல்லகண்ணு ஐயாவை அவர் வீட்டிற்குச் சென்று சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஐயா வீட்டு வாசலுக்கு அருகில், தெருவில் வண்டி நிறுத்தும் இடத்தில், ஒரு இளைஞன், சிறிய தள்ளுவண்டியில் இளநீர் விற்றுக் கொண்டிருந்தார். அந்த இளநீரைப் பார்த்தவுடன் இளநீர் குடிக்க வேண்டும் போல் ஆசை வந்தது. விலை கேட்டேன். முப்பது உரூபா என்று சொன்னர். என்னிடம் உரூபா இல்லை, உள்ளே போய் பணம் வாங்கி வருகிறேன் என்று சொன்னேன். உடனே, அந்த இளைஞன் சொன்ன பதில் என்னைக் கண் கலங்க வைத்தது. நீங்கள் யாரைச் சந்திக்க வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும், ஆகவே, இந்த இளநீருக்கு நீங்கள் காசு தரத் தேவையில்லை. ஐயாவின் மேல் இந்த சாதாரண தொழிலாளி இவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்து தனது சிறிய அன்றாட ஊதியத்தை அன்பளிப்பு செய்கிறாரே என்று பெருமைப்பட்டேன்.

ஐயா தனது புத்தகங்கள், செய்தித்தாள்கள் மத்தியில் தனது எளிமையான அரசு வாடகை வீட்டில்,, அவருக்கே உரிய புன்னகையுடன் எங்களை வரவேற்றார். எனது கடைசி தமிழ்நாட்டுப் பயணத்திலும் ஐயாவைச் சந்தித்து விட்டு வந்தேன். அடுத்தமுறை தமிழ்நாடு செல்லும் போதும் ஐயாவை சந்திக்கக் காத்திருக்கிறேன்.

ஐயா தொடர்ந்து தனது கொள்கையில் தவறாது, பிறர் நலத்திற்காக, நேர்மையுடனும், பணிவுடனும் பணியாற்றி வருகிறார். தனக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை யெல்லாம் முழுவதுமாக பொது நன்மைக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்.

### பேரவையின் பெரும் முயற்சி:

நல்லகண்ணு ஐயா இன்று எங்களுடன் இந்த



நூறாவது ஆண்டில் வாழ்ந்து கொண்டிருப்பது, பேரவை 2025 விழாவை நல்ல கண்ணு ஐயா நூற்றாண்டு விழாவாகக கொண்டாடுவது தமிழர்களாகிய நமக்கெல்லாம் கிடைத்த பெரும் பேறு. இந்த ஆண்டுத் தொடக்கத்தில் பேரவை செயற்குழு உறுப்பினர் சிலர் ஐயாவை நேரில் சென்று சந்திக்க விரும்புகிறார்கள் என்று தமிழ்ச்சங்க நண்பர் கொழந்த வேல் ராமசாமி என்னை அழைத்து இந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தித் தரும்படி கேட்டார். மிகவும் குறுகிய காலம்தான் இருந்தபடியால் ஐயாவுடன் நெருங்கிய தொடர்பில் உள்ள எம் தோழர்கள் சி. மகேந்திரன், பாடலாசிரியர் இரமணி காந்தன், கவிஞர் குட்டி ரேவதி மூவரையும் அணுகினேன். அவர்கள் முயன்று சந்திப்பிற்கு ஏற்பாடு செய்தனர். பேரவை செயற்குழுவினர் நேரில் சென்று ஐயாவை வாழ்த்தி, சிறப்புச் செய்து, பேரவை நூற்றாண்டு நாயகனிடம் நேரிலேயே பேரவைக்கு ஆசிகள் பெற்றது வரலாற்றுச் சிறப்பு மிக்கது.

வாழ்க நல்லகண்ணு ஐயா!

நிலைக்கட்டும் நல்லகண்ணு அய்யாவின் பணிகள்!




## சங்ககாலப் பெண்பாற்புலவர்கள் சிலரின் பெயர்

# தெரிந்துகொள்வோமா?

குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு பாடல்கள் எழுதியுள்ளார்கள்

1.அள்ளூர் நன்முல்லையார்
2.ஆதிமந்தியார்
3.ஊண்பித்தை
4.ஒக்கூர் மாசாத்தியார்
5.ஔவையார்
6.கச்சிப்பேட்டு நன்னாகையார்
7.காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்
8.நன்னாகையார்
9.பூங்கணுத்திரையார்
10.வருமுலையாரித்தி
11.வெள்ளி வீதியார்
12.நெட்டிமையார்



# ஆய்வு நோக்கில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளும், உலகப் பரவலாக்கலும்



ச.பார்த்தசாரதி,
தமிழ்நாடு

உலகின் மூத்த மொழியாகவும் , முதல் மொழியாகவும் உறுதிசெய்யப்பட்ட தமிழின் உலக மக்களுக்கான கொடை திருக்குறள். இது நாடு,மொழி, இனம், காலம் கடந்து மனித இனத்தின் வாழ்வியல் கூறுகளைப் பேசும் நூலாக விளங்குகிறது. இது ஏற்கனவே உலகப் பொதுமறையாக ஏற்கப்பட்டு உலகின் 148 நாடுகளில் பேசப்படும் ஒரு மொழியிலாவது மொழிபெயர்க்கப் பட்டுள்ள பெருமையைப் பெற்றுள்ளது.

உலக மொழிகளில் திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று 2018 ஆம் ஆண்டு ஒரு முகநூல் பதிவிட்டுத் தேடினோம். உலக நாடுகளில் திருக்குறள் பரவலாக்கம் பெற தரவுகள் அடிப்படையில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் குறித்து ஒரு முழுமையான ஆய்வு செய்யப்படவேண்டும் என்ற வரலாற்றுத் தேவையை உணர்ந்தோம். இதுவரை அப்படி ஓர் ஆய்வு நிகழாத நிலையில் "இருப்பதைப் பரப்புவதும், இல்லாததை உருவாக்குவதும்" என்ற நோக்கில் செயல்படும் வலைத்தமிழ் குழு இதுகுறித்து மேலும் ஆராய 2018 ஆம் ஆண்டு "உலக மொழிகளில் திருக்குறள் : தொகுப்புத் திட்டம்" என்ற ஒரு திட்டத்தை அறிவித்து வெளிவந்துள்ள நூல்களில் குறிப்புகள், சமூக வலைத்தளங்கள், இணையத்தில் கிடைக்கும் தகவல்கள், அறிஞர்களிடம் திரட்ட வேண்டிய தகவல்கள் , உலகத் தமிழர்கள், தமிழ்ச் சங்கங்கள் என்று பல்வேறு இலக்கு வைத்து குழு அமைத்தோம்.

2018 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குழுவின் ஐந்து ஆண்டுகள் இடைவிடாத செயல்பாடுகள், திருக்குறள் மொழிபெயர்ப்புகள் சார்ந்த பல்வேறு தரவுகளைத் தொகுத்திருந்தது. இது ஒரு நூலாக 2012 பக்கங்கள் கொண்ட முழு வண்ணத்தில் 2024 ஆம் ஆண்டு "Thirukkural Translations in World Languages " வெளியிடப்பட்டது. இதற்கானக் குழு ச.பார்த்தசாரதி தலைமையில் அமைக்கப் பட்டு, அக் குழுவில் இளங்கோ தங்கவேலு, முனைவர் N.V.K அஷ்ரப், சி. இராஜேந்திரன் IAS, செந்தில் செல்வன், அஜய்குனார் ஆகியோர் இணைந்து செயல்பட்டனர்.

### மொழிபெயர்ப்பு குறித்த சில ஆய்வுத் தரவுகள்:

| | |
|---|---|
| திருக்குறள் ஓலைச்சுவடியிலிருந்து முதன்முதலாக அச்சுக்கு வந்தது | 1812 |
| முதல் திருக்குறள் மொழிபெயர்ப்பு | மலையாளம் , 1595 |
| இரண்டாவது திருக்குறள் மொழிபெயர்ப்பு | இலத்தீன் , 1730 |
| சமீபத்திய மொழிபெயர்ப்பு | சூலு , ஆப்பிரிக்கான் (தென் ஆப்பிரிக்கா) |
| நிறைவுசெய்யப்பட்ட மொத்த மொழிபெயர்ப்புகள் | 61 (இந்திய மொழிகள்:29, வெளிநாடு மொழிகள்:35) |
| இந்தியாவில் மொழிபெயர்க்கப்படவேண்டிய மொழி | சிந்தி |
| செம்மொழி ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ள, செய்துவரும் மொழிபெயர்ப்புகள் | 127 (இந்திய மொழிகள்:82, வெளிநாடு மொழிகள்:45) |
| தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள , செய்துவரும் மொழிபெயர்ப்புகள்: | 77 (4+28+45) |
| 2030-க்குள் நிறைவுபெற இருக்கும் தோராயமான மொழிபெயர்ப்புகள் எண்ணிக்கை | 308 |
| யுனெஸ்கோ, ஐ.நா. சபை உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை | 194 (UNESCO) 193 (UN) |

### திருக்குறள் இதுவரை உலக அளவில் மொழிபெயர்க்கப்பட்ட பட்டியல்

| எண் | மொழி | மொழி பெயர்ப்புகள் | எண் | மொழி | மொழி | எண் | மொழி | மொழி பெயர்ப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Arabic | 6 | 21 | Gujarati | 3 | 41 | Odia | 7 |
| 2 | Assamese | 2 | 22 | Hindi | 21 | 42 | Punjabi | 1 |
| 3 | Awadhi | 1 | 23 | Indonesian | 3 | 43 | Persian | 1 |
| 4 | Badaga | 1 | 24 | Irish | 1 | 44 | Polish | 2 |
| 5 | Bengali | 5 | 25 | Italian | 1 | 45 | Russian | 5 |
| 6 | Bhojpuri | 1 | 26 | Japanese | 2 | 46 | Sanskrit | 10 |
| 7 | Bodo/Boro | 1 | 27 | Kannada | 9 | 47 | Santali | 1 |
| 8 | Burmese | 1 | 28 | Kashmiri | 1 | 48 | Saurashtri | 2 |
| 9 | Chinese | 3 | 29 | Khmer | 1 | 49 | Sinhalese | 2 |
| 10 | Creole | 1 | 30 | Kodava | 1 | 50 | Spanish | 3 |
| 11 | Czech | 1 | 31 | Konkani | 3 | 51 | Swahili | 1 |
| 12 | Danish | 1 | 32 | Korean | 1 | 52 | Swedish | 1 |
| 13 | Dogri | 1 | 33 | Koraga | 1 | 53 | Telugu | 19 |
| 14 | Dutch | 1 | 34 | Latin | 5 | 54 | Thai | 1 |
| 15 | English | 102 | 35 | Malay | 6 | 55 | Tok Pisin | 1 |
| 16 | Fijian | 2 | 36 | Malayalam | 24 | 56 | Tulu | 1 |
| 17 | Finnish | 2 | 37 | Marathi | 3 | 57 | Urdu | 4 |
| 18 | French | 19 | 38 | Manipuri | 1 | 58 | Vakraboli | 2 |
| 19 | Garo | 1 | 39 | Maithili | 1 | 59 | Turkish | 1 |
| 20 | German | 7 | 40 | Nepali | 1 | 60 | isZulu | 2 |
| | | | | | | 61 | Brahui | 1 |

இக் குழு வெளியிட்ட ஆய்வறிக்கையின் படி "Thirukkural Translations in World Languages " நூலில் இதுவரை உலக அளவில் 345 முறை 61 உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்றும், இன்னும் 158 உலக அலுவல் மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படவேண்டும் என்பதும் ஆய்வுகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. மேலும் ஐ.நா. சபை , யுனெஸ்கோவில் அங்கீகரிக்கப் பட்ட அலுவல் மொழிகளில் போர்ச்சுகீசு மொழியைத் தவிர அனைத்து மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பதையும், இந்தியாவின் 22 அலுவல் மொழிகளில் சிந்தி மொழியைத்தவிர மீதம் உள்ள 21 மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது என்பதும் நமக்கு பெருமை தரும் செய்தியாகும். 61 மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டிருந்தாலும் அது 148 நாடுகளின் ஏதாவது ஒருமொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பது பெருமைக்குரியதாகும். மேலும், 127 மொழிகளில் செம்மொழி ஆய்வு நிறுவனமும், 73 மொழிகளில் தமிழ்நாடு அரசும் என மொத்தம் 200 புதிய மொழிபெயர்ப்புகளைச் செய்ய அறிவிப்பு செய்துள்ளனர். இதுவரை கையில் எடுத்துள்ள மொழிகளைத் தவிர்த்து மீதம் உள்ள 52 உலக அலுவல் மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப் பரப்புரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருக்குறள் பரவலாக்கல் திட்டத்தில் வட அமெரிக்கத் தமிழர்களும் , உலகத் தமிழர்களும் கைகோர்த்து அமைப்புகளாக, தன்னார்வலர்களாக உலக அலுவல் மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட் ஒரேநூலாகத் திருக்குறளைச் செய்துமுடிப்போம்.



# தோழர் நல்லகண்ணு ஒய்வறியா உரிமைக்குரல்



முனைவர் முரளி
கண்ணணன் மருதமுத்து
வட கரொலைனா

1925ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் நாள், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி கான்பூர் நகரில் அமைக்கப்பட்டது. அதே நாளில், 1924 ஆம் ஆண்டு இந்தியாவின் தென்கோடியில் உள்ள திருவைகுண்டம் பகுதியில் உள்ள பெரும்பத்து ஊரில், தோழர் எ.ஆர். நல்லகண்ணு பிறந்தார். இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேரும் போது இவரது வயது 18 தான். அன்று தொடங்கியது அவர் போராட்ட வாழ்க்கை, ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட்டம் என்று தொடங்கி, விவசாயக் குடிகளுக்கு ஆதரவாகப் போராட்டம், சாதி ஒழிப்புப் போராட்டம், ஆலய நுழைவுப் போராட்டம், சமூகநீதிப் போராட்டம், தலித் மக்களுக்குப் போராட்டம், வறுமைக்கு எதிராகப் போராட்டம், ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராட்டம், மணல் கொள்ளைக்கு எதிரான போராட்டம், உழைப்பு சுரண்டலுக்கு எதிரான போராட்டம், சிறுபான்மையினர் பாதுகாப்புக்குப் போராட்டம் என்று இவர் நடத்தாத போராட்டமே இல்லை. இந்த ஒய்வறியா போராட்ட நாயகனின் போராட்டங்களில் சிலவற்றை காணலாம்.

மக்களுக்கான முதல் போராட்டம்: இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சமயம் அது. போரின் விளைவாக பிரிட்டிஷ் ஆட்சியில் ஏற்பட்ட தடுமாற்றம், இந்தியாவில் உணவுப் பொருள்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படக் காரணமானது. அதனால், உணவுப்பொருள் பதுக்கல் நடந்து இருப்பது தோழர் நல்லக்கண்ணுவின் கவனத்துக்கு வருகிறது. அந்த இடத்துக்குப் பத்தினிக் கோட்டம் என்று பெயர். இதற்குள் ஆண்கள் பிரவேசிக்கக் கூடாது என்பது ஊர்க்கட்டுப்பாடு. இதைப் பயன்படுத்தி நெல் மூட்டைகள் பதுக்கப்பட்டன.

வருவாய் கோட்டாசட்சியருக்கு கடிதம் எழுதி அலுவலர்களை வரவழைத்து அதிகாரிகள் துணையுடன், பதுக்கப்பட்ட ஆயிரம் மூட்டைகள் நெல்லை வெளிக்கொண்டு வந்தார். அரசியல் வாழ்வில் பொதுமக்களுக்கான இவரது தொடக்ககால செய்கைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று இது.

முதல் போராட்ட வடு: 1947ஆம் ஆண்டு மே தினக் கொண்டாட்டத்தை இளைஞரான நல்லகண்ணு, நாங்குநேரி வட்டத்தில் மக்களை திரட்டி வெற்றிகரமாக நடத்தினார். அதை ஏற்றகவியலாத நிலவுடமையாளர்கள் வெகுண்டெழுந்து குண்டர்களை ஏவி தோழரைக் கடுமையாகத் தாக்கினர்.. இதுவே அவர் மக்களுக்கான போராட்டத்தின் முதல் வடு.

ஆயுதம் ஏந்திய போராட்டமே இப்போதைய தேவை என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. அதன் விளைவாக, 1948 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி இந்தியா முழுவதும் தடை செய்யப்பட்டது. நாடெங்கும் உள்ள கம்யூனிஸ்டுத் தோழர்கள் வேட்டையாடப்பட்டனர். 20.12.1949 அன்று தலைமறைவாக இருந்த நல்லகண்ணுவை காவல்படை கைது செய்து அவரது கை, கால்களில் விலங்கு பூட்டி அழைத்துச் செல்லும் வழியில் சாலையோரத்தில் படுக்க வைத்து உடலை மிதித்துத் துன்புறுத்தினர். அப்போது அவரது மீசையை வெண்புகை சுருட்டின் நெருப்பினால் பொசுக்கித் துடிதுடிக்க வைத்தனர். அத்தனை கொடுமைகளையும் அவர் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டார். வீரத்தின் அடையாளம் மீசை இல்லை, அது லட்சியத்தின் மீதான தீராக் காதல் என்றார். அப்போது அவருக்கு வயது 27. 3 ஆண்டுகளுக்கு மேல் விசாரணை நடத்தப்பட்ட சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட அனைத்துத் தோழர்களுக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு நாடெங்கும் மூண்டெழுந்த மக்கள் இயக்கத்தின் விளைவாக நெல்லை சதி வழக்கில் தண்டிக்கப் பெற்றவர்களில் தோழர் நல்லகண்ணு அவர்களைத் தவிர அனைவரையும் விடுதலை செய்தார் ராஜாஜி. 5 ஆண்டு காலம் கடுங்காவல் தண்டனையை

அனுபவித்து மொத்தம் 7 ஆண்டு காலம் சிறையிருந்து 1956 ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் நாள் அன்றுதான் அவர் விடுதலையானார்.

### மணல் கொள்ளை எதிர்ப்பு:

தமிழக ஆறுகளில் குவிந்திருக்கும் மணல் கொள்ளையடிக்கப்பட்டு ஆறுகள் முழுவதும் புதர்கள் வளர்ந்து மண்டிக் கிடக்கின்றன. விவசாயத்திற்கு நீர் வருவதில்லை, இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்தார் தோழர் நல்லகண்ணு. நீதிமன்றம் அவரைப் பாராட்டியதோடு, ஆய்வுக் குழு ஒன்றினை அமைத்து மணல் கொள்ளை குறித்து ஆராய்ந்து ஆய்வு அறிக்கை தருமாறு உத்தரவிட்டது.

### சமூக ஒற்றுமை காவலர்:

சாதிக் கலவரத்தால் அக்கிராமத்தில் அச்சமும் வெறியும் ஒன்றையொன்று மிஞ்சியிருந்த சூழலிலும் தன்மக்கள் என்ற நினைப்புடன் தன் வீட்டில் படுத்திருந்தார் மாமனார் அன்னாசாமி. 80 வயது முதியவர் என்றுகூட பாராமல் அவருடைய மனைவியின் கண் முன்னே அவரை வெட்டிச் சாய்த்தனர். மாமனாரின் கொலைச் செய்தி கேட்டு அளவிலா துயரத்துடன் விரைந்து வந்த தோழர் நல்லகண்ணு அவர்கள் மாமனாருக்கான இறுதி சடங்குகளை முடிந்தவுடன் கலவரப் பகுதியில் அமைதியை நிலைநாட்டும் வேலையில் ஈடுபட்டார். மோதிக்கொண்ட இரு சாதியினரிடையே அமைதியை நிலவச் செய்யவும், ஒற்றுமையை நிலைநிறுத்தவும் தொடர்ந்து பேசினார். தனது மாமனாரைப் படுகொலை செய்தவர்கள் என யாரையும் அவர் வெறுத்தொதுக்கவில்லை. அரசு தன் மாமனார் கொலைக்கு கொடுத்த நிவாரண நிதியை இருசமூகத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் குழந்தைகளுக்கு பிரித்து கொடுத்தார்.

நல்லகண்ணு ஐயாவை பற்றி சிந்திக்கும் போதெல்லாம், ஆபிரஹாம் லிங்கான் எழுதிய ஒரு வரி எப்பொழுதும் நினைவு வரும் - *In the end, it's not the years in your life that count. It's the life in your years - Abraham Lincoln.* தன் வாழ்க்கை முழுவதும் மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டு இருக்கும் ஓய்வறியா உரிமை குரல் ஐயா நல்லகண்ணு அவர்கள் தமிழகத்தின் ஆபிரகாம் லிங்கன் என்றே உணர்கிறேன்.








# உரிமைக் குரல் உறங்குவதில்லை!



சிகாகோ பாஸ்கர்
இல்லினாய்

“தம்பி, இரண்டு வடை, சீனி (சர்க்கரை) குறைவாக ஒரு தேநீர்” என்று அங்கு வந்த உணவுப் பரிமாறியவரிடம் கூறினேன். “வடை” என்ற சொல்லை மட்டும் புரிந்து கொண்ட அவர், அருகே இருந்த இன்னொரு பரிமாறுபவரை நோக்கினார். அவருக்கு நான் கூறிய தமிழ் மொழி சரியாகப் புரியவில்லை போலும். அவர் தென் இலங்கையில் இருந்து சில வாரங்களுக்கு முன்பு தான் வேலைக்கு வந்திருந்த சிங்களவர் என்பதை அறிந்து கொண்டேன். அருகே இருந்த தமிழ் பரிமாறுபவர் அதைப் புரிந்துகொண்டு “சரி சார், நான் கவனிக்கின்றேன்'' என்று கூறிவிட்டு மற்றவருக்குக் கைகளால் சைகை காட்டியபடி உள்ளே சென்றார்.

அப்போது எனக்கு அருகில் இருந்த பெரியவர், ''தம்பி நீங்கள் வெளி நாட்டில் இருந்து வந்திருக்கிறீர்கள் போல இருக்கு, இன்று எங்கள் நிலைமை இப்படித்தான் இருக்குது. யாழ்ப்பாணம் இப்போது போர் நடந்த பூமி மாதிரியாகவா இருக்குது?

வெளி நாடுகளுக்கு நடந்தவற்றை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் மேற் கொண்ட ஒரு சில நடவடிக்கைகள் ஒரு புறம் இருந்தாலும், உங்களைப் போல வெளிநாட்டுக்காரர்களின் தாராள மனதினால் செய்கின்ற ஏராளமான உதவிகளால் தான், எமது பூமி இன்று வளமாக இருக்கிறது. செழிப்பாக விளங்குகிறது.

ஆனால் நீங்கள் செய்கின்ற அளவுக்கதிகமான உதவிகள் எங்கள் இளைஞர்களைத் தவறான பாதைக்குள் கொண்டு செல்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும். வசதிகள் அவர்கள் எதிர்காலத்தை வளப்படுத்தத் தவறுவதோடு, பலருக்கு வெளிநாடு செல்லவேண்டும் என்ற எண்ணம் மட்டும் மேலோங்கியிருக்கிறது. கடினமான வேலை செய்கின்ற ஊக்கமும் இங்குள்ள இளைஞர்களுக்குக் குறைவாக இருக்கிறது.

அதனால் இப்படியான வேலைகளைச் செய்வதற்கு எமது இளைஞர்கள் முன்வருவது மிகவும் குறைவாக இருப்பதால்இலங்கையின் பெரும்பான்மையினர் வாழும் இடங்களில் இருந்து இங்கு வேலைக்கு வருகிறார்கள். அப்படி வந்தவர்களில் ஒருவர்தான் இந்தப் பையன். இந்த வேலைக்கு மட்டுமல்ல வீடு கட்டுதல், மற்றும் வேறும் பல வேலைகளைக் கூட அவர்கள் வந்து செய்கிறார்கள். இது எங்கள் மண்ணில் மட்டுமல்ல, தமிழ் நாட்டில் கூட இதே நிலைதான். வடக்கில் இருந்து தமிழர்கள் அல்லாத பலர் தமிழ் நாட்டிற்கு வந்து பல்வேறு தொழில்களையும் செய்கிறார்கள். ஒரு வித்தியாசம் தமிழ் நாட்டிற்கு வடக்கில் இருந்து வருகிறார்கள். எங்கள் பகுதிக்குத் தெற்கில் இருந்து வேலைக்கு வருகிறார்கள்.

இதுதான் இன்றைய நிலை” என்று கூறி முடிக்க தேநீரும் வடையும் மேசைக்கு வந்து சேர்ந்தது. அவரிடம் இருந்து விடை பெற்று வெளியே வந்து ஒரு பேருந்தில் ஏறி அமர்ந்தேன். அருகில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு, " தம்பி, நீர் சிவலிங்க வாத்தியாரின் மகன் தானே என்றார். ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன். வேலுப்பிள்ளை வாத்தியார். “ஓமையா அர்ச்சகன். உங்களிடம் கணிதப் பாடம் படிச்சனான்” என்றேன்.

“ஓ என்னை ஞாபகம் வைத்திருக்கிறாயா?

“ஐயா, உங்கள் மகள் தமிழ் செல்வி, மற்றும் பாலச்சந்திரன் இருவரும் எப்படி இருக்கிறார்கள். அவர்களுக்கு குடும்பம் இருக்கிறதா? உங்களுக்குப் பேரப்பிள்ளைகள் இருக்கிறர்களா? என்று நான் கேட்டதும், அவர் குரல் கரகரத்தது, கண்களில் நீர் பனித்தது.

''தம்பி, எனக்கு அது எதுவுமே குடுத்து வைக்கவில்லை. நடந்து முடிந்த யுத்தத்தில் விதைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான வித்துகளில் அவர்களும் புதைக்கப்பட்டனர். வெறுமனே வாத்தியார் சிவலிங்கமாக இருந்த எனக்கு, அவர்கள்

மாவீரர்களின் தகப்பனார் என்ற கௌரவத்தைத் தேடித் தந்துவிட்டுப் போனார்கள்" என்று கூறிவிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதார். சற்று நேரத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, எதையோ யோசித்தவராக, தம்பி, ஒரு சமூகமே இடம் பெயர்ந்த போது, அந்தச் சமூகத்தையே ஒரு நாடாக மாற்றிய ஒப்புயர்வற்ற ஆளுமை கொண்ட ஒரு தலைவனை இழந்த எங்கள் தமிழ் இனமானது இன்று ஒரு தலைவன் இல்லாது தவித்துக் கொண்டிருக்கிறது.

தம்பி, உங்களைப் போன்றவர்களால் தான் பல வீடுகளில் அடுப்பு எரிகிறது. பலர் ஓரளவு உண்டு, உடுத்து வாழ்கின்றபோதும்,சிலர் வறுமைக்கோட்டுக்குக் கீழேயும் வாழ்கிறார்கள். அதே வேளை இங்குள்ள வறுமையை பயன் படுத்தி வெளிநாட்டவர்களிடம் உதவி பெற்றுத் தங்களை வளப்படுத்திக் கொண்டு வாழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை வேதனையோடும் வெட்கத்தோடும் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதே சமயம் இன்றைய இளம் சமுதாயத்தில் சில பிள்ளைகள் அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். இன்றும் பலர் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி வாழ்வதற்குத் திண்டாடிக்கொண்டு தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமையை விட உண்பதற்கு உணவே அத்தியாவசியமாக இருக்கிறது. உரிமைக்காக நாங்கள் கொடுத்திருக்கும் விலை கணக்கற்றது.

இவ்வளவு இன்னல்களுக்கும் துன்பத்திற்கும் ஆளாகிய போதும் இன்னும் எங்களுக்குள் ஒற்றுமை இல்லாதிருப்பது வேதனையே. பல பிரிவுகள், கட்சிகள், சாதி சமையப் பிரச்சனைகள் இன்னும் ஏதேதோ இங்கு பரவலாக இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் பல காணிகள் முள்ளு வேலிகளால் அடைக்கப்பட்டு வெறுமனே இருக்கின்றன. அவையெல்லாம் வெளிநாட்டுக்காரர்களின் காணிகள்தான். அவற்றைப் பண்படுத்தி பயன்படுத்த எந்த முயற்சியும் கிடையாது. வாழும் தலைமுறைக்கு கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கல்வியொன்றுதான் எங்கள் உரிமைக்கான ஆயுதம் என்பதை நாம் இன்னும் ஏனோ புரிந்து கொள்ளவில்லை.

மண்ணுக்காக மடிந்து போன ஒவ்வொருவரின் கனவும் மண்ணின் உறவுகள் நிம்மதியாக வாழ்வதற்குரிய ஒரு வழியை ஏற்படுத்துவதே. எங்கள் நிலைமையை பிரச்சனையை எடுத்துக் கூறி ஒரு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தால் அவர்களின் ஆத்மா சாந்தியடையும்.

அதற்கு உங்களைப் போன்றவர்களால் தான் உதவ முடியும். யுத்தத்தினால் அகதிகளாக உலகெங்கும் சிதறிச் சென்ற மக்கள் இன்று உலகெங்கும் பரந்து சிறந்து வாழ்கிறார்கள். இளம் தலைமுறையினர் இன்று அறிவாலும் ஆற்றலாலும் மேம்பட்டு விளங்குகிறார்கள். உரிமைகள் உறங்குவதில்லை. அதை அடைவதற்கு இனிக் கல்வியே எமது ஆயுதம். கல்வியால் மட்டுமே அதை அடையமுடியும் என்பதை எமது இளம் சமூகத்தினரின் மனதில் பதிக்கவேண்டும்.

அடுத்த தலைமுறைக்கு சாதி, சமயம், போட்டி, பொறாமை, பழிவாங்கல், வஞ்சகம், சின்னத் திரைக் கொடுமைகள். இலஞ்சம் போன்றவற்றைக் கடத்தாதீர்கள். நாங்கள் கடந்து வந்த வரலாற்றை கடத்துங்கள். எங்கள் வரலாறுகள் அடுத்த தலை முறையினர்க்கு கடத்தப் படவேண்டும். அவர்கள் நினைத்தால் எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை மட்டுமல்ல, ஒரு கௌரவமான சுதந்திரமான வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதைச் செய்வீர்களா? என்று கை எடுத்துக் கும்பிட்டார். அவர் கண்களில் கண்ணீர் திரண்டு உருண்டு சவரம் செய்யப்படாத கன்னங்களில் வடிந்தது.

என் கண்களிலும்....





# பெருமை மிகு தமிழர்கள் அடிகளாரும் நல்லகண்ணு அய்யாவும்!



**சோம. இளங்கோவன்**
வட கரொலைனா.

தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் வாயிலாக குன்றக்குடி அடிகளார் மற்றும் அய்யா நல்லகண்ணு இருவரையும் சந்தித்த மகிழ்ச்சியான அனுபத்தைப் பகிர்ந்து கொள்கிறேன்.

எனது அருமை நண்பர் இராசேந்திரன் தமிழ்ச்சங்கத் தலைவராக இருந்தபொழுது அடிகளார் அவர்களை மிச்சிகன் மாநாட்டிற்கு அழைத்திருந்தனர். அங்கிருந்து மகிழுந்தில் அடிகளாரைச் சிகாகோ அழைத்துச் செல்லும் அருமையான வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

அவருடைய பட்டிமன்றப் பெருமைகளைப் பற்றிக் கேட்டேன். காரைக்குடி கம்பன் கழகப் பட்டிமன்றம் மிகவும் புகழ் பெற்றது. அங்கு அவர் பங்கேற்ற பட்டிமன்ற தலைப்புகள், பங்கேற்பாளர்கள் பற்றிக் கூறினார். அன்றைய இலக்கியச் சொற்பொழிவுகள் மிகவும் புகழ் பெற்றவை .அவர் சொற்பொழிவாற்றாத் தமிழ்ச் சங்கங்களே இல்லை எனலாம்.

சிகாகோ தமிழ்ச் சங்கத்தில் மிகவும் அருமையாகப் பேசினார். அனைவருடனும் அன்புடன் பழகியது அனைவர்க்கும் மிகவும் பிடித்து விட்டது. எளிமையாகப் பேசினார். கருத்தாழம் மிகுந்த உரையாடல்கள்.

பின்பு, நாங்கள் குன்றக்குடி சென்று அடிகளாரைப் பார்த்தோம். எளிமையான ஆனால் தூய்மையான அலுவலகம் அவருடையது. காலைச் சிற்றுண்டிக்குப் பின்னர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அமெரிக்க நண்பர்களைப் பற்றிக் கேட்டார். பரிசுகள் கொடுத்து வழி அனுப்பினார். அவருடன் இறுதிவரைத் தொடர்பில் இருந்தேன்.

அய்யா நல்லகண்ணு அவர்களை அமெரிக்க அழைத்துவரப் பெரு முயற்சி எடுத்து நன்முறையாக அழைத்து வந்து சிறப்பித்தோம். பின்பு, அவர் எங்கள் இல்லத்தில் வந்து தங்கியிருந்து நியூசெர்சி கூட்டத்தில் கலந்து கொண்டார். மிகவும் எளிமையான மனிதர்.

அவருடைய இளமை காலத் திருவைகுண்ட வாழ்க்கையைப் பற்றிப் பேசினேன். அங்குள்ள பெரிய கோட்டையில் ஆண்கள் நுழைய முடியாது. அருகே உள்ள ஆழ்வார்திருநகரி மிகவும் புகழ் பெற்ற இடம். தமிழ்நாடு சட்டமன்றத் தலைவராக இருந்த பெருமதிப்பிற்குரிய செல்லபாண்டியனார் ஊர். அங்கே எப்படி அவர் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றார், சிறைவாசம் எல்லாம் விவரமாக விவரித்தார். அவருடைய பொதுவுடைமை தொடக்கம் முதல் சந்தித்தப் போராட்டங்களையெல்லாம் மிகவும் விரிவாக அலசினோம்.

அமெரிக்காவில் பல இடங்களுக்குச் சென்றதையும் அவருடைய கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டார். தென்பாண்டிச் சீமையின் சிறப்பு அவரின் சொல்லிலும் செயலிலும் வெளிப்பட்டது.

நாங்கள் தாயகம் சென்றிருந்தபோது திருச்சிக்கு வந்திருந்தார். என்னை அழைத்து எங்கள் பிச்சாண்டார் கோவில் இல்லத்திற்கு வருகிறேன் என்றார். நான் வந்து அழைத்து வருகிறேன் என்று சொல்லி அழைத்து வந்தேன். அங்குள்ள சிறுவர் சிறுமியர் ஆர்வத்துடன் அவரிடம் பல கேள்விகள் கேட்டனர். அனைத்துக் கேள்விகளுக்கும் பொறுமையாகப் பதிலளித்தார். . எளிமையான உணவைச் சுவையாக இருந்தது என்று பாராட்டி உணவருந்தினார். மிக்க மகிழ்வுடன் அனைவருடனும் பேசிச் சென்றார்.

அவருடைய நூற்றாண்டு வாழ்த்து சொன்ன போது மகிழ்ந்தார். அவருடைய வாழ்வு பொது அர்ப்பணிப்பின் இலக்கியமும் இலக்கணமும் ஆகும்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை தொடர்ந்து தன் பணியைச் செய்து புகழ் பெற்று வாழ, வளர நம் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அமையட்டும்.

வாழ்க தமிழ், வளர்க பேரவை!


RELAY LOGISTICS
Inspire Excellence
RELAY LOGISTICS RL INSPIRE EXCELLENCE
USA | CANADA | UK | INDIA
CUSTOMS CLEARANCE
INTERMODAL LOGISTICS
WAREHOUSING & STORAGE
SEAMLESS RAIL CONNECTIVITY
DIGITALLY ENABLED ICD
International Shipping Made Easy
Ship to and from anywhere in the world with our various affordable shipping solutions.
Worldwide Freight Services
RELAY LOGISTICS LLC
Charlotte - USA
Ontario - Canada
Kenilworth - UK
Chennai & Cochin - India
+1 (704)666-3236
+1 (201)238-8739
infousa@relay-logistics.com
info@relay-logistics.com
www.relay-logistics.com
DF ALLIANCE
N.V.O.C.C
JCTRANS
RELAY



# காவி உடை தரித்த காரல் மார்க்ஸ்



முனைவர் பா.செல்வன்
தமிழ்நாடு

பொது உடைமை இயக்கமும்,
தகைசால் தோழர் நல்லகண்ணுவும்,
பிறந்த அதே ஆண்டில் அவர்களோடு உடன் பிறந்து,

காலணாவிற்கு குறள் பாடி,
சொல்லின் செல்வர் ரா பி சேதுப் பிள்ளையை மகிழவைத்த,
மயிலாடுதுறை தந்த அரங்கநாத அடிகளார்!

ஆதிக்கம் செலுத்த வந்த இந்தியை
அறப்போர் மூலம் தடுத்த ஆன்மீக அடிகளார்!

தமிழ் மொழி காக்கக் கைதாகி,
தண்டம் செலுத்தி
தண்டத்தை பேரறிஞர் அண்ணா வழியில்
திரும்பப் பெற்ற,
தண்டபாணித் தெய்வத்தின் அடியவர் அடிகளார்!

கடல் தாண்டி மலேயா சென்று
இறைமறுப்பை எதிர்கொண்டு
பகுத்தறிவால் வென்ற பண்பாளர் அடிகளார்!

அறம் சார்ந்த செயல்களால்
யாரும் புறம் தள்ள முடியாமல்
வாழ்வறத்தை வென்ற துறவறம் அடிகளார்!

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக
அச்சாரம் இட்டு, அறம் வளர்த்து,
ஆன்மீகத்தை வளம் பெறச்செய்த
ஆன்மீக செம்மல் அடிகளார்!

பட்டி மண்டபம் தான் பட்டி மன்றம் என
இலக்கணம் வகுத்து

பட்டி தொட்டி எல்லாம் பட்டி மன்றங்களை நடத்தி
தமிழ் முரசு கொட்டிய முண்டாசு முனிவர் அடிகளார்!

சோவியத்து சென்று வந்து
பொது உடைமை பாடம் படித்து
குன்றக்குடி வந்து மாதிரி கிராமம் கண்ட
காவி உடை காமரேடு அடிகளார்!

ஆதீனங்கள் பயன்படுத்தும்
தங்கப் பல்லக்கை தள்ளி வைத்த
தகை சால் தம்பிரான் கந்தசாமி அடிகளார்!

குமரிக்கடலில் திருவள்ளுவர் சிலை எழுப்ப
முழு முதல் தீர்மானம் கொண்டுவந்த
உலகத் திருக்குறள் பேரவையின்
குறள் நெறித்தூண் அடிகளார்!

குடி, திரை அரங்கம், சூது, புலால் வணிகம் என
கேளிக்கைகள் இல்லாத குன்றக்குடியை
கட்டமைத்த தூய்மையின் சிற்பி அடிகளார்!

வாழ்ந்தது எழுபது அகவை தான் என்றாலும்
சாதித்தவை அனைத்தும் அவர் இட்ட அச்சாரங்கள்.
இன்று அவர் இருந்தால் அவருக்கு நூற்றாண்டு
ஆனால், உலகத் தமிழ் நெஞ்சங்கள்
அவர் புகழைப் பாடப்போகின்றன....... ,
இன்னும் பல்லாயிரத்தாண்டு. ....... ...
இல்லை பல கோடி நூற்றாண்டு!


வட அமெரிக்கத்
தமிழ்ச் சங்கப்பேரவையின் தமிழ் விழா
சிறப்புற நடைபெற வாழ்த்துகிறோம்!
GALE RANCH
FINANCIAL SERVICES
GALE RANCH
Financial Services
SINCE 2018
Estate Planning - Will & Trust
Retirement & Pension Planning
College Planning
Tax Savings
Business opportunity
LIFE Insurance
Long Term Care
வருமுன்
காப்போம்!
GOVIND GOPAL
Financial Professional
Serving North America & Canada
www.galeranchfin.com
govind@galeranchnotary.com
+1 (925) 322-3131
BBB
ACCREDITED BUSINESS



# தகவல் நுழைபுலம்



பழமைபேசி
வட கேரொலைனா

மாந்தநேயத்தின் அடிப்படை அன்பும் அறமும். ஆனால் இவற்றைச் செயற்படுத்துவது, பின்பற்றி ஒழுகுவது என்பதெல்லாம் எல்லா நேரமும் எல்லாருக்கும் கைகூடி வருவதில்லை. வாழ்க்கை என்பது அந்தந்த நேரத்து நியாயங்கள் என்றார் எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரவருக்கான நியாயங்கள் வேறு வேறாக இருக்கின்ற தருணங்களில் முரண்கள் தோன்றுகின்றன. காரணம், ஒவ்வோரு மனிதனும் தனித்துவமானவன். அவனுக்கான விருப்பு வெறுப்புகள் வேறு வேறாக இருக்கின்றன. இதனைப் புரிந்து கொண்டாலே போதும், நமக்குள் சகிப்பும் பொறுமையும் வாய்த்து விடும்.

தனித்துவமான மனிதர்கள், கூட்டுறவோடும் வாழ்ந்தாக வேண்டும். மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு. சமூகமாக வாழத்தலைப்பட்டவன் அவன். அப்படியாகக் கூடி வாழத் தலைப்படுகையில், நமக்குள்ளாக உண்மை, வெளிப்படைத்தன்மை, நம்பகம் ஆகியன கட்டமைக்கப்பட்டாக வேண்டும். அப்போதுதான் முரண்களின் வீச்சு மட்டுப்படும்.

உண்மையென்பது நிரம்பி இருக்கின்றபோது தனிமனிதர்களுக்குள்ளான அணுக்கம் மேலும் இறுகி, அன்பின் பெருக்கம் பீறிடுகின்றது. புரிதல் வலுப்படுகின்றது. உண்மையான தகவல்களை வெளிப்படையாகப் பரிமாறிக் கொண்டால்தான், குமுகாயமாக, குழுவாக இருக்கின்ற இடத்திலே எல்லாரும் ஒரேவிதமான புரிதலை, அறிதலைக் கொண்டிருக்க முடியும்.

இப்படியாக, உண்மையான தகவலை உடனுக்குடனே உகந்த நேரத்தில் பரிமாறிக் கொள்கின்ற போது, அந்தப் பொதுவெளியில் குழுமியிருக்கின்ற எல்லாருள்ளும் நம்பகம் குடிகொள்கின்றது. நம்பகம் இல்லாத இடத்தில் மேன்மைக்கு வழியில்லை. கூட்டுறவுக்கு வழியில்லை. இணக்கத்துக்கு வழியில்லை. அன்புக்கு வாய்ப்பில்லை.

உண்மை, வெளிப்படை, நம்பகம் மேலோங்குவதற்கு அச்சாரம் தகவல் தொடர்பு. அன்பும் அறமும் தழைத்தோங்க வேண்டுமானால், தகவல் தொடர்பில் நாம் மேம்பாடு கொண்டாதல் இன்றியமையாதது.

குடும்பமாக இருந்தாலும் சரி, நிறுவனமாக இருந்தாலும் சரி, பொதுவாழ்வானாலும் சரி, அறிதலும் நாடலும் தேடலும் பொதுவான விழுமியங்களாகும்.

அறிதலுக்கும் நாடலுக்கும் தேடலுக்கும் உகந்த பொருண்மியங்களும் உடனுக்குடனே கொடுக்கப்பட்டாக வேண்டும். அல்லாவிடில், மனிதமனம் ஏமாற்றம் கொள்ளும். அது இயல்பு. தகவலும், உண்மையான பற்றியங்களும் ஆக்குதல் வேண்டும். தொடர்பிலும் இருந்தாக வேண்டும். இவைதாம் தகவல் தொடர்பின் அடிப்படை.

சீரான கதையாடல்கள், மேன்மைக்கான சட்டதிட்டங்கள், நிகழ்வுகள், பணிகள் முதலானவற்றைக் கொண்டும் அக்கறையின் பாற்பட்டும் தகவல் பரிமாற்றத்தைக் கட்டமைக்கப் படுகின்ற இடத்தில் மனிதம் தழைத்தோங்கும்!

எவருள்ளும் அன்பு சுரக்கும்!

**அச்சில் வந்த முதல் தமிழ்ச் சிறுகதை**

1913ல் வெளிவந்த
சங்கல்பமும் சம்பவமும்,

எழுதியவர் அம்மணி அம்மாள்.


ZYLO
FOOD & PRODUCTS
From
INDIAN FARMS
To American tables-pure, natural, and straight from the farms of India.
Traditional & Quality Food Distributors
ZYLO FOOD & PRODUCTS
Charlotte NC
info@zylofoods.com
For more info:



# வியக்க வைக்கும் வாழ்க்கை வாழ வழி

## "தவத்திரு குன்றக்குடி அடிகளார்" புகழ் போற்றும் இசைப்பாடல்!



பாடலாசிரியர்
ஏ. இரமணிகாந்தன்

*எடுப்பு* :

பேரன்பு பெருக்கெடுத்த பெரியார்...
பேதமற்ற சமூகம்காண விழைந்தார்...

குன்றக்குடி அடிகளாராய் திகழ்ந்தார்...
குன்றிலிட்ட விளக்காக ஒளிர்ந்தார்...

அறநெறிவழி வாழ்ந்திட நம்மை அழைத்தார்...
அகிலத்தின் பெருமைகளை தினம் விதைத்தார்...

திருக்குறள் நெறியில் வாழ்வைக் கண்டார்...
திக்கற்ற மக்களுக்கு தோழனாக நின்றார்...

( *பேரன்பு பெருக்கெடுத்த பெரியார்*...)

*தொடுப்பு* : 1

சமத்துவ வாழ்வே இவரின் சாதனை...
சரித்திரம் போற்றிடும் இவர் போதனை...

மனிதநேய மார்க்கமே இவர் மார்க்கம்...
மாற்றம் கொண்ட சமூகமே பெருநோக்கம்...

தமிழினத்தில் பூத்திட்ட பேரன்பிவர்...
தலைமுறைக்கும் ஏற்ற பெருவாழ்விவர்...

உலகம் உய்யும் வழிகளை உணர்ந்துரைத்தவர்...
கலகமில்லா வாழ்க்கை நெறியை காணத்துடித்தவர்...

குன்றக்குடியை உலகின் வழியாய் உயர்த்தினார்...
குவலயத்தின் பெருமையாய் அன்பை நிறுத்தினார்...

தேசிய விருதே இவரால் பெருமை அடைந்தது...
தேசம்கடந்த சிந்தனையே இவரில் வாழ்ந்தது...

( *பேரன்பு பெருக்கெடுத்த பெரியார்*...)

*தொடுப்பு* : 2

சைவநெறியின் பெருமையை உலகுக்கு உரைத்தார்...
சமரசமற்ற பாதைவழியே வாழ்ந்து சிரித்தார்...

அருள்நெறித் திருக்கூட்டம் இவரின் சிந்தனை...
ஆனந்தப் பேரோட்டம் அடையப் பெருந்துணை...

தெய்வீகப் பேரவையின் திருப்பணிகள் போற்றும்...
திசையெங்கும் இவராற்றிய சாதனைகளோ சாற்றும்...

தமிழர்களின் பண்பாட்டுத் தூதுவர் இவரே...
தமிழின் பெருமை சாற்றிய பேரோதுவார் இவரே...

குன்றக்குடி கிராமத்திட்டம் குவலயம் போற்றும்...
குடிமக்கள் வாழ்வுயர வழியென்றும் காட்டும்...

விழிப்பை விதைக்க மக்கள் சிந்தனை இதழைக் கண்டார்...
வியக்க வைக்கும் வாழ்க்கை வாழ வழியாய் நின்றார்...
( *பேரன்பு பெருக்கெடுத்த பெரியார்*...)

பேரவையின் 38 ஆவது விழா
சிறக்க எமது வாழ்த்துகள்



சரத் கார்த்திக் பாலச்சந்திரன்
குடும்பத்தினர், TX



# இசைத்தமிழ் உரையும் கலந்துரையாடலும்



பாபு விநாயகம்
வெர்ஜினியா

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்"

சங்க இலக்கியங்களில் தொடங்கி இன்று வரை நம் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இசைத்தமிழின் குறிப்புகளை எடுத்துரைத்து, நல்விளக்கமளித்து அதன் பாடல்களை இசையுடன் பாடி மகிழ்விக்கும் வண்ணம் இவ்வாண்டு "இசைத்தமிழ் உரையும் கலந்துரையாடலும்" என்ற கருத்தில் அனைவருக்கும் வினாக்களைக் கேட்க வாய்ப்பளித்து, ஒரு தொடர் நிகழ்வாக இதுவரை மூன்று நிகழ்ச்சிகளை பேரவையின் தமிழிசைக் குழு நடத்தியுள்ளது.

முதல் நிகழ்வில் (பிப்ரவரி 2025) சிறப்பு விருந்திநர் ஐயா அரிமளம் பத்மநாபன் அவர்கள், தமிழிசை குறித்த பல்வேறு நுணுக்கங்களையும் தமிழ் இலக்கியத் தகவல் களையும் வரலாற்றுப் பொருண்மியங்களையும் சுவைபடவும் உணர்வுறவும் அடுக்கியதோடு மட்டுமல்லாமல், பாடல்களைப் பாடியும் கூட்டத்திற்கு அழகூட்டினார். வினா விடை நேரத்தின் போதும், அரிய தகவல்களையெல்லாம் சொல்லி, வரலாற்றுச் சிறப்பினை ஈட்டிக் கொடுத்தார்.

இரண்டாம் நிகழ்வில் (மார்ச் 22, 2025) தமிழிசைச் செம்மல் முனைவர் சண்முக. செல்வகணபதி அவர்கள் 'தொல்லிசையும் தொடர்ச்சியும்' எனும் தலைப்பில் தொல்காப்பியத்தில் தொடங்கி பல இலக்கியக் கூறுகளை விளக்கி, பாடல்களைப் பண்ணுடன் பாடி, அப் பண்களைக் குறித்து விளக்கம் அளித்து அனைவரையும் மெய் சிலிர்க்கச் செய்தார்.

மூன்றாம் நிகழ்வில் (ஏப்பிரல் 26, 2025) அருட்சகோதரி முனைவர் மார்கரெட் பாஸ்டின் அவர்கள் தமிழர்களின் அடையாளமான யாழ் இசைக் கருவியினைப்பற்றியும், சுவாமி விபுலானந்தரின் "யாழ் நூல்" பற்றிய முழு விளக்கத்தையும் நம் கண்முன் கொண்டுவந்து எடுத்துரைத்தார். அவர்தம் முனைவர் பட்டத்தின் ஆய்வும் யாழ் நூல் சார்ந்ததே என்பதால் மிகச் சிறந்த விளக்கமளித்து அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இதுவரை நடந்தேறிய மூன்று நிகழ்வுகளும் இன்னும் சற்று நேரம் நிகழ்ந்தால் நன்றாக இருக்குமே என்றும் அவற்றைப் பன்தொடர் நிகழ்வாகவும் மீண்டும் அந்த இசை அறிஞர்களை அழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யவும் வேண்டி பல செய்திகள் வந்தன. அதைத் தொடர்ந்து இரண்டு இசைத்தமிழ் அறிஞர்களை நம் பேரவை விழாவிற்கு அழைத்து உரையாற்றத் திட்டமிட்டிருக்கிறோம். நமது தமிழ் சங்கங்களுக்கும் அவர்களை அழைத்து நிகழ்ச்சிகளை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு உண்டு என்பதையும் அறிக.



தில்லைவிடங்கன் மாரிமுத்தாபிள்ளை | சீர்காழி அருணாசலக் கவிராயர் | சீர்காழி முத்துத்தாண்டவர்

# MAHA

Call: 708-571-9806

info@mahabehavioralhealth.com

## Behavioral Health Services

**Engage - Empower - Excel**



### Applied Behavior Analysis (ABA) Services (In Home)

- ✓ Customized ABA services for Autism
- ✓ Engage your child to acquire skills
- ✓ Evidence based approach



### Academic Consulting

- ✓ Collaborate with school team
- ✓ Create and execute treatment plans
- ✓ Advocate for individual needs



### Parent Empowerment

- ✓ Empowering parents for client's success
- ✓ Adaptation of behavior principles
- ✓ Skills generalization training



### Community Engagement Training

- ✓ Work on social skills in real world context
- ✓ Evidence supported trainings for neurodivergent learners

We are IN-NETWORK with most providers :

BlueCross BlueShield of Illinois

meridian

aetna

Magellan HEALTH

cigna healthcare

ComPsych®



Harini Chandramouli MS BCBA LBA
Founder and Clinical Director




# 37ஆவது பேரவைத் தமிழ் விழா 2024

தன்னேரில்லா இனிய தமிழ் மொழியை தாய்மொழியாய் கொண்ட தமிழினத்திற்காக பேரவையின் 37வது தமிழ் விழா வரலாற்று நகரம், சிங்காரச் சென்னையோடு தமக்கை உறவு நகரம் (Chennai sister city), டெக்சாஸ் மாநிலத்தின் சான் ஆண்டோனியோவில் 2024ஆம் ஆண்டு ஜூலை 4 முதல் ஜூலை 6 தேதிகளில் 'சமத்துவம் தமிழரின் தனித்துவம்' என்ற கருப்பொருளோடு செவ்வனே நடந்தேறியது. தமிழரின் தாய்மடியாம் கீழடி, திருவள்ளுவர் கூடம், சான் ஆண்டோனியோ









வரலாற்றுச் சின்னம் சமத்துவ தூண்கள், அலமோ போர் வரலாற்றுச் சின்னம், கிராமத்துக் கொல்லைப்புறத்துக் கேணி, மனுநீதி சோழனின் மணி, தமிழரின் கைத்தொழில் யாதெனத் தலைமுறை தாண்டி விளக்கிடக் கைத்தறி, பாரம்பரிய உடைகள் விற்பனை நிலையங்கள், பல்வேறு வணிக வியாபாரக் கூடங்கள், தமிழ் பண்பாடு மிளிரும் வரவேற்பு வளையங்கள் என வசந்த கால வாயிலில் நின்று வரவேற்கும் சாரல் போல வரவேற்பு வாயில்.



**செல்வகிரி**
டெக்சாஸ்



**கார்த்திகேயன் சுப்பா**
டெக்சாஸ்

பேரவையின் தலைவர் முனைவர் பாலா சுவாமிநாதன், செயலாளர் திரு. கிங்ஸ்லி சாமுவேல், துணைத்தலைவர் திரு. விஜய் மணிவேல் மற்றும் நிர்வாக குழுக் உறுப்பினர்களோடு சான் ஆண்டோனியோ தமிழ்ச்சங்கம் நடத்திய பேரவை விழாவின் தலைமைக் குழு பின்வருமாறு: திரு. செல்வகிரி அருணகிரி ஒருங்கிணைப்பாளர், திரு. கார்த்திகேயன் சுப்பா இணை ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப் பாளர்கள் திரு. இராஜகுரு பரமசாமி, திரு. வாசுதேவன் நடராஜன், திருமதி ரமணி ரகுநாத்.

**முதல் நாள் – ஜூலை 4:**

முதல் நாள் நிகழ்வுகள் குத்து விளக்கு ஏற்றத்துடன் இனிதே துவங்கியது. திரு. கௌதம் ராஜன் அவர்கள்






FiTEN உலகத் தமிழ் தொழில் முனைவோர் மாநாட்டை ஒருங்கிணைத்தார்.. இந்த மாநாடு மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பழனிவேல் தியாகராஜன் தகவல் தொழில்நுட்பம், திரு. மா.சுப்பிரமணியன், சுகாதாரத் துறை, திரு. இலட்சுமி நாராயணன் (புதுச்சேரி) மற்றும் திட்டக்குழு துணைத் தலைவர் திரு. ஜெயரஞ்சன் ஆகியோரின் சிறப்புரையோடு இனிதே தொடங்கியது. சான் ஆண்டோனியோவின் கௌரவ மேயர் திரு. ரான் நிரேன்பர்க் அவர்களும், சிங்காரச் சென்னையின் மேயர் திருமதி.பிரியா அவர்களும் கலந்து கொண்ட நிகழ்வில் கலாச்சார மற்றும் தூதரகம், வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை வலுப்படுத்தவும் புரிந்துணர்வு விவாதம் நடைபெற்றது.

மாலைப் பொழுதில் நடைபெற்ற கலை மற்றும், இசை நிகழ்ச்சிகளும், வெள்ளித்திரை பிரபல நட்சத்திரங்கள் நடிகர் சூரி , நடிகர் சிவா , நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் , இயக்குனர் வெங்கட் பிரபு மற்றும் பல தமிழ்த் திரையுலகத்து பிரபலங்கள் பங்கேற்ற நட்சத்திர இரவு நிகழ்ச்சி காண்போரைக் கவர்ந்திழுத்தது.

### இரண்டாம் நாள் – ஜூலை 5:

கலைமாமணி T.L. மகாராஜன் அவர்களின் தமிழிசை நிகழ்ச்சியில் சமத்துவம் தமிழரின் தனித்துவம் என்ற கருப்பொருளை மையமாக கொண்டு அவர் எழுதி இசை அமைத்துப் பாடிய பாடல் அனைவரும் மகிழ்ந்து கேட்கும் படியும் சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் இருந்தது. சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம், பாடல், ஆடல், குறும்படம், பேச்சு, தமிழ்த் தேனீ,குறள் தேனீ என அனைத்துப்போட்டிகளுக்குமான இறுதிக்கட்ட சுற்றுக்கள் இலக்கிய ஆளுமைகளின் முன்னிலையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றன.




©KarthiS

பறை ஆசான்கள் திரு. மணி மாறன் மற்றும் முனைவர் திருமதி அருள் செல்வி அவர்களின் தலைமையில் பறையிசையுடன் சிலம்பம், களரி ஆகிய தற்காப்புக் கலைகளும் மேடையில் நிகழ்த்தப்பட்டன. சவுண்டு மணி என்று அழைக்கப்படும் திரு. மணிகண்டன் அவர்களின் இசை நிகழ்ச்சி மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது .




வட அமெரிக்க எழுத்தாளர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த 'வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள்' இணைய அமர்வில் வட அமெரிக்க எழுத்தாளர்கள் கவிஞர் அறிவுமதி, எழுத்தாளர் அழகியபெரியவன், எழுத்தாளர் வெண்ணிலா, இசையறிஞர் ஆத்மநாதன், முனைவர் இளங்கோவன் மற்றும் இசைக்குயில் திருமிகு ஜோதிகலை ஆகியோர் கலந்து கொண்டனர். எழுச்சிமிகு உரை நிகழ்த்திய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆளூர் ஷாநவாஸ் அவர்களின் உரையானாலும் சரி, அனல் பறந்த உணர்வான உரை ஒன்று நிகழ்த்திய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களின் உரையானாலும் சரி, திரு. ஆர்.பாலகிருஷ்ணன் (I.A.S) அவர்களின் பண்பாட்டின் பயணத்தின் பண்பான உரையானாலும் சரி அனைத்து ஆளுமைகளின் உரைகளும் காணக் கிடைக்கா அற்புத நிகழ்வு.

விழாவுக்கு வந்திருந்த அனைத்து தமிழ் சொந்தங்களையும் தன்னுடைய ஸ்டாண்டப் காமெடி மூலம் சிரித்து மகிழ வைத்தார் நகைச்சுவை கலைஞர் திரு. ஜெகன் கிருஷ்ணன் அவர்கள். நடிகர் சூரி அவர்கள் தான் கடந்து வந்த பாதையின் வலியையும், தற்போது அடைந்திருக்கும் வெற்றியையும் பற்றி தனக்கே உரிய நகைச்சுவையோடு பேசியது பார்வையாளர்களின் கண்களில் கண்ணீரையும் முகத்தில் சிரிப்பையும் வரவழைத்தது. விஜய் டிவி புகழ் அருணா அகிலா சகோதரிகளின் இனிய பாடல் நிகழ்வுகளுடன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது.

### மூன்றாம் நாள் – ஜூலை 6:

முனைவர் அருட்செல்வியின் வழிகாட்டுதலோடு சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தின் பறை இசைப் பயிற்சியாளர்களும், கலைஞர்களும் இணைந்து வழங்கிய 'பறையும் பரதமும்' பிற தமிழ்ச் சங்கங்களின் கலை நிகழ்ச்சிள் வினாடி வினா நிகழ்ச்சி என சிறப்பாக நடந்தது. தமிழ்ச் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்வண்ணம்பெரும்பணி ஆற்றியவர்களுக்குப் பேரவை ஆண்டுதோறும் 'உலகத் தமிழ் பீட விருது' வழங்கி கௌரவிக்கிறது. அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான உலக தமிழ் பீட விருதைப் பாவலர் அறிவுமதி அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும் தமிழர் நலன் சார்ந்து இயங்கி முனைப்புடன் போராடிய திருமிகு அற்புதம் அம்மாள் அவர்களுக்குப் பேரவை 'மாணிக்கப் பரல்' விருது வழங்கி கௌரவித்தது. பின்னர் வட அமெரிக்கா அளவில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்து தமிழர்களுக்கு முன்னோடியாகத் திகழும் சான்றோர்களுக்கு அமெரிக்கத் தமிழ் முன்னோடி விருது *(Tamil American Pioneer Award)* வழங்கி கவுரவிக்கப்பட்டது

பேரவையின் அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ்ச் சங்கங்களின் சங்கமம் அணிவகுப்பு சான் ஆண்டோனியோ நதியில் படகு சவாரியாகவும், பின்பு நதியையொட்டி அமைந்த நடைபாதை வழியாக விழா அரங்கிற்குள் நுழைந்தது தனி அழகு! விழா சிறப்புற ஓய்வறியா உழைப்பை நல்கிய தன்னார்வலர்கள் அனைவரையும் மேடையேற்றிச் சிறப்பித்தது அழகோ அழகு! விஜய் தொலைக்காட்சிப் புகழ் இசைக் கலைஞர்கள் கார்த்திக் தேவராஜ், மணி, வெற்றிவேல் மற்றும் பாடகர் பிரதீப் குமார் தங்கள் குழுவினருடன் இணைந்து நடத்திய மாபெரும் இசை நிகழ்ச்சி நள்ளிரவு தாண்டியும் இசை விருந்து படைத்தது.

பேரவை விழாவினைச் சிறப்புற நடத்தி முடிக்க உழைத்திட்ட அனைத்து உறவுகளுக்கும் மகிழ்வோடும் நெகிழ்வோடும் சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நன்றி நவில்கிறோம் .

## பேரவையின் 38ஆவது விழா
## சிறக்க எமது வாழ்த்துகள்



# கால்டுவெல் வேள்நம்பி
## குடும்பத்தினர்

# Providing essential cancer care, so no one battles alone

achaani

- INVISIBLE HANDS, VISIBLE IMPACT -

**www.achaani.org**

**For support with cancer-related needs, please reach out. We can assist with :**

- **Navigating a cancer situation for loved ones.**
- **Connecting with cancer care support services in Tamil Nadu, India.**
- **Accessing free or subsidized treatment for financially needy patients in Tamil Nadu, India.**

# பேரவையின் மேனாள் தலைவர்கள்



**2022-2024**
திருமிகு பாலா சுவாமிநாதன்



**2020-2022**
திருமிகு கால்டுவெல் வேள்நம்பி



**2018-2020**
திருமிகு சுந்தர் குப்புசாமி



**2016-2018**
திருமிகு செந்தாமரை பிரபாகர்



**2014-2016**
திருமிகு நாஞ்சில் பீற்றர்



**2012-2014**
திருமிகு தண்டபாணி குப்புசாமி



**2011-2012**
திருமிகு பழனி சுந்தரம்



**2009-2010**
திருமிகு முத்துவேல் செல்லையா



**2007-2008**
திருமிகு தில்லைக்குமரன்



**2006**
திருமிகு இரத்தினம்



**2005**
திருமிகு தேவ்



**2003-2004**
திருமிகு சிவராமன்



**2001-2002**
திருமிகு பாபு

திருமிகு ராஜா







**1999-2000**

திருமிகு ராஜா ராஜசேகரன்

**1998**

திருமிகு அரசு செல்லையா

**1997**

திருமிகு கிருஷ்ணன்

**1996**

திருமிகு சாக்ரடீஸ் நாச்சிமுத்து









**1995**

திருமிகு கோபாலசாமி

**1994**

திருமிகு அழகு கணேசன்

**1993**

திருமிகு தணி குமார் சேரன்

**1992**

திருமிகு பால் பாண்டியன்



திருமிகு தயாநிதி





**1991**

திருமிகு சோம இளங்கோவன்

**1990**

திருமிகு தயாநிதி

**1989**

திருமிகு விக்னராஜா

**1988**

திருமிகு முத்தரசன்



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
FEDERATION OF TAMIL SANGAMS OF NORTH AMERICA (FeTNA)
A Registered Non-Profit, Tax exempt 501(C)(3) Organization
பேரவையின் அன்புடை நெஞ்சம்
FeTNA Loving Hearts
A Matrimonial Service offered by FeTNA
அமெரிக்கா, கனடா வாழ் தமிழர் தங்கள் இளையோருக்கு
உற்ற துணையைத் தேடிடும் முயற்சிக்கு உதவிடப் பேரவையின் முன்னெடுப்பு!
தமிழ்க் குடும்பங்களுக்கு அரியதொரு வாய்ப்பு!
FeTNA Loving Hearts is a service offered by FeTNA to help
Tamil Families & Tamil Youth living in the USA and CANADA to
find their matching life partners.
REGISTER for FREE to VIEW PROFILES
மின்னஞ்சல் தொடர்புக்கு: anbudainenjam@fetna.org
இணையதளம்: https://fetna-anbudainenjam.org | www.fetna.org

# பேரவை விழா 2025 குழுவினர்

**வழிநடத்தல் குழு:**
விஜய் மணிவேல் (தலைவர்)
தணி குமார் சேரன் (இணைத் தலைவர்)
பழனி சுந்தரம்
எழிலன் இராமராஜன்
மீனா இளஞ்செயன்
பாரதி முருகேசன்
எம்.என்.கிருஷ்ணன்
முத்துவேல் செல்லையா
பாரதி பாண்டி
மோகன் வைரக்கண்ணு

**விருந்தோம்பல் குழு:**
அல்லி தாஸ் (தலைவர்)
ஆனந்தி ஜெயக்குமார்
(இணைத் தலைவர்)
கார்த்திக் சீனிவாசன்
(இணைத் தலைவர்)
றிச்சேட் இருதயநாதன்
தேவப்ரியா தர்மமூர்த்தி
பெலிற்றா றெமி சுதர்சன்
தேவி சொர்ணா
மாறி லியோனி பத்மநாதன்
சுனிதா இராமநாதன்
ராம் சரவணன்
ரமேஷ்குமார் தண்டபானி
சுகன்யா சுமித்திரன்
இரமேஷ் திருஞானம்
ஆண்டன் நிவேத்
ஷர்விகா குமார்

**இணை அமர்வுக் குழு:**
குரு குருபரன் (தலைவர்)
அறிவுமணி இராமலிங்கம்
(இணைத் தலைவர்)
இளங்கோவன் கோபால்
சரண் சரவணன்
சுபாஷ் சந்திரன் பழனி

**பதிவுக் குழு:**
முருகையா முரளீதரன் (தலைவர்)
முருகேசன் தங்கராசு
(இணைத் தலைவர்)
உமா சேகர் (இணைத் தலைவர்)
மஞ்சுளா இராமராஜு
சரவணன் கிருஷ்ணன்
சுதா கனகராஜன்
ஆனந்தி கலை
கவிதா குமார்
காயத்ரி
சுப்பிரமணி
ராதா
நான்சி
கோதை
ஓவியா
அசிதா நாராயணன்
அதிதி நாராயணன்
ஹர்ஷினி தண்டபாணி
ரூபனா இளங்கோ

**மருத்துவக் குழு:**
Dr. சின்னராஜா இரகுராஜ் (தலைவர்)
Dr. சுஜாதா சஜிவன் (இணைத் தலைவர்)
Dr. செந்தில் சேரன்
Dr. சுஜந்தி இராஜராம்
Dr. வரகுணன் மகாதேவன்
Dr. பைரவி சேஷாத்ரி
Dr. நவனந்தன் கிருஷ்ணன்
Dr. திருநாவுக்கரசு மாணிக்கம்

**போக்குவரத்துக் குழு:**
அறிவுடைநம்பி துரைசாமி (தலைவர்)
செந்தில் கிருஷ்ணமூர்த்தி
(இணைத் தலைவர்)
வெற்றிவேலு செங்கமலை
ஆண்டன் நிவேத்
மணிப்பிரகாசம் குலோத்துங்கன்
அருணகிரி அம்ரோயிஸ்

**தமிழ் வினாடி வினா குழு:**
கோதை ஜெயராஜ் (தலைவர்)
சுஜாதா மோகன் (இணைத் தலைவர்)
நாஞ்சில் பீட்டர்
மணிவாசகம் பழமைபேசி
கொழுந்தவேல் இராமசாமி
மணிமேகலை இராமமூர்த்தி
இளங்கோவன் தங்கவேலு
நளினி சுந்தரராஜன்
வித்யா சுரகண்டர்

**கணக்கியல் குழு:**
வள்ளிக்கண்ணன் மருதப்பன்
சுபா சுந்தரலிங்கம்
சாருலதா குருபரன்

**மலர்க் குழு:**
தேவகி செல்வன் (தலைவர்)
அருள் வீரப்பன் (இணைத் தலைவர்)
பூப்பாண்டி முத்து
சுமித்ரா இராசவேலு
ஆரோக்கிய அந்தோணி ராஜ்
அனிதாராஜ் சரவணன்
செல்வா ராமநாதன்

**பரிசுப் பொருள் குழு:**
ஜான்சிராணி பிரபாகரன் (தலைவர்)
வள்ளிகண்ணன் மருதப்பன்
கார்த்திகேயன் பெருமாள்
மணிவாசகம் பழமைபேசி

**மரபுக்கலை:**
கார்த்திகா ஜெகதீஸ்வரன் (தலைவர்)

சுந்தரமூர்த்தி ஆதியாகவேல்
(இணைத் தலைவர்)
செந்தில்குமார் கோபாலகிருஷ்ணன்
கோதை ஜெயராஜ்
மது அன்பு
அரிமான் அன்பு
சதீஸ் குமார் சேதுராமன்
ப்ரவீணா வரதராஜன்
கார்த்திக் சீனிவாசன்
தேவ் விக்டோரியன்
வளர்மதி மாணிக்கம்
பிரவீன் அன்பழகன்
ஜான் பிரிட்டோ
நந்தினி சாந்தாராம்
புவனேஸ்வரி சரவணன்
உத்தமிஸ்ரீமுத்தையா

**சந்தைப்படுத்தல்/சாவடி/விளம்பரம் குழு:**

நந்தகுமார் பாலசுப்ரமணியன்
(சந்தைப்படுத்தல் தலைவர்)
வாசு சண்முகம்
(சந்தைப்படுத்தல் துணைத் தலைவர்)
பாலாஜி கோபால்சாமி (சாவடி தலைவர்)
அனந்தராமன் சேதுராமன்
(சாவடி துணைத் தலைவர்)
இராஜேந்திர பாபு மணிமொழி
(விளம்பரம் தலைவர்)
ராஜாராம் வெங்கடசாமி -
விளம்பரம் துணைத் தலைவர்)
கார்த்திக் காவேரிசெல்வன்
ஸ்வேதா ரமணி
சந்திரசேகரா காயாம்பூ
விக்னேஷ் குமரன்
சரவணக்கண்ணன் நாராயணசாமி
தாமரைச்செல்வி சிவசண்முகம்
குமார் நாகராஜன்
கோபி இராமசாமி
பிரபு அன்பழகன்
தில்லை நடராஜன் கார்த்திகேயன்

**சர்வதேசத் திரைப்பட விழாக் குழு:**

பரத் சோமசுந்தரம் (தலைவர்)
வைஷாலி பாஸ்கரன்
(இணைத் தலைவர்)
நரேஷ் குமார்
ஸ்வர்ணவேல் ஈஸ்வரன் பிள்ளை
சௌந்தர் ஜெயபால்
திருமூர்த்தி ரங்கநாதன்
மீனாட்சி சுந்தரம்
